பேரழிவுப் பகுதி 9

புரளியால் வந்த அவலம் 11

மீண்டும் எம்.ஜீ.ஆர் 8

மீண்டும் நுவான் 20



விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 42

வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 22 சனிக்கிழமை (07/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# அரசு பொறுப்புக் கூறத் தவறினால் சர்வதேச விசாரணைப் பொறிமுறை



## அமெரிக்க உதவிச் செயலர் கூறுகிறார்

நியூயோர்க், ஜனவரி 7

போரின்போது இடம்பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புக் கூறும் விவகாரத்தில் இலங்கைஅரசு தனது கடமையை நிறைவேற்றாத அல்லது நிறைவேற்ற விரும்பாத சூழ்நிலையில் அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை உருவாக்க முடியும். இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணை ஒன்று அவசியம் என்பதை அமெரிக்கா ஏற்கனவே தெரிவித்துவிட்டது.

இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனிதஉரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச்செயலர் மைக்கல் எச்.போஸ்னர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை உருவாக்கும் விடயத்தில் தலையிடக்கோரும் மனு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு இணையத்தளம் மூலம் அனுப்பப்பட்டது. வெள்ளை மாளிகையின் இணையத்தளம் மூலம் இந்தக்

23

## இந்திய - இலங்கை கடற்படையினர் நடுக்கடலில் நடத்தினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

இந்திய - இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினம் நடுக்கடலில் இந்தியக் கரையோரக் காவல்படைக் கப்பலில் சந்தித்துப் பேசினர்.

இரு நாடுகளின் கடற்படைகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும் வருடாந்தச் சந்திப்பின் ஒரு பகுதியாகவே இரு நாட்டுக்கடற்படை அதிகாரிகளும் கப்பலில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள் என்று சென்னையில் உள்ள இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரு நாட்டு மீனவர்களது பிரச்சினை பற்றியும் கடற்படைகள் இடையேயான உறவைப் பலப்படுத்துவது பற்றியும் சந்திப்பில் ஆராயப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

23

## காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் வழங்கவே கூடாது

### கூப்பாடு போடுகிறது தே.சு.முன்னணி

கொழும்பு, ஜன.7

மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்ற எமது நிலைப்பாட்டில் இறுதிவரை உறுதியாக இருப்போம் என அரசின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி ஆணித்தரமாக அறிவித்துள்ளது.

மாகாணசபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் 'உதய னு'க்கு கருத்து வெளியிடும் போதே தே.சு.முவின் அரசியல்குழு உறுப்பினரும் முன்னாள் பிரதியமைச்சருமான பியசிறி விஜேநாயக்க மேற்கண்ட

23

## கிருஷ்ணாவை எதிர்கொள்ள அரசும் தயார்

கொழும்பு, ஜன.7

இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா, அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்பும் பட்சத்தில் அதற்குத் தக்கவகையில் பதிலளிப்பதற்குத் தயாராகவே உள்ளோம் என இலங்கை அரசு நேற்று அறிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இலங்கை

23

## ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் பலப்படுகிறது அமெரிக்கப் படை

கொழும்பு, ஜன.7

இந்தியாவுடனான சிறப்பான உறவுகளுடன் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்கப் படைகளின் பிரசன்னம் வலுப்படுத்தப்படும். இதன் மூலம் புதிய உலக ஒழுங்குக்கிணங்க அமெரிக்காவின் தலைமைத்துவம் மேலும் அதிகரிக்கப்படும் எனப் புதிய பாதுகாப்பு தந்திரோபாய ஆவணம் குறிப்பிடுகிறது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இராணுவம் சிறியதாக இருந்தாலும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அதன் பிரசன்னம் வலிமை படைத்ததாக அமையும். மாறுதலடையும் உலகில் அமெரிக்கத் தலைமைத்துவத்தைப் பலப்படுத்த இது எங்களின் திரட்சியான அணுகுமுறையாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எங்களின் திரட்சியான

23

## 'ரைபஸ்' காய்ச்சல் குடாநாட்டில் திடீர் பரவல்

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்.குடாநாட்டில் பல பகுதிகளிலும் 'தைபஸ்' எனப்படும் ஒட்டுண்ணிக் காய்ச்சலின் தாக்கம் வேகமாகப் பரவி வருகின்றது. இதனால் கடந்த வருடம் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 266 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் மட்டும் 101 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

யாழ். குடாநாட்டில் 'தைபஸ்' நோயின் தாக்கம்

23

### வன்னியிலும் ஒருவகைக் காய்ச்சல் இதுவரையில் 6 பேர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜன.7

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு வார காலமாகப் பரவிவரும் ஒரு வகைக் காய்ச்சலினால் நேற்று வரை 6 பேர் மரணமாகியுள்ளனர். இந்தக் காய்ச்சல் சகல வயதினரையும் தாக்குவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி உதயநகரைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சத்தியசீலன் (வயது-45) என்பவர் தொடர்ந்து இரண்டு நாள்களாக காய்ச்சலினால் அவதிப்பட்டு நேற்று மரணமானார்.

இவருடன் இதுவரை 6 பேர் இந்தக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளனர். ஒரு வகை சுவாச

23

## 30 இலட்சமாகின தெருநாய்கள் மலடாக்க வருடம் ரூ.100 கோடி

நாட்டில் தெரு நாய்களின் எண்ணிக்கை 30 லட்சத்தைத் தாண்டியுள் ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொள்கை ரீதியாக நாய்களைக் கொல்லாது அவற்றின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சு கூறியுள்ளது.

இதற்காக வருடாந்தம் 100 கோடி ரூபா செலவிடப்படுகின்றது. கட்டாக்காலி நாய்களின் கடிக்குள்ளாகும் இரண்டாயிரம் சம்பவங்கள் நாளாந்தம் பதிவாகின்றன என்றும் அமைச்சு சுட்டிக் காட்டுகிறது.

எனினும், கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கையைக் குறைக்க இதுவரை மேற்கொள்ளப்பட்ட எவ்வித நடவடிக்கைகளும் வெற்றியளிக்கவில்லையெனவும் அதற்கான மாற்று நடவடிக்கைக்கு தேவை ஏற்பட்டுள்ளது எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

### மீனவர்கள் விடுதலை

இலங்கை கடற்படையினரால் சிறைபிடித்து செல்லப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேர் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு இலங்கைக் கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

### மீனவர்கள் போராட்டம்

இலங்கை சிறையில் இருக்கும் 13 மீனவர்களை விடுவிக்கக்கோரி, இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் நேற்று தொடக்கம் காலவரையற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். கடந்த நவம்பர் 28 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து சென்ற போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் 13 பேரை விடுவிக்கக்கோரியே இராமேஸ்வரத்தில் காலவரையற்ற உண்ணாவிரதம் ஆரம்பமாகியுள்ளது.

### தமிழகத்தில் 8 பேர் கைது

சட்டவிரோதமாகப் படகு மூலம் நேற்று தமிழகம் சென்ற இலங்கைத் தமிழர்கள் எட்டுப் பேரை இந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர். தமிழகம், புதுக்கோட்டை கரையோரத்தைச் சென்றடைந்த இவர்கள் கடவுச்சீட்டுகள் மற்றும் செல்லுபடியான விஸா இல்லாத காரணத்தால் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### ஐ.நாவிடம் முறையீடு

மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்களான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமற்போனமை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையிடம் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது. அந்த இயக்கத்தில் உறுப்பினர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் உறவினர்களால் இந்த முறைப்பாடு ஐ.நாவின் கொழும்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### சிப்பாய் சாவு


படைச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத்தற்கொலை செய்தார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது சிப்பாயே தற்கொலை செய்தார்.

### சிகிச்சையால் பயனில்லை

கல்வியங்காட்டிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், மோட்டார் சைக்கிள்கள் திடீரென வெடித்துச் சிதறிய போது காயமடைந்தவர்களில் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். கடந்த மாதம் 26 ஆம் திகதி நடந்த சம்பவத்தில் படுகாயமடைந்த கைதடி நாவற்குழியைச் சேர்ந்த கந்தையா மனோகரன் (வயது 62) என்பவரே 11நாள்களின் பின்னர் உயிரிழந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாத்துறை அதீத வளர்ச்சி டொலராகக் கொட்டுகிறது பணம்



கொழும்பு, ஜன. 7
இலங்கைக்கு வருகை ரும் சுற்றுலாப் பயணிகளின் ண்ணிக்கை சடுதியாக அதி ரித்து வருகின்றது. கடந்த செம்பர் மாதத்தில் மிக அதி ளவான பயணிகள் வருகை திவு செய்யப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்த பின் ர் இலங்கைக்கு வரும் சுற் லாப் பயணிகளின் எண் ரிக்கை கடந்த வருடங்களில் கிறியிருந்தது. டிசெம்பர் ாதத்தில் மட்டும் 97,517 சுற் லாப் பயணிகள் வந்திருக் ன்றனர் என்று அதிகாரிகள் நற்று அறிவித்தனர்.

2010 டிசெம்பர் மாதம் வந்த யணிகளின் எண்ணிக்கையு ன் ஒப்பிடுகையில் கடந்த செம்பரில் 15.2 வீத பயணி ள் அதிகமாக வருகை தந்துள் னர். இவர்களில் அதிக எண் ரிக்கையிலானோர், தாராள ாகச் செலவிடும் ஐரோப்பி ப் பயணிகளாவர். கடந்த வரும் வம்பர் மாதம் 90,889 பயணி ள் வருகை தந்திருந்தனர்.

2010ஆம் ஆண்டுடன் ஒப் டுகையில் கடந்த வருடத் ல் சுற்றுலாப் பயணிகளின் ருகை 30.8 சதவீதத்தால் திகரித்துள்ளது என்கின்ற ர் அதிகாரிகள். 2010ஆம் ண்டு 654,476 சுற்றுலாப் யணிகள் வருகை தந்திருந்த லையில், 2011ஆம் ஆண்டு 855,975 பயணிகள் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாத்துறை மூலமாக வருடாந்தம் 2.75 பில்லியன் டொலர் வருமானத்தை 2016 ஆம் ஆண்டில் ஈட்ட அரசு திட்டமிட்டுள்ளது. அதேவேளை யில் வரும் ஆண்டுகளில் சுற் றுலாத்துறையில் 3 பில்லி யன் அமெரிக்க டொலர் முத லிடப்படும் என்று அரசு எதிர் பார்க்கின்றது.

கடந்த சில மாதங்களில் ஐரோப்பிய சுற்றுலாப் பயணி களின் வருகை சடுதியாக அதி கரித்துள்ளது. மொத்த சுற்று லாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 37 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது 2010 ஆம் ஆண்டில் 22.7 சதவீத மாக இருந்தது. தெற்காசிய சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கையும் 28 சதவீதத்தில் இருந்து 35.3 சதவீதமாக வளர்ச்சி கண்டுள்ளது.

கடந்த ஆண்டு 780, 000 சுற்றுலாப் பயணிகள் வருவார் கள் என்று சுற்றுலாத்துறை எதிர்பார்த்தது. அதைவிட மிக அதிகமானவர்கள் வருகை தந்துள்ளனர். இந்த ஆண்டில் 950,000 பேர் வருவார்கள் என்று கணக்குப்போட்டுள்ளது சுற் றுலாத்துறை. இதன் மூலம் ஒரு பில்லியன் டொலர் வருமானம் கிடைக்கும் எனவும் எதிர்பார்க் கப்படுகிறது. கடந்த ஆண்டு டன் ஒப்பிடுகையில் இது 20 சதவீத அதிகரிப்பாகும். (உ)

# முதலில் சுட்டது பாரதவே

## நீதிமன்றில் பொலிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஜன 7
நாடாளுமன்ற உறுப்பி னர் துமிந்தசில்வா மீது துப் பாக்கிச் சூடு நடத்தப்பட்ட முல்லேரியா சம்பவத்தை ஆரம்பித்து, முதலில் துப்பாக் கிச் சூட்டினை நடத்தியது, பாரத லக்ஸ்மன் குழுவினரே என ஆதாரத்துடன் உறுதிப் பட்டுள்ளதாக, இரகசிய பொலிஸ் பிரிவினர் இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மீண் டும் தெரிவித்துள்ளனர்.

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான விசேட அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் நேற்றுச் சமர்ப் பித்து விளக்கமளிக்கும்போது, இரகசிய பொலிஸ் பிரிவின் இணைப்பு அதிகாரி சான் அபேசேகர இதனைத் தெரி வித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பி னர் துமிந்தசில்வாவைச் சுட்ட தாக சந்தேகிக்கப்படும் பாரத லக்ஸ்மனின் பாதுகாப்பு அதி காரியாக கடமையாற்றிய அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவின் உறுப்பினர் ராஜ்புர காமினி என்பவர், துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண் டதாக 5 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த சாட்சியங்களில், பாரத லக்ஸ்மனின் வாகனச் சாரதியாக இருந்த லியனகே சமன் சாந்த என்பவரும் உள் ளடங்குகின்றமை விசேட அம்சமாகும். பாரத லக்ஸ் மனின் பாதுகாப்பு அதிகாரி யாக இருந்த ராஜ் புர காமினி, இந்த சம்பவத்தின் போது, துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டதாக தாம் கண்களால் கண்டதாக, பாரத லக்ஷமனின் வாகன சாரதியாக இருந்த லியனகே சமன் சாந்த பெரேரா சாட்சி வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பி னர் துமிந்தசில்வா மீது துப் பாக்கிச் சூடு நடத்தப்பட்ட முல்லேரியாச் சம்பவத்தை ஆரம்பித்து, முதலில் துப்பாக் கிச் சூட்டினை நடத்தியது, பாரத லக்ஸ்மன் குழுவினரே என இரகசியப் பொலிஸ் பிரிவினர் ஏற்கனவே மேல் நீதிமன்றத்தில் தெரிவித்தி ருந்தனர்.

தம்மை நோக்கி எதிர்தரப்பு துப்பாக்கிப் பிரயோகம் நடத் தும் போது, அதில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள் வதற்காக, பாதிக்கப்படுகின் றவர்கள் மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகள் தண் டனை சட்டத்தில் குறிப் பிடப்பட்டுள்ளதாக பிரபல சட்டத்தரணி தெரிவித்துள்ள னர். (த)

# சாரைப்பாம்புகளின் பெயர்கள் கொலைப் பட்டியலில் இல்லை

## வீரவன்ஸவுக்கு பதிலடி கொடுத்தார் பொன்சேகா

கொழும்பு, ஜன.7
எனது கொலைப்பட்டிய லில் புலிகளின் பெயர்கள் இருந்ததே தவிர, அமைச்சர் விமல் வீரவன்ஸ போன்ற சாரைப்பாம்புகளின் பெயர்கள் இருக்கவில்லை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகா விமலின் கூற்றுக்குப் பதிலடி கொடுத்துள்ளார்.

எனது மனைவி நான் சொல் வதையே செய்வார். ஆனால், விமலின் மனைவி எப்படிப்பட்ட வர் என எனக்குத் தெரியாது என் றும் பொன்சேகா கூறினார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ வழங்கிய செவ்வியில் சரத் பொன்சேகா ஜனாதிபதியாகி யிருந்தால், முதல் 24 மணித் தியாலங்களுக்குள் கொலைசெய் யப்படவேண்டியவர்களின் பட்டியலில் தமது பெயரும் உள் ளடக்கப்பட்டிருக்கும் என்றும், தமது கணவர் மீது அந்த அம்மையாருக்கு அவ்வளவு அக்கறையிருந்தால் கணவரை விடுதலை செய்யுமாறு ஜனா திபதியிடம் கோரலாம் தானே என்றும் கூறியிருக்கிறார்.

# உலகின் முதல் மரபணுக் குரங்கு

மரபணு மாற்றம் செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட உலகின் முதல் குரங்குகள் வெற்றிகரமாகப் பிறந்துள்ளன என்று அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

'ரீஸஸ்' வகையைச் சேர்ந்த 6 குரங்குகளின் கருக்களில் இருந்து உயிரணுக்களை ஒன்றாகச் சேர்த்து மரபணு கலப்பு செய்யப்பட்ட மூன்று குரங்குகளைத் தாம் உருவாக் கியுள்ளனர் என்று ஒரெகான் மாகாணத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஆண் குரங்குகள் மூன்றும் ஆரோக்கியத்துடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவ ஆராய்ச்சி களுக்குக் குரங்குகளைப் பயன்படுத்துவதில் மேலும் ஒரு படி முன்னேற்றத்தை இந்த ஆராய்ச்சி ஏற்படுத்தி உள்ளது என்றும் அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.



ஹெக்ஸ், ரோகூ, கைமெரோ என்று, மரபணு மாற்றப்பட்ட மூன்று குரங்குகளுக் குப் பெயரிடப்பட் டுள்ளது. இந்தியா வில மரங்களிலும் மலைகளிலும் அதி கம் காணப்படும் 'ரீஸஸ்' வகை குரங்கு கள் பலவற்றின் கருக் களை எடுத்து வெவ் வேறு குரங்குகளில் இருந்து பெறப்பட்ட வெவ்வேறு மரபணுக் களை ஒன்றாக ஒட்டி புதிய கருவை உரு வாக்கி, பின்னர் அவற்றைப் பெண் குரங்குகளின் கர்ப்பப் பையில் வெற்றிகரமாக வைத்தே இந்தக் குட்டிகளைப் பெற் றுள்ளனர் அறிவியலாளர்கள்.

உயிரணுக் கலப்பால் உருவான இந்தக் குரங்குகளை 'கைமெரா' என்று ஒரெகானில் உள்ள தேசிய குரங்குகள் ஆய்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

''கருக்களின் வளர்ச்சியில் வெவ்வேறு மரபணுக் களின் பங்கு என்ன என்பதை நாம் விளங்கிக்கொள்ள இந்த மரபணு மாற்றப்பட்ட குரங்குகள் பயன்படும். எச்.ஐ.வி. போன்ற மருந்துகளால் குணப்படுத்த முடியாத நோய் களுக்கு மருந்து கண்டுபிடிக்கும் நமது ஆராய்ச்சிகளிலும் இவை பயன்படும்'' என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின் றனர். (உ)

# முறையிட விசேட இலக்கம்

கொழும்பு, ஜன 7
பாடசாலைகளுக்கு பிள் ளைகளை அனுமதிக்கும் போது, பணம் பெற்றுக் கொள்வோர் தொடர்பாக அறி விப்பதற்கு விசேட தொலை பேசி இலக்க மொன்றை அறி முகப்படுத்த மேல் மாகாண முதலமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். மேல் மாகாணப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது இவ்வாறு பணம் பெற்றுக் கொள்வோர் தொடர்பாகத் தக வல்கள் கிடைத்துள்ளது என்று மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித் துள்ளார்.

அவ்வாறான சம்பவங் கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு மாகாண சபை யில் விசேட பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 0112-698410 அல்லது 075-922300 என்னும் தொலை பேசி இலக்கங்களுக்கு முறைப் பாடுகளை செய்ய முடியும்.

# கனடாவிலும்சுவட புலிகளின் முத்திரை

புலிகளினால் கோரப்பட்ட தமிழீழ வரைபடத்தை தாங் கிய தபால் முத்திரைகள் கனடா வில் பயன்படுத்தப்படு வதாக கனடாவின் ஒட்டோவாவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் கனடாவிற்கான இலங்கை ஐக்கிய தேசிய ஒன்றியம் குற் றம் சாட்டியுள்ளது.

# வடபகுதிக்கான ரயில் சேவைகளுக்கு 382 மில்லியன் அமெரிக்க டொலர்

கொழும்பு, ஜன.7
வடபகுதி ரயில் சேவை களை மறுசீரமைக்கும் திட் டத்திற்காக இந்திய அரசு நிதியுதவி வழங்க முன்வந் துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் யோசனையின் பிரகாரம் வடபகுதி ரயில் சேவைகளை மறுசீரமைப்ப தற்காக, சலுகைக் கடன் அடிப்படையில் சுமார் 382 மில்லியன் அமெரிக்க டொலர் களை வழங்குவதற்கு இந் திய அரசு இணங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடை பெற்ற அமைச்சரவை கூட் டத்தின் போது இது தொடர் பில் அறிவிக்கப்பட்டதாக அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பளையில் இருந்து காங் கேசன்துறை வரையான ரயில் மார்க்கத்தை மீள நிர் மாணித்தல், வடபகுதி ரயில் மார்க்கத்திற் கான சமிக்ஞைக் கட்டமைப்பை நிறு வுதல் போன்ற வேலைத் திட்டங் களுக்காக இந்த நிதி பயன் படுத்தப்படவுள்ளது.

அத்துடன் இரண்டு நாடு களுக்கும் இடையில் இணக் கம் காணப்பட்ட பரஸ்பர உடன் படிக்கைகளுக்காகப் பயன் படுத்தும் பொருட்டும், இந் திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கியுடன் இந்த சலுகைக் கடன் தொடர்பில் உடன் படிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளதாக மேலும் அறிவிக் கப்பட்டுள்ளது. (த)

# ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வலியுறுத்து

நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கை கூறும் பரிந்து ரைகளை இலங்கை அரசு உட னடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று சர்வமத பேரவை வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் சர்வமதப் பேரவை நடத்திய செய்தியாளர் மாநாட் டில் கலந்துகொண்ட மதத் தலைவர்களே இவ்வாறு வலி யுறுத்தினர். இந்நிலையில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

> இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு அனைத்து மக்களும் உணரக் கூடிய மற்றும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசி யல் தீர்வுத் திட்டம் ஒன்றை இலங்கை அரசு விரைவாக முன்வைக்க வேண்டும். நாட் டில் போர் முடிந்து விட்டாலும் போருக்கான காரணங்கள் இன்னும் உள்ளன. அவற்றை விரைவாகத் தீர்த்து வைக்க வேண்டும்.

அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கி 17 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நட வடிக்கை எடுக்க வேண்டும்.

18ஆவது திருத்தச் சட் டம் கொண்டு வரப்பட்டதன் பின்னர், ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை அற்றுப் போய் விட்டது என்று சர்வ மதப் பேரவையின் பிரதிநிதி கள் தெரிவித்தனர்.

இந்தச் செய்தியாளர் சந்திப் பில் பௌத்த, இந்து, இஸ் லாம் மற்றும் கிறிஸ்தவ மதங் களின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இன நல்லிணக்கம் காண இப்படியும் சில யோசனைகள்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் உள்ள முக்கிய சிபார்சுகளை அரசாங்கம் நடுவழி நின்று செயற்படுத்த வேண்டும். அக்குழுவின் அறிக்கையில் உள்ள ஆக்கபூர்வமான- நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கவல்ல - சிபார்சுகளை அரசு நடைமுறைப்படுத்துகிறதா என்று சர்வமதத் தலைவர்கள் குழு உன்னிப்பாக அவதானிக்கும்.

அரசு அது விடயத்தில் அசட்டையாகவோ அன்றி அசமந்தமாகவோ இருக்கும் பட்சத்தில், மக்களிடையே நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கான சிவில் இயக்கம் ஒன்றை முன்னெடுக்க சமயத் தலைவர்கள் தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வண. மாதுலுவாவே சோபித தேரர்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் முக்கியமான, மூலாதாரமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, நீக்குவதற்கு நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை - சிபார்சுகள் - முழு அளவில் வகை செய்யவில்லை என்பதில் சர்வமதத் தலைவர்கள் கருத்தொருமித்து உள்ளனர்.

நாட்டில் அவ்வப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் நியமித்த ஆணைக்குழுக்களுக்கும் அவற்றின் சிபார்சுகளுக்கும் உண்டான நிலைமை நல்லிணக்க ஆணைக்குழுவுக்கும் ஏற்படக் கூடாது என்பதில் சர்வமதத் தலைவர்கள் ஒரே கருத்துடையவர்களாக உள்ளனர் என்றும் வண. சோபித தேரர் கருத்து வெளிப்படுத்தியுள்ளார்.

நாட்டின் சகல இன மக்கள் மத்தியிலும் உகந்த நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களிலும் அவற்றின் நடைமுறைப்படுத்துதலிலும் இருந்து அரசியல் மயமாக்குதல் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்றும் சர்வமதத் தலைவர்கள் ஒத்த கருத்தையே வெளியிட்டுள்ளனர். பிரதான தேசியப் பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அது மிகவும் உகந்த வழித்தடமாக அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வமதத் தலைவர்கள் குழுவைச் சேர்ந்த ஏனைய முக்கியஸ்தர்கள் வெளியிட்ட கருத்துக்களும் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

* அரசியல் தீர்வு விடயத்தில் அரசு நழுவல் போக்கில் செயற்படுகின்றது. காலத்தை வீணடிக்காமல் அதிகாரத்தைப் பகிர்வதா அல்லது அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதா என்பது தொடர்பில் பேசித் தீர்மானம் எடுக்கவேண்டும்.

* சில இனவாத அரசியல் கட்சிகள், தமிழ் மக்களுக்கு பிரச்சினை இல்லை என்றும், தேசியப் பிரச்சினை என்று எதுவும் கிடையாது என்றும் கூறுகின்றன. ஆனால் தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு என்பதை நாட்டு மக்கள் அறிவர். ஆதலால் அரசியல் தீர்வுத் திட்டமொன்று உடனடியாக முன்வைக்கப்படுவது மிக அவசியம் - என்று பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

■ போர் முடிவடைந்துவிட்டதாகக் கூறப்பட்ட போதிலும் அது ஏற்பட்டமைக்கான அடிப்படைக்காரணம் இன்னும் அப்படியே உள்ளது.

■ அபிவிருத்தியால் மட்டும் நல்லிணக்கம் ஏற்படாது.

■ நீதித்துறை சுயாதீனமாக இயங்க வேண்டும். நீதித்துறை மீதான நம்பிக்கை இழக்கப்பட்டு விட்டால், இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலை உண்டாகும்.

■ நாட்டு மக்கள் அனைவரும் மூன்று மொழிகளையும் கற்பதற்கு ஏற்பாடுகள் அவசியம் - என்று முன்னாள் கத்தோலிக்கப் பேராயர் ஒஸ்வால்ட் கோமஸ் கூறிய கருத்துக்களும் தட்டிக்கழிக்கக் கூடியவை அல்ல.

▲ உலகத்தை எம்மால் ஏமாற்ற முடியாது. எனவே அரசாங்கம், த.தே.கூட்டமைப்புடனான பேச்சு வார்த்தையூடாக தீர்வுத் திட்டமொன்றுக்குச் செல்ல வேண்டும்.

▲ மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

▲ ஜனாதிபதியே நீதிபதிகளை நியமிக்கும் நடைமுறையால் நீதித்துறை குறித்து அவநம்பிக்கை ஏற்படுகிறது. எனவே சுயாதீன நீதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். - என்ற மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்த கருத்துக்களும் குறிப்பிடத்தக்கவை.

எமது பிரச்சினையை எம்மால் தீர்க்க முடியுமென சர்வதேசத்துக்கு நிரூபிக்க வேண்டும். தமிழ் மக்கள் திருப்திப்படக்கூடிய வகையிலான அரசியல் தீர்வுத்திட்டம் தேவை. வெளியாரைத் திருப்திப்படுத்தும் வகையிலல்லாது எமது நாட்டு மக்களைத் திருப்திப்படுத்தும் வகையிலான தீர்வுத் திட்டம் அவசியம் - என்ற கருத்துக்களும் சர்வமதத் தலைவர்கள் குழுவின் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

அரசியல் தலைவர்கள் மக்கள் நலன் நாடியே உழைப்பவர்கள் என்று கூறிக்கொண்டாலும் அவர்களிடமும் விருப்பு வெறுப்புக்கள், அதீத சலுகைகள், பட்டம் பதவிகளில் மோகம் என்பன வந்து குறுக்கே நிற்பதுண்டு. சமூகத்தின் தேவைகளுக்கும், விடிவுக்கும் பாடுபட வேண்டிய பொறுப்பு அரசியல் தலைவர்களுக்கு மட்டும்தான் உரியது என்பதல்ல.

சமயத் தலைவர்களும் மக்கள் விடிவுக்கு வழிகாட்டவும் வகைசெய்யவும் துணை நிற்கவும் வல்லமையும் தகுதியும் பெற்றவர்கள்.

அந்த வகையில், சர்மதப் பேரவையைச் சேர்ந்தவர்கள், நாட்டில் நல்லிணக்கம் உண்டாகவும், மக்களுக்கு உண்மையான அரசியல் சுதந்திரம் கிடைக்கவும் உச்சரித்துள்ள கருத்துக்களை அரசியல் தலைவர்கள், குறிப்பாக அரச தலைவர்கள் சிரணித்துச் செயற்படும் சூழ்நிலை, காலம் கனிய வேண்டும். அப்போதே, இந்நாட்டில் நீண்ட நெடுங்காலமாக புதைந்து மண்டிப்போயுள்ள உண்மையான சமாதானமும் இன சௌஜன்யமும் சாத்தியமாகும். இல்லையேல் சர்வதேசத் தலையீடுகள் மறைமுகமாக அன்றி நேரடியாகவும் உட்புகலாம். என்னை விட்டால் வீரன் எவனும் இல்லை என்ற வீறாப்பு பல நாடுகளில் சரணாகதிக்கு ஆளானது என்பதையும் இலங்கை மறந்துவிடலாகாது!

# குடாநாட்டில் அரச காணிகளை எவருக்கும் வழங்க வேண்டாம்

### ஜனாதிபதி செயலணி உத்தரவு

அச்சுவேலி, ஜன.7

யாழ்மாவட்டத்தில் உள்ள அரச காணிகளை தனியாருக்கோ நிறுவனங்களுக்கோ வழங்க வேண்டாம் என்ற ஜனாதிபதி செயலணியின் அறிவித்தலை யாழ் அரச அதிபர், யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சகல பிரிவுகளிலும் உள்ள அரச காணிகளை தனியார் பாவனைக்கோ நிறுவனங்களின் பாவனைக்கோ கையளிக்க வேண்டாம் எனப் பிரதேச செயலர்கள் உதவி அரச அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது பல்வேறு தேவைகளுக்கும் காணிகள் தேவைப்படுகின்றன. இந்த வகையில் பாவனை இல்லாமல் இருக்கும் அரச காணிகளைத் தனியார் துறையினரும் சில நிறுவனங்களும் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் பெற்றுப் பயன்படுத்துவதற்கு முயன்று வருகின்றன.

பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்குச் சொந்தமாக கட்டடங்களைக் கட்டுவதற்கு தொண்டு நிறுவனங்கள் நிதி உதவியை வழங்க முன்வந்திருப்பதால் பொருத்தமான அரச காணிகளை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

அரச காணிகளை தனியாருக்கோ நிறுவனங்களுக்கோ வழங்கவேண்டாம் என்ற ஜனாதிபதி செயலணியின் அறிவித்தலை அடுத்து அது தொடர்பான அறிவுறுத்தல் கடிதங்கள் யாழ்.மாவட்ட அரச அதிபரினால் கடந்த வாரம் பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள காணிகளை பதிவு செய்வது, அரச காணிகளை உள்ளூர் அபிவிருத்தி நடவடிக்கைக்குப் பயன்படுத்தாமல் தடுத்து நிறுத்துவதுபோன்ற செயற்பாடுகளில் அரசு மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கும், அவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்காகவே இத்தகைய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-11)

## கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.7

பருத்தித்துறைப் பிரதேச சபையினால் நடத்தப்படும் கௌரவிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு மருதங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பருத்தித்துறை பிரதேச செயலர் அ.நடராசா கலந்து கொள்வார்.

(த-236)

## நல்லூர் பிரதேச எல்லைக்குள் ஏழு மயானங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.7

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட மயானங்களின் புனரமைப்புக்கென 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா சபை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்தகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான திருநெல்வேலி இந்துமயானம், அரியாலை கிழக்கு இந்து மயானம், கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானம் ஆகிய மூன்று மயானங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

மயானத்தில் சடலம் எரிக்கும் இடத்தில் கொட்டகைகள் இன்மையால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் இரும்பிலான தூண்கள் மற்றும் தகரங்களைப் பயன்படுத்திக் கொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன.

கொட்டகைகள் இன்மையால் மழை காலங்களில் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

மயானங்களில் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன என்றார். (ரி-311)

## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன.7

கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மற்றும் கலை கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையில் தொலைக்காட்சி விருது வழங்கும் விழா எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2 மணியளவில் கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சி.பி.ஏக்க நாயக்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமர் டி.எம். ஜெயரட்ண கலந்து கொள்ளவுள்ளார்.

(வ-319)

## 2500 மில்லியன் ரூபா செலவில் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.7

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தலா 500 மில்லியன் ரூபாவுக்கு அபிவிருத்தி முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன.

வவுனியா,முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் இந்த ஆண்டில் 2500 மில்லியன் ரூபாவுக்கான திட்டங்கள் அரச அதிபர்கள் ஊடாக இனங்காணப் படவுள்ளன. வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் எந்திரி ச.சு.சிவகுமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார் .

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்கில் 2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 606 உப திட்டங்கள் 7 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பின்தங்கிய பிரதேசங்கள், மீள் குடியேற்றப் பிரதேசங்களை மையமாக வைத்தே இந்தச் செயற்றிட்டம் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் நலிவடைந்த, அபிவிருத்தி குன்றிய பிரதேசங்கள் திட்டத்தில் முதன்மைப்படுத்தப்படவுள்ளது என்றார்.

(த)

# கேபிள் தொலைபேசிகள் 2011 இல் 5000

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5 ஆயிரம் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் நிறுவனத் தின் யாழ். பிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதில் 4 ஆயிரம் வரையான கேபிள் தொலைபேசி இணைப்புக்களும் ஆயிரம் சி.டி.எம்.ஏ தொலைபேசி இணைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் பெறுவதற்கே அதிகளவிலான மக்கள் விண்ணப்பித்துள்ளனர்.

'இமசான்' என்ற பரிவர்த்தனை அலகு மூலம் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் குடாநாட்டில் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான பிரதேசங்களில் இந்தப் பரிவர்த்தனை அலகு நிறுவப்பட்டுக் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டில் இந்தக் கேபிள் தொலைபேசி இணைப்பை மேலும் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ரெலிக்கொம் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

அரியாலை, கொக்குவில், தாவடி, குளப்பிட்டி , ஆனைக்கோட்டை போன்ற பிரதேசங்களுக்கு இந்த மாதத்தில் கேபிள் இணைப்புக்களை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கென இந்தப் பகுதியில் பரிவர்த்தனை அலகுகள் அமைக்கப்பட்டுச் சீர்செய்யும் பணிகள் நடைபெற்றும் வருகின்றன. இதே வேளை இலங்கையில் யாழ்.மாவட்டத்திலேயே கேபிள் தொலைபேசிப் பாவனை மூலம் அதிக வருமானம் கிடைப்பதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

அரியாலை, கொக்குவில், தாவடி, குழப்பிட்டி , ஆனைக்கோட்டை போன்ற பிரதேசங்களுக்கு இணைப்புகள் அதிகரிக்கப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு, இறப்பு பதிவுகள்

முல்லைத்தீவு, ஜன. 7


முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பிறப்பு, இறப்புப் பதிவுதாரர் இருவருடங்களாக நியமிக்கப்படாததால் இங்குள்ள மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தப் பகுதிக்கான பிறப்பு, இறப்புப் பதிவுதாரராக இருந்த கற்சிலைமடுவைச் சேர்ந்த பரமநாதன் நவரத்தினம் என்பவர் ஷெல் வீச்சினால் இறந்ததையடுத்து இதுவரை எவரும் அந்த இடத்துக்கு நியமிக்கப்படவில்லை. மேலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் வைத்துப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பிறப்பு, இறப்புப் பதிவுதாரரை நிரந்தரமாக நியமிக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்தப் பகுதியிலுள்ள தகுதியுடையவர்களுக்கு இந்தப் பதவிக்கான நியமனத்தை வழங்க வேண்டுமென்பதே இந்தப் பகுதி மக்களின் விருப்பமாகவுள்ளது.

(க-500)



முறிகண்டி ஈஸ்வரன் ஆலயப் புனரமைப்புத் தொடர்பான அங்குரார்ப்பணக் கூட்டத்தின்போது இந்து கலாசார உத்தியோகத்தர்கள், முல்லை மாவட்ட இந்து குருமார் ஒன்றியத் தலைவர் பவாக் குருக்கள், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த கணேசானாந்த சுவாமிகள், பாடசாலை அதிபர் சூசைநாதர், திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய முகாமையாளர், வர்த்தக சங்கத் தலைவர் ஜீவானந்தம், சிவில் அதிகாரி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

# அவசர தேவை

முல்லைத்தீவு, ஜன. 7

கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் மலசலகூடமொன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்துக்கான இராணுவ அதிகாரி அகமட் இதனை அமைப்பதற்கான அனுசரணையை வழங்கியுள்ளார். கற்சிலைமடு வர்த்தகர்கள் இதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளனர்.

மக்களின் மிகவும் அவசர தேவையான மலசலகூடம் அமைக்கப்படுவதால் மக்கள் பலரும் பயனடைவர். மேலும் இதனை அமைத்துக் கொடுப்பதற்கு உதவியவர்களுக்கு அவர்கள் நன்றியும், பாராட்டும் தெரிவித்துள்ளனர். (க-500)

# நியமனம்

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவு மாவட்டச் சமூக சேவைகள் அதிகாரியாக நடராஜா தசரதராஜகுமாரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் இந்த நியமனத்தை வழங்கியுள்ளது. முதலாம் வகுப்பு சமூக சேவைகள் அதிகாரியான இவர் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். இவர் மேலதிகக் கடமையாக மாவட்டக் கடமையையும் ஆற்றுகின்றார். (க-121)

# எனது இலட்சியம்



மன்னார், ஜன. 7

எதிர்காலத்தில் சிறந்ததொரு பொறியியலாளராக வந்து எனது மாவட்ட மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென்பதே எனது இலட்சியமாகவுள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் க.பொ.த.உயர்தர பௌதிக விஞ்ஞானப் பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தைப் பிடித்த மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவன் பாலசுந்தரராஜா நிதேஸ்.

மீன்பிடிக் கிராமமான தலைமன்னார்க் கிராமத்தைச் சேர்ந்த இந்த மாணவனின் தந்தையும் ஒரு சாதாரண மீன்பிடித் தொழிலாளியாவார். தனது தந்தையார் தமது கற்றல் செயற்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக இருந்ததாகவும் இந்த மாணவன் தெரிவிக்கின்றார்.

எனது வெற்றிக்குப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், நண்பர்கள் அனைவரும் காரணமாக இருந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-601)

# அதிபரின் பெருமிதம்

வவுனியா, ஜன. 7

மருத்துவத் துறைக்கு 3 பேர் எமது கல்லூரியிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

வவுனியா விபுலானந்தாக் கல்லூரி அதிபர் வேலுப்பிள்ளை இந்திரன் இவ்வாறு பெருமிதத்துடன் கூறினார்.

அண்மையில் வெளியாகிய க.பொ.த.உயர்தரப் பெறுபேறுகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், மருத்துவத்துறைக்கு 3 மாணவர்களையும் பொறியியல் துறைக்கு ஒரு மாணவனையும் எமது பாடசாலையால் பெறமுடிந்துள்ளது. அது எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் பெறப்பட்ட பெறுபேற்றுச் சாதனையாகவே கருதுகின்றேன்.

உயர்தரப் பரீட்சையில் வவுனியா மாவட்டத்தில் கலைத்துறையில் முதலாம் இடத்தைப் பெற்றமை தொடர்பாகவும், முதல் தடவையாக மருத்துவத்துறைக்கு 3 மாணவர்கள் ஒரே தடவையில் சித்திபெற்றமை தொடர்பாகவும் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2001 ஆம் ஆண்டில் இருந்து 6 தடவைகள் கலைத்துறையில் மாவட்டத்தில் முதல் நிலைப் பெறுபேற்றைப்பெற்று வருகின்றோம்.

> க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், மருத்துவத் துறைக்கு 3 மாணவர்களையும் பொறியியல் துறைக்கு ஒரு மாணவனையும் எமது பாடசாலையால் பெறமுடிந்துள்ளது

இம்முறை விசேடமாக 3 பேர் மருத்துவத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் 8 பேர் மருத்துவத்துறைக்குத் தெரிவு செய்யப்படும் நிலையில் 3 பேர் எமது கல்லூரியில் இருந்து தெரிவு செய்யப்படுவதென்பது சிறப்பானதாகும்.

ஏனெனில் ஆய்வு கூட வசதிகளோ, போதுமான ஆசிரியர்களோ குறிப்பாக இரசாயனவியல் ஆசிரியர் அற்ற நிலையில், வளங்கள் இன்றி இவ்வாறான அடைவு மட்டமானது வவுனியா மாவட்டத்தில் எமது பாடசாலை அடைந்த சாதனையாகவே கருதப்பட வேண்டும் - என்றார் அவர். (க-435)

# இறுதிநாள் நிகழ்வு

வவுனியா, ஜன. 7

வவுனியா கல்நாட்டிய குளம் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதைப்படிப்பு இறுதிநாள் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற இறுதிநாள் நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

30 ஆம் திகதி காலை விநாயகப் பெருமான் வீதியுலா வந்ததுடன் கல் நாட்டிய குளம் தீர்த்தப் பகுதியில் தீர்த்தமாடினார்.

விசேட பூசைகளைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-74)

# சிலாப்பி மீன்கள்

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவிலுள்ள சிறு குளங்களில் வளர்ந்த நிலையில் காணப்படும் சிலாப்பி மீன்கள் உணவுக்காகப் பிடிக்கப்படுகின்றன.

சேவாலங்கா நிறுவனத்தால் இங்குள்ள சிறு குளங்களில் விடப்பட்ட சிலாப்பி இன மீன் குஞ்சுகள் தற்போது வளர்ந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றின் நிறை சராசரியாக ஒரு கிலோவாக உள்ளது.

தற்போது சேவாலங்கா நிறுவனம் இவற்றைப் பிடிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதால் மக்கள் மீன்களைப் பிடித்து வருகின்றனர்.

மேலும் மீன்குஞ்சுகளைச் சேவாலங்கா நிறுவனம் சிறு குளங்களில் விட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-500)

# அறநெறி மூடிய நிலையில்

முல்லைத்தீவு, ஜன. 7

வன்னிவிளாங்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை செயற்படாமல் முடங்கிக் கிடப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வன்னி விளாங்குளம் கிராமத்தில் மாணவர்களின் சமய அறிவு வளர்ச்சிக்காக உதவி அரச அதிபர் வழங்கிய நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலையே பல மாதங்களாகியும் செயற்படாமல் முடங்கிக் கிடக்கின்றது.

இந்த நிலைப்பாடு குறித்துக் கவலை தெரிவித்துள்ள பெற்றோர்கள் மாணவர்களின் பயன்பாட்டுக்காக இந்தப் பாடசாலையை விரைவாக ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

> மாணவர்களின் சமய அறிவு வளர்ச்சிக்காக அரச அதிபர் வழங்கிய நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட அறநெறிப் பாடசாலையே பல மாதங்களாகியும் செயற்படாமல் உள்ளது.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

வன்னி விளாங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 116 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். இந்த கிராமத்தில் வசிக்கும் மாணவர்களின் சமய அறிவு வளர்ச்சிக்காக மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் வழங்கிய 75 ஆயிரம் ரூபா நிதியிலிருந்து பிரசித்தி பெற்ற முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு அருகில் இந்த அறநெறிப் பாடசாலை கட்டப்பட்டது.

இந்தப் பாடசாலையின் கட்டட வேலைகள் முடிவடைந்து பல மாதங்களாகிய பின்னரும் பாடசாலை திறக்கப்பட்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவில்லை. இந்தப் பாடசாலையில் சமய அறிவைக் கற்கவுள்ள மாணவர்களுக்கென இந்து கலாசார அமைச்சினால் ஒரு தொகுதி சமயம் தொடர்பான நூல்களும், சீருடைகளும் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் பாடசாலை திறக்கப்படாமை குறித்து விசனமடைந்துள்ள பெற்றோர்கள் பாடசாலையை மிக விரைவாகத் திறப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (க-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச் சந்தை வலது கரையிலா?

முல்லைத்தீவு, ஜன. 7

முத்துஐயன்கட்டு வலது கரை 2 ஆம் கண்டத்திலேயே பொதுச் சந்தை அமைக்கப்பட வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

நடப்பு ஆண்டுக்கான காலபோக நெற்செய்கைக் கூட்டத்தில் வலதுகரை 2 ஆம் கண்டத்திலேயே பொதுச் சந்தை அமைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அது தற்போது இடதுகரைச் சந்திக்கு மாற்றப்பட்டதாகத் தெரிய வருகின்றது. இதற்கு இங்குள்ள மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே சகல கிராமங்களுக்கும் பொது மையமாக உள்ள 2 ஆம் கண்டத்தில் சந்தையை அமைப்பதற்கு முடிவு மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போது விவசாயச் செய்கை குறைவாகவுள்ள இடது கரைக்கு மாற்றியமை ஏற்புடையதல்லவெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழுவினர் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையையும் சந்தித்துக் கலந்துரையாடினர். (ம-14)

# ஆதனங்களின் விவரம் பெறுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.7

வேலணை உப அலுவலக நிர்வாகப் பகுதிக்குள் உள்ள ஆதனங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அவற்றின் உறுதிப் பிரதியையும் பெற்றுக் கொள்வதற்கு வேலணைப் பிரதேச சபையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய ஆதன உரித்தாளர்கள் வட்டார ரீதியாக பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் தங்களது ஆதனத்துக்குரிய காணி உறுதியின் மூலப் பிரதி, அதன் போட்டோப் பிரதி, குடும்ப அட்டை மூலப் பிரதி, அதன் போட்டோப் பிரதி என்பவற்றை ஒப்படைத்து ஆதனத்துக்கான தகவல் திரட்டுப் படிவத்தைப் பூரணப்படுத்துமாறு பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.

வட்டார ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த செயற்றிட்டத்தில் நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களுக்கான பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 10 ஆம் திகதி வரை பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரையும் ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையும் ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையும் எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரையும் ஒன்பதாம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரையும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று மேலும் கூறப்பட்டது. (ம-313)

## சைக்கிள் 'போக்' உடைந்ததில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.7

சைக்கிள் சவாரி செய்த இளைஞர்களின் சைக்கிள் முன்போக் உடைந்ததில் இருவர் காயமடைந்ததுடன் அர்களில் ஒருவர் மயக்கமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

சுன்னாகம் நூலக வீதியில் பிற்பகல் 2 மணியளவில் நண்பர்கள் இருவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளை சைக்கிளின் முன் போக் உடைந்து இருவரும் வீதியில் வீழ்ந்தனர்.

இதன்போது ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளானதுடன் மற்றொருவர் மயக்கமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவத்தில் காயமடைந்த தனுஜன் (வயது-22) , கஜன் (வயது- 21) ஆகிய இருவரும் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம- 313- 86- 36)

# பெயர்ப் பலகைகளை அள்ளிச் சென்ற பொலிஸ்

யாழ். மின்சார நிலைய வீதியில் போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதியோரங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த கடைகளின் பெயர்ப் பலகைகள் நேற்றுக் காலை பொலிஸாரால் அகற்றப்பட்டன.

யாழ். நகரில் உள்ள மின்சார நிலைய வீதியின் ஓரங்களில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் விதமாக வீதியோரங்களில் பெருமளவில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன.

வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் பெயர்ப் பலகைகள் வைக்கப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும் என்று பொலிஸாரால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்த போதும் இதை மீறி வீதியோரங்களில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் வந்திறங்கிய பொலிஸார் கடைகளுக்கு முன்பாக இருந்த பொருள்களை அகற்றுமாறு வியாபாரிகளை பணித்ததுடன் வீதியோரங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த கடைகளின் பெயர்ப் பலகைகளையும் அகற்றினர்.

போக்குவரத்துக்கு இடையூறாக பொருத்தப்பட்டிருந்த விளம்பரப் பலகைகளையும் பெயர்ப் பலகைகளையும் வாகனத்தில் ஏற்றிப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

கடந்த சில நாள்களாகப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் இருக்கும் நடைபாதைக் கடைகளும் பெயர்ப் பலகைகளும் பொலிஸாரால் அகற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-319)



வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் பெயர்ப் பலகைகள் வைக்கப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

# என்னைக் கவனிப்பார்களா?

வலி.மேற்கு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட நெல்லியான் பிரதான வீதி பல வருடங்களாகச் சேதமடைந்துள்ளதால் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட நெல்லியான் பிரதான வீதி குன்றும் குழியுமாகச் சேதமடைந்து காணப்படுகிறது. இந்த வீதியின் ஊடாக திருவடி பாடசாலை, விக்டோரியாக் கல்லூரி, ஐக்கிய சைவவித்தியாசாலை ஆகிய பாடசாலை களுக்குச் செல்லும் பிரதான வீதியாக இதனைப் பயன் படுத்துவதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை பிரதான வீதிக்குச் செல்லும் கல்விளான் கிராம வீதியும் சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் சுற்றுப்பாதைகளையும், குறுக்குவீதிகளையும் பயன் படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் இதனைக் கவனத்தில் எடுத்துப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், வியாபாரிகளுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் வீதியால் பயணம் செய்வதற்கு ஏற்றதான புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேசப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

## மரக்கன்றுகள் விநியோகம்

தென்மராட்சி, ஜன.7

நாட்டில் பத்து லட்சம் மரக்கன்றுகளை நடும் திட்டத்தின் கீழ் தென்ம ராட்சி பிரதேச மக்களுக்கான மரக்கன்று விநியோகம் பிரதேச செயலக காணிப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு கிராம அலுவலராலும் வழங்கப் பட்ட விவரப்படி மா, எலுமிச்சை, மாதுளை போன்ற மரக்கன்றுகள் அந்தந்தக் கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஒட்டு மாங்கன்று 50 ரூபாவுக்கும் மாதுளை 30 ரூபாவுக்கும் எலுமிச்சை 20 ரூபாவுக்கும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

காணித் திணைக் களத்தால் வழங்கப்படும் மரக்கன்றுகளை வாங்க விரும்புவோர் தத்தமது பிரிவு கிராம அலுவலர் அல்லது பிரதேச செயலகக் காணிப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-207)

## மோட்டார் சைக்கிளைத் திருடிய கும்பல் பொலிஸாரிடம் அகப்பட்டது

பொதுமக்களின் மோட்டார் சைக்கிள்களைத் திருடி வந்தகும்பல்ஒன்றைஇளவாலை பொலிஸ்பிரிவினர்கடந்தமுதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை கைது செய்துள்ளனர்.

இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் முனிசிங்க தலைமையில் கடந்த புதுவருடத் தினத்தன்று இரவு வேளை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஐந்துபேர் பொதுமக்களின் 10 மோட்டார் சைக்கிளைக் களவாடியதுடன் இதற்கு முன் சம்பவங்களில் மூன்று மோட்டார் சைக்கிள்களை ஏற்கனவே திருடி வந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த சந்தேக நபர்கள் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட போது பொது மக்களின் மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டமை தெரிய வந்தது.

அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-313-130)

## குற்றச் செய்திகள்

யாழ்.ஸ்ரான்லி வீதியில் தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

* * *

வாகனமொன்றின் சில்லுகளின் ரயர் தேய்ந்து பாவிக்க முடியாத நிலையிலும் அதனைப் பொருத்தி வாகனத்தைச் செலுத்திச் சென்ற குற்றத்துக்காவும் நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார் வாகன உரிமையாளர். யாழ். நீதிமன்ற நீதி [illegible] வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டன. (ம-4)

# கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு



டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாட்டை மேற்கொள்ளும் சுகாதரப் பிரிவினர் இதனைக் கண்டுகொள்ளாதது ஏன்?

யாழ்ப்பாணம், ஜன.7

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட செம்மணி வீதிக்கு வடக்குப் பக்கமாக உள்ள ஒழுங்கையில் பொதுமக்கள் கழிவுப் பொருள்களை கொட்டுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரித்து வருகின்றன.

பொதுமக்களின் பாவனையில் உள்ள குறித்த ஒழுங்கையில் வேறு இடங்களில் இருந்து மிருகங்களின் கழிவுப் பொருள்கள், இறந்த விலங்குகள், இறைச்சி கழிவுப் பொருள்கள் போன்றவற்றை உரப் பைகளில் இட்டு பொதுமக்கள் இரவு வேளையில் போட்டு விட்டுச் செல்கின்றனர்.

இந்தக் கழிவுப் பொருள்களைக் நாய், காகம் போன்றன கிளறிவிட்டுச் செல்வதால் ஒழுங்கை முழுவதும் துர்நாற்றம் வீசியபடி உள்ளது.

இதனால் அருகில் குடிமனைகளில் உள்ள பொதுமக்கள் துர்நாற்றத்தை சுவாசிக்க வேண்டியுள்ளது.

அத்துடன் கழிவு எச்சங்களை குடிதண்ணீர் கிணற்றுக்குள் பிராணிகள் கொண்டு வந்து போடுவதால் குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த நிலைமை தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பிரதேசம் தோறும் டெங்குவிழிப்புணர்வுச்செயற்பாடுகளை மேற்கொள்ளும் சுகாதாரப் பிரிவினர் இதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்? ஒழுங்கையில் இடம் பெறும் சுகாதாரச் சீர்கேட்டைத் தடுத்து தொற்று நோய்கள் ஏற்படும் அபாயத்தை தடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 790 மின்விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜன.7
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் 790 மின் விளக்குகள் பொருத் தப்பட்டுள்ளன என்று நல்லூர் பிரதேசசபைத் தலைவர் தெரிவித்தார். 790 மின் விளக்குகளுக்கான நிதி சபையிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபை முழுவதும் மக்களின் பங்களிப்புடன் வீதிகளில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

மின்சார சபையின் அனுமதியோடு வீடுகளிலிருந்து கம்பங்களுக்கு மின் விளக்குகள் ஒளிரவிடப்பட்டுள்ளன.

இதனால் மாதம் 22 ரூபா மட்டுமே செலவாகிறது என்றும் மின்சார சபையால் பொருத்தப்பட்டிருப்பின் மாதம் ஒன்றுக்கு 369 ரூபா செலுத்த வேண்டியிருக்கும் என்றும் கூறப்பட்டது.

இந்த வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருப்பதால் இரவில் நடைபெறும் குற்றச்செயல்களைக் குறைக்க முடியும் என்றும் சபைத் தலைவர் கூறினார். (ம-311-)

# முக்கிய சந்திகளில் சமிக்ஞை விளக்கு

**குடாநாட்டில் அண்மைக்காலமாக வீதி விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. வீதிகளில் வீதிக்கடவைக் குறியீடுகள் வரையப்பட்டு இருந்தும் கூட சாரதிகள் அதைக் கணக்கெடுக்காது செல்கின்றனர்.**

யாழ்ப்பாணம், ஜன,07
யாழ். குடாநாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களை தடுப்பதற்கு இந்த ஆண்டில் பிரதான வீதிகளில் முக்கிய சந்திகளுக்கு வீதி சமிக்ஞை விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

குறிப்பாக நகரில் கஸ்தூரியார் வீதியில் வின்சன் தியேட்டர் சந்தியில் இந்த வீதி சமிக்ஞை விளக்கை முதற்கட்டமாக அமைப்பதற்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த சமிக்ஞை விளக்கு வின்சன் தியேட்டர் சந்தியில் உள்ள சுற்று வட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதைத்தொடர்ந்து குடாநாட்டின் ஏனைய பிரதான வீதிகளின் முக்கிய சந்திகளில் இந்த வீதிச் சமிக்ஞை விளக்குகள் அமைக்கப்படவுள்ளன.

குறிப்பாக குடாநாட்டில் அண்மைக்காலமாக வீதி விபத்துச் சம்பவங்கள் அதிகரித் துச் செல்கின்றன.

வாகனங்கள் அதிக வேகத்திலும் வேகக் கட்டுப்பாட்டை மீறிச் செல்வதாலேயும் இவ் விபத்துச் சம்பவங்கள் தினமும் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

அதனை விட வீதிகள் அகலிக்கப்பட்டும் அவ் வீதிகள் காப்பெற் வீதிகளாகவும் மாற்றப்பட்டுள்ள நிலையில் வாகன சாரதிகள் வாகனங்களை மிக வேகமாகச் செலுத்தி வருகின்றனர்.

இந்த பிரதான வீதிகளில் வீதிக்கடவைக் குறியீடுகள் வரையப்பட்டு இருந்தும் கூட வாகனங்கள் அதை கணக்கெடுக்காது செல்வதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்களால் அனைத்துப் பகுதிகளிலும் வீதிச் சமிக்ஞைகளை அமைப்பது குறித்து ஆராயப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# அபிவிருத்திக்கு 6 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், ஜன.7
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள் புனரமைப்பு மற்றும் விளையாட்டுக் கழகங்களின் அபிவிருத்திக்கென சபை நிதியில் இருந்து 6 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபை தலைவர் எல்.வசந்தகுமார் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபைக்கு. உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 4 லட்சம் ரூபாவும் விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 2 லட்சம் ரூபாவும் சபை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நன்மை கருதியும் மற்றும் வாசிப்பு ஆர்வலர்களின் நன்மை கருதியும் சனசமூக நிலையங்களைப் புனரமைக்கவுள்ளோம்.

புதிதாகத் தளபாடங்கள், திருத்தம், வர்த்தப் பூச்சுக்கள் வேலைகளுக்கும் சஞ்சிகை வகைகளும் செலவிடவுள்ளோம்.

விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டு உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன. பிரதேச சபையில் உள்ள 14 கழகங்களுக்கும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு 2 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ம-311)

# இந்த வாரம் வரும்

யாழ்ப்பாண்ம், ஜன,7
யாழ் குடாநாட்டு பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் இந்த வாரத்தில் எடுத்து வரப்படவுள்ளன.

இந்த சீருடைத் துணிகளை எடுத்து வருவதற்காக யாழ். வலய அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு சென்றுள்ளது.

இந்த சீருடைத் துணிகள் இங்கு எடுத்து வரப்பட்டதும் அவற்றை உடனடியாக மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாம் தவணைக்கான பாடசாலை ஆரம்பித்தும் கூட இந்த இலவச சீருடைத் துணிகளை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது. (ம-17)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2012 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை உள்வீர்க்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே யோகராஜன் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் மற்றும் விருந்தினர்கள் மற்றும் புதிய மாணவர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (ம-319)

# டெங்கு ஒழிப்புத் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.7
தெல்லிப்பழை சுகாதார பரிசோதகர் பிரிவினரால் டெங்கு ஒழிப்புத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அளவெட்டிப் பிரதேசத்தில் அண்மையில் டெங்கு நோயாளி இனங்காணப்பட்டதையடுத்து தெல்லிப்பழை சுகாதாரப் பரிசோதகர்களால் புகையூட்டல் மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் அளவெட்டி மேற்கு செபஸ்ரியான் கோயிலடி, அளவெட்டி வடக்கு, ஈஞ்சடி வைரவர் கோயிலடி ஆகிய பிரதேசங்களில் டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டனர்.

பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கி நுளம்பு பெருகக்கூடிய சூழலை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியும் என சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலைக்கு உட்பட்ட பகுதிகளிலும் புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை ஏழாலை வடக்குப் பகுதியில் டெங்கு நோய் பரவும் சூழலைக் கொண்டிருந்த வீட்டு உரிமையாளர்கள் 7 பேர் மீது சுன்னாகம் பொலிஸ் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஏழாலை வடக்குப் பகுதியில் கடந்த இரண்டு நாள்களில் மட்டும் இரண்டு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதை அடுத்து உடுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து ஏழலை வடக்குப் பகுதியில் டெங்கு ஒழிப்புக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் போது 12 வீடுகளை சோதனை யிட்ட போது 7 வீடுகளில் டெங்கு நுளம்பு பரப்பும் சூழல் காணப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. அத்துடன் இந்தப் பகுதியில் புகையூட்டல்நடவடிக்கைகளும்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-313-86-36)

# குடும்ப நல உத்தியோகத்தருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஜன.7
ஜப்பானிய நிறுவனமொன்றால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் 100 குடும்ப நல சேவையாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்களும் 200 தொண்டர்களுக்கு சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளது.

குடும்ப நல சேவையாளர்களுக்குச் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ரி.வி.எஸ். - ஸ்கூட்டிப்பப் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு வழங்குவதற்கான ஒரு தொகுதி மோட்டார் சைக்கிள்களும் சைக்கிள்களும் சாவகச்சேரி சுகாதார திணைக்களத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஜப்பானிய நிறுவனத்தின் சத்துணவுத் திட்டம் யாழ்.மாவட்டத்தின் ஊர்காவற்றுறை, சாவகச்சேரி மருதங்கேணி, தெல்லிப்பழை ஆகிய சுகாதார வைத் திய அதிகாரி பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-207)

# மாநகர சபை முதல்வரின் துஷ்பிரயோகம் தொடர்கிறது

## ஆளும் தரப்பு உறுப்பினர் குற்றச்சாட்டு

**யாழ்.மாநகர சபை முதல்வர் மீண்டும் தனது அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றார். இதனைக் கண்டிக்க மக்கள் முன்வரவேண்டும்.**

யாழ்ப்பாணம், ஜன.7
யாழ்.மாநகர சபை முதல்வர் மீண்டும் தனது அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றார். இதனைக் கண்டிக்க மக்கள் முன்வர வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர் எஸ்.நிசாந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் நடத்திய நிசாந்தன் ஊடகவியலாளர் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாநகர சபை முதல்வர் மீண்டும் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு 10,11,12 ஆவது சுகாதாரக் குழுக் கூட்டத்தை நடத்துவதற்கு முதல்வரிடம் திகதி கேட்டு செயலாளரால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. இதனை முற்று முழுதாக நிராகரித்த முதல்வர் கூட்டத்தை நடத்த அனுமதிக்கவில்லை.

தனிப்பட்ட ஒருவரின் கோபதாபங்களுக்காக சுகாதாரக் குழுக் கூட்டத்தையே புறக்கணித்ததால் மாநகர சபை சுகாதாரக் குழுவில் பெரும் புரளி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மாநகர சுகாதார ஊழியர்களுக்கான திடீர் கூட்டம் ஒன்றைக் கூட்டிய முதல்வர் ஆளும் கட்சியின் மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந்தை சுகாதாரக் குழுத் தலைவராக நியமிக்கிறேன் என்று கூறினார்.

ஊழியர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனையடுத்து முதல்வர் குறிப்பிட்ட ஊழியர்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்துக்கு வருமாறு கட்டளையிட்டார்.

இதனையடுத்து அங்கு சென்ற இவர்களுக்கு ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரனுக்கும் இடையே உரையாடல் இடம்பெற்றது.

இதில் அசோகன் என்ற யாழ்.மாநகர சபை ஊழியரை பதவி விலக்குமாறும் புதிய சுகாதாரக் குழுவை மாதாந்த கூட்டத்தில் தெரிவு செய்யுமாறும் ஊழியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளாத நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் இது குறித்து மாற்றம் கொண்டு வரப்படும் என்று கூறியுள்ளார் அமைப்பாளர்.

இவ்வா றான பல்வேறுபட்ட செயற்பாடுகளில் யாழ். மாநகர சபை முதல்வர் தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகிறார்.

மாநகர சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்காத நிலையில் மாதாந்தக் கூட்டம் நடத்தப்படாது இவ்வாறான அறிவிப்புக்களை மாநகர சபை முதல்வர் விடுப்பது சரியானதா என்ற கேள்வியையும் நிஷாந்தன் எழுப்பியுள்ளார். (ம-319)

# உறுப்பினர்கள் பதவி விலகினர்

யாழ்ப்பாணம், ஜன.7
சாவகச்சேரியில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பதவி விலகியதால் சங்கத்தின் தலைவி தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் பன்னிருவரும் ஒட்டு மொத்தமாகப் பதவி விலகினர்.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்தினரே இவ்வாறு பதவி விலகியுள்ளனர். சங்க யாப்பின் பிரகாரம் தெரிவு செய்யப்படும் தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு இரண்டு தடவைகள் மட்டுமே ஒருவர் தெரிவு செய்யப்படலாம்.

இதனை கருத்தில் கொள்ளாது நிர்வாகத் தெரிவு இடம்பெற்றதால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்தப் பதவி விலகல் இடம் பெற்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கிராம அபிவிருத்தி அலுவலர், மாகாண பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறாத்தல் கிலோவாகியமையால் பாதிப்புத் தொழிலாளர்களுக்கே

தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டலுக்கு உள்ளடக்கப்படுகின்றது என்று ஊவா மாகாண சபை உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்

நுவரெலியா, ஜன. 7

''பிரிட்டிஷ் அலகு முறையில் ஒரு நாள் சம்பளத்துக்கு 15 இறாத்தல் தேயிலைத் துளிரை கொய்த நிலைமை மாறி, அதுவே தற்போது 15 கிலோ என்றாகியுள்ளது. தொழிலாளர்கள் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள் என்பதற்கு இதனை விட வேறு ஆதாரம் தேவையில்லை என்று ஊவா மாகாணசபை உறுப்பினர் அ.அரவிந்குமார் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் அமைப்பாளர்களோடு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் பல தசாப்தங்களாக பிரித்தானிய அலகு முறையே நடைமுறையில் இருந்துவந்தது. எடையைப் பொறுத்தமட்டில் நாம் அனைவரும் இறாத்தல் என்ற அலகு முறைக்கே பழக்கப்பட்டிருந்தோம். இதனையே தோட்டத் தொழிலாளர்களும் கடைப்பிடித்தனர்.

அக்காலக்கட்டத்தில் ஒரு நாள் சம்பளத்துக்கு தொழிலாளியொருவர் 15 இறாத்தல் தேயிலைத் தளிரையே கொய்ய வேண்டும் என்ற விதிமுறை வழக்கிலிருந்தது.

15 இறாத்தல் என்பது அண்ணளவாக 7 கிலோவாகும். அவ்வகையில் ஒரு நாள் சம்பளத்துக்கு 7 கிலோ தேயிலை தளிரையே கொய்திருக்கவேண்டும்.

ஆனால், தொழிலாளர்களின் அறியாமையையும், வெகுளித் தனத்தையும் தமக்குச் சாதகமாக்கிப் பயன்படுத்திக்கொண்ட தோட்ட முகாமைத்துவங்கள் 15 இறாத்தல் என்பதை நயவஞ்சகமாக சிறிது சிறிதாக உயர்த்தி பறிக்கவேண்டிய தளிரின் எடையை 15 கிலோ என்ற அளவுக்கு வரையறை செய்தன.

ஆனால், தோட்ட முகாமைத்துவங்கள் நேர்மையாக செயற்பட்டிருந்தால் அலகுமுறை மாறிய பின்பு பறிக்கவேண்டிய தளிரின் எடை 7 கிலோவாக மாத்திரமே வரையறுக்கப்பட்டிருக்கும். தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டலுக்கும், உறிஞ்சலுக்கும் உள்ளடக்கப்படுகின்றது என நாம் பொதுவாகக் கூறினாலும் தற்போதுள்ள மேற்குறிப்பிட்ட நடைமுறையானது எவ்வாறு தொழிலாளர்கள் அப்பட்டமாக வஞ்சிக்கப்படுகின்றார்கள் என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிக்கின்றது என்ற உண்மையை எவராலும் மறுக்கமுடியாது - என்றார். (ச)

## நாவலப்பிட்டி தோட்டத்தில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா, ஜன.7

நாவலப்பிட்டி, கலபொட தோட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலையின் இயந்திரங்கள் மற்றும் இரும்புப் பொருள்களை நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அறிவிக்காமல் அப்புறப்படுத்தி வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழிலாளர்களும் ஏனையவர்களும் கடந்த புதன்கிழமை தேயிலைத் தொழிற்சாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் நிருவாகத்துக்கு உட்பட்ட இந்த தோட்டத்தின் தேயிலைத் தொழிற்சாலை நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையிலுள்ளது.

தோட்டத்தின் தேயிலைத் தொழிற்சாலை நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையிலுள்ளது. அத்துடன் இந்தத் தோட்டத்தில் தொழில் புரிகின்ற 200 தொழிலாளர்களுக்கு வாரத்தில் மூன்று நாள்கள் மாத்திரமே வேலை வழங்கப்படுகின்றது.

இந்தநிலையில் கைவிடப்பட்ட இந்தத் தொழிற்சாலையின் ஒருதொகுதி இயந்திரங்களைத் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அறிவிக்காமல் கடந்த மூன்றாம் திகதி லொறி ஒன்றின் மூலம் மிகவும் ரகசியமாக அப்புறப்படுத்தியுள்ளது.

இதனைக் கேள்வியுற்ற தோட்ட மக்கள் உடனடியாக தொழிற்சாலைக்கு வருகை தந்து இயந்திரங்களை அப்புறப்படுத்துவதற்காக வருகை தந்தவர்களின் ,கார் ஒன்றைத் தடுத்து வைத்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தில் தீ

நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தீவிபத்தின் காரணமாக அனல் மின்சார நிலையத்தின் மின்சார உற்பத்திப் பணிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயந்திர அறையிலேயே தீவிபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒரு மாதத்துக்கு முன்னரும் நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தின் இயந்திர அறையில் தீவிபத்து ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



நுவரெலியா- ஹற்றன் பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

## இந்திய வீட்டுத் திட்டத்தில் மட்டக்களப்புக்கு 5,000

மட்டக்களப்பு,ஜன.7

இந்திய அரசு மூலம் இலங்கைக்கு கிடைக்கவுள்ள 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 5 ஆயிரம் வீடுகளும் மலையகத்துக்கு 5 ஆயிரம் வீடுகளும் வழங்கப்படவுள்ளதாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தேசிய கண்பார்வையற்றோர் சங்கத்தின் கிழக்கு மாகாண கிளையின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கண்பார்வையற்றோர் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூடிய கவனம் எடுத்து வருகின்றார். இவர்களுக்கு மத்திய அரசின் வேலைவாய்ப்புக்களில் ஐந்து வீதத்தை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதிப்பகுதியில் இங்குவரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இது தொடர்பிலான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார்.

அவ்வாறு வரும்போது கண்பார்வையற்றோருக்கும் முன்னுரிமை அடிப்படையில் வீடுகளை பெற்றுத் தருவது இலகுவாக இருக்கும்.

எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கண்பார்வையற்றோரின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் - என்றார். (ச)

## பெண்களின் உடைகளில் தலதா மாளிகை உருவப்படம்

வத்துகாமம், ஜன.7

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் உருவப்படம் பொறித்த பெண்களுக்கான ஆடைகளை விற்பனைக்காக வைத்திருந்தபோது கண்டி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொதுமக்கள் சிலர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

பெண்களுக்காகத் தயாரிக்கப்படும் 'ரீ சேர்ட்'டுகளிலேயே இந்தச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு 'ரீ சேர்ட்' 850 ரூபாவாக விலை குறிக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை தீர்வுகள் இல்லை

### அமீர் குற்றச்சாட்டு

மருதமுனை,ஜன.7

ஆழிப்பேரலை பேரிடர்களால் பாதிக்கப்படட மருதமுனை மக்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தீர்வுகளை பெற்றுக் கொடுக்காது மௌனம் காக்கிறது என்று அக்கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.அமீர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:


ஆழிப்பேரலை அனர்த்தத்தில் மிக மோசமாக பாதிக்கப்பட்டு இன்றுவரை எந்த வித வீடுகளுமின்றி மருதமுனை மக்கள் கஷ்ரப்படுகின்றனர். இம்மக்களின் வேதனைகள் குறித்து சம்பந்தப்பட்ட அரசியல் வாதிகளோ அல்லது அதிகாரிகளோ கண்டுகொள்ளாதுள்ளமையை நான் கண்டிக்கின்றேன்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் அதிகளவான உயிர்களையும் உடைமைகளையும் இழந்து அழிவுகளை சந்தித்துள்ள அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் வேதனைகளை கருத்திற்கொண்டு அரசுடன் பேசி மக்களுக்கு நன்மைகளை பெற்றுத்தராமல், வெறுமனே வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து ஊடகங்களில் பிரபல்யத்தை பெறுவதால் மக்கள் எந்த விதமான நன்மைகளையும் பெறமாட்டார்கள்.

எனவே, மக்களின் நலன் கருதி கிழக்கு மாகாணத்திலுள்ள ஏனைய முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மருதமுனையிலுள்ள குடும்பங்களுக்கு முடியுமான உதவிகளையும் பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## புதிய நீதிமன்ற கட்டடங்கள் அமைக்க நடவடிக்கை

நீதிமன்றக் கட்டமைப்பை மிகவும் செயற்றிறன் உள்ளதாக இயங்க வைப்பதன் நோக்கம் என்கிறார் நீதி அமைச்சர்.



மட்டக்களப்பு,ஜன.7

யுத்தம் முடிவடைந்து இயல்பு நிலைமை நிலவும் கிழக்கில் நாட்டின் ஏனைய பகுதிகளில் போன்று இந்த ஆண்டு புதிய நீதிமன்றக் கட்டடங்கள் பலவற்றை நிர்மாணிப்பதற்கு நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் நீதிமன்றக் கட்டமைப்பை மிகவும் செயற்றிறன் உள்ளதாக இயங்க வைப்பதன் நோக்கமாகவே அமைச்சர் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளார் என்று நீதி அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிவான் நீதிமன்றங்கள், மாவட்ட நீதி மன்றங்கள், சுற்றுலா நீதிமன்றங்கள், காதி நீதிமன்றங்கள் ஆகியவற்றுக்கான புதிய கட்டடங்கள் அமைச்சரின் பணிப்புரைக்கமைய மிக விரைவில் இப்பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன.

அக்கரைப்பற்றில் இரண்டு மாடிகளைக் கொண்ட மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றக் கட்டடங்களும், பொத்துவிலில் இரண்டு மாடிகளைக்கொண்ட மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றக் கட்டடங்களும், சம்மாந்துறையில் நீதிவான் நீதிமன்றக் கட்டடமும், குச்சவெளி, கிண்ணியா, கல்பிட்டி ஆகிய இடங்களில் சுற்றுலா நீதிமன்றக் கட்டடங்களும் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, புதிய காதி நீதிமன்றக் கட்டடங்களை அட்டாளைச்சேனை, பொத்துவில், இறக்காமம், ஒட்டமாவடி, திருகோணமலை, மூதூர், வவுனியா, மாந்தை ஆகிய பிரதேசங்களில் விரைவில் நிர்மாணிக்குமாறும் அமைச்சர் ஹக்கீம் பணிப்புரை விடுத்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றல் துரிதப்படுத்தப்படும்

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.7
யாழ்.மாவட்டத்தில் நாகர்கோவில், சுண்டிக்குளம் ஆகிய இரு பகுதிகளில் கூடுதலாக மிதிவெடிகள் உள்ளன. அங்கு கண்ணி வெடி அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்படும் - என்று யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சியில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த பகுதிகள் பல விடுவிக்கப்பட்டுள்ளன. பல பகுதிகளில் அதிகமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் நிறைவடையவில்லை. சுண்டிக்குளம், நாகர்கோவில் பகுதிகளில் அதிகளவு கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

அரியாலை, கொழும்புத்துறைபோன்ற பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு மீளவும் பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மக்கள் மீளக் குடியமரச் செல்லும்போது சில இடங்களில் கண்ணி வெடிகள் அவதானிக்கப்பட்டு அங்குள்ள பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிக்கை இடப்படுகின்றது. அதனடிப்படையில் எமது கண்ணி வெடியகற்றும் பிரிவு அடையாளப்படுத்தி இருக்கின்ற இடங்களில் மீளவும் பரிசீலனைகளைச் செய்து விரைவில் மக்களிடம் கையளிப்பார்கள்- இவ்வாறு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (ந-410)

## மீண்டும் பாஷையூர் வருகிறார் எம்.ஜி.ஆர்.



யாழ்ப்பாணம், ஜன.07
பாஷையூர் கடற்கரையின் ஓரத்தில் எம்.ஜி.ஆர் உருவச் சிலை அமைந்திருந்த இடத்தில் மீளவும் எம்.ஜி.ஆர் சிலை நிறுவப்படவுள்ளது.

சிலையை நிறுவுவது தொடர்பாகத் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதாவிடம் நேரில் சென்று பிரேரணை கையளிக்கப்படவுள்ளதாக அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவர் பொன்.மதிமுகராஜா விஜயகாந் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

மேற்படி எம்.ஜி.ஆர் உருவச் சிலையானது 1988ஆம் ஆண்டு பாஷையூர் எம்ஜி.ஆர் ரசிகர்களால் நிறுவப்பட்டது.

அந்த உருவச்சிலை முன்னாள் யாழ்.மாநகர சபையின் ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் , முன்னாள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இலங்கை தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாவட்டச் செயலாளர், வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமான பொன். மதிமுகராஜா ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

1995 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட யுத்த இடர்களில் பாஷையூர் பகுதியில் அமைந்திருந்த எம்.ஜி.ஆர். உருவச்சிலை முற்றுமுழுதாகச் சேதமடைந்தது.

அதனை மீள நிறுவுவதற்கு கடந்த 2010 ஆம் ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது அதனை செயற்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது.

தற்போது 2012 ஆம் ஆண்டு சிலையை மீள புனரமைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.(ந-23)

## தென்னங்கன்று விநியோகம்

ஊர்காவற்றுறை, ஜன.7
ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட 'திவிநெகும' பயனாளிகளுக்கான தென்னங்கன்றுகள் நேற்றுமுன்தினம் முதல் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இந்தத் தென்னங்கன்றுகள் ஊர்காவற்றுறைப் பகுதி கிராம அலுவலர் பணிமனைகள் ஊடாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக செயற்படுத்தப்பட்டு வரும் இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் பயனாளி ஒருவருக்கு இரண்டு தென்னங் கன்றுகள் வீதம் விநியோகிக்கப்படுகிறது. (ந-251)

## தென்மராட்சியில் இளைஞர் கழகங்கள்

### விரைவில் அமைக்க முயற்சி

தென்மராட்சி, ஜன.7
தென்மராட்சிப் பிரதேசத்தில் இளைஞர் கழகங்களை அமைக்கும் தீவிர முயற்சியில் தென்மராட்சி இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி. விமல் ஈடுபட்டு வருகின்றார்.

ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலைகளிலும் கழகங்களை அமைப்பதற்கான பதிவுகளை மேற்கொள்ளவேண்டிய இறுதி நாள் இந்தமாதம் 15 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தென்மராட்சி பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி. விமல், பிரதேச இளைஞர் சேவைகள்அலுவலர்செ.உதயமோகன் ஆகியோர் கூட்டங்களை நடத்தி கழகங்களைப் பதிவு செய்வதற்காக நிர்வாக சபைகளைத் தெரிவு செய்து வருகின்றனர்.

அத்துடன் இளைஞர் கழகங்களைக் குறித்த பிரதேசத்தில் ஆரம்பிக்க அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், பொது அமைப்புக்களின் ஒத்துழைப்பு வேண்டுமென இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமல் தெரிவித்துள்ளார். (ந-207)

## பயிற்சி செயலமர்வு

இந்த வருடம் நடைபெறவுள்ள சனத்தொகைக் கணிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் கணக்கெடுப்பு மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு எதிர்வரும் 16ஆம் திகதி ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதேசத்தில் கணக்கெடுப்பு மேற்பார்வை உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (251)

## குறிகாட்டுவான் வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.7
யாழ்ப்பாணம் பண்ணையிலிருந்து குறிகாட்டுவான் வரையிலான வீதி குன்றும் குழியுமாக உள்ளது. அதுமட்டுமன்றி பண்ணை தொடக்கம் மண்டைதீவு, புங்குடுதீவு வீதிகளும் குன்றும் குழியுமாக உள்ளன. இவற்றைப் புனரமைப்புச் செய்யுமாறு மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்தப் பகுதிகளுக்கு தென்னிலங்கையில் இருந்து பெருமளவு மக்கள் நாள்தோறும் வந்து செல்கின்றனர். இதனால் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு, நயினாதீவுப் போக்குவரத்துக்கு கழுதைப்பிட்டிப் பாலத்தையும் சீரமைத்துத்தர வேண்டும் எனத் தீவக மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சேதமடைந்திருக்கும் குறிப்பிட்ட வீதிகளை யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-410)


**Computer Express**
Institute of Information Technology

A/L பரீட்சை முடிவுகள்.....???
O/L பரீட்சை முடிவுகளுக்கு காத்திருக்கும் மாணவர்களே !!!
அடுத்த காலடிகளை வெற்றிப்பாதையில் நகர்த்துங்கள்

| | | |
|---|---|---|
| * Dip. in MicroSoft Office. | 3Months | 2000/= |
| * Dip. in web page Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Graphic Designing. | 4Months | 2000/= |
| * Dip. in Desk top publishing. | 4Months | 2000/= |
| * Dip. in Hardware Engineering. | 3Months | 2000/= |
| * Dip. in Auto CAD. | 3Months | 2000/= |
| * Dip.in Programming Language | 3Months | 2000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3Months | 3000/= |
| * Dip. in Computer Science | 4Months | 2500/= |
| * Honours Dip. in computer science | 5Months | 2500/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 3000/=
Diploma in Multimedia 4Months 3000/=

புத்தாண்டில் ஓர் அரிய வாய்ப்பு அனுமதிக்கு முந்துங்கள்...

Diploma in Computerized Accounting
1 week/3Months Course புதிய பிரிவுகள் ஆரம்பம்.
C,C++,Java,Java Script,VB,Html, ஆகிய Programming Language கற்கை வகுப்புகள்
University of Madras Bsc பட்டதாரியிலான விரிவுரையாளர் வழங்கப்படும்

Batch I 07-01-2012:- 9 am or 3Pm Batch II 08-01-2012:- 9 am or 3Pm
Batch III 11-01-2012:- 9 am or 3Pm Batch IV 13-01-2012:- 9 am or 3Pm
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422 , 0774907444

**வெளிவந்து விட்டது - 2012**
தரம் 1 முதல் O/L வரை
* முதலாம் தவணைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்-கொழும்பு
* தரம் 5 - ஞானோதயம்
* தரம் 5 - குறிஞ்சி
* தரம் 8 - கணிதம்-S.திலீபன்
* Lesson Book - 150/-
* SBA கணிப்பீடு - 240/-
* சுட்டி- தரம்-1 முதல் 5 வரை

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளின் கல்வி எதிர்காலத்தில் சிறந்து விளங்க எம்முடன் தொடர்பில் இருங்கள்.

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
2229881 - 2220865

**மணமகள் தேவை**
யாழ். உயர் இந்து குடும்ப, கேட்டை நட்சத்திரம், செவ்வாய் தோஷம், பாவம் 14, 5'8" உயரம் , 09.12.1969 இல் பிறந்த Vegitarian மகனுக்கு பெற்றோர் பெண் பார்க்கின்றனர். இவர் லண்டனில் PR உள்ளவர். தற்போது சிங்கப்பூரில் என்ஜினியராக வேலை செய்கின்றார். இவரின் சொந்த இடம் கொக்குவில். பெண் ஒரு பட்டதாரியாகவும், வயது 32-34 இடையில் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 0214916355, 0750404124
(பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணிவரை தொடர்பு கொள்ளவும்)


## மரண அறிவித்தல்

### திருமதி திருச்செந்தூர்நாதன் இராஜேஸ்வரி



இணுவில் கிழக்கு, அங்களப்பாயைப் பிறப்பிடமாகவும், இல.116, கல்மடுநகர், கிளிநொச்சியில் வசித்து வந்து தற்போது கயட்டைப்புலம், கோப்பாய் வடக்கு, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய திருச்செந்தூர்நாதன் இராஜேஸ்வரி நேற்று (06.01.2012) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருச்செந்தூர்நாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா-சின்னம்மா தம்பதியரின் மகளும், சுதாகரன் (பிரான்ஸ்), சுதாயினி (சுவிஸ்), சுபாயினி (சுவிஸ்), சுகந்தன், சுதர்சன், சுகனியா, சுதர்சினி, சுபாஸ்கரன் (யாழ். பல்கலைக்கழகம், 3ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயும், விமலாம்பிகை, சந்திரலிங்கம், சிறீஸ்காந்தராஜா, விஜயகிறீபன், அருள்ரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியும், எழிலரசி, ஓவியன், சர்மினி, சுஜீபன், சிந்துஜன், சிவானுஜா, சிகாணி, மகிழினி, கனிமொழி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2012) சனிக்கிழமை கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கயட்டைப்புலம்,*
*கோப்பாய், யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.


தலைநகர் கொழும்பில் பல வருடங்களாக மருத்துவம் மற்றும் கணினிக் கற்கை நெறிகளை சிறப்பாக வழங்கிவரும் PATHE ACADAMY தனது கிளையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதை முன்னிட்டு A/L & O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவச தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு !!!

காலம் - 11/01/2012 (புதன் கிழமை)
நேரம் - காலை 10.30 & 12.30 & 2.30pm
இடம் - UNI - ICT Campus பிரதான மண்டபம்
edexcel CTH abe City & Guilds BRITISH COUNCIL BIT TOEFL PATHE

முக்கிய குறிப்பு !!! நீங்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றி அதிஷ்டசாலி ஆகுங்கள்!!
இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மாணவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு ரூபா 60000/= பெறுமதியான Pentium - 04 கணினி ஒன்று எம்மால் இலவசமாக வழங்கப்படும். ஆகையால் தவறாது அனைத்து மாணவர்களும் கலந்து அதிஷ்டசாலி ஆகுங்கள்!
OUR COURSES :- HND in Pharmacy , HND in Nursing, HND in MLT, ABE ,BIT, ADICT BCS, B.Sc in Hotel Management , EDEXCEL HND COURSES, CTH, Etc....

அரச Vitebsk State Medical University (Belarus) இல் மருத்துவ பட்டப்படிப்பை நீங்கள் மேற்கொள்வதற்கான அனுமதியும் அன்றைய தினம் வழங்கப்படும் ஆகையால் மேற்படி பல்கலைக்கழகத்தில் மருத்துவ பட்டப்படிப்பை கற்க விரும்பும் மாணவர்களும் கலந்து கொண்டு அனுமதியை இப் பல்கலைக்கழக பிரதிநிதிகளிடம் அன்றைய தினம் பெற்றுக்கொள்ள முடியும். முற்பதிவுகளுக்கான இறுதி திகதி :-10/01/2012

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழே உள்ள தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து தங்கள் பெயர் விபரங்களை முற்பதிவு செய்தல் அவசியம்
மேலதிக விபரங்களுக்கு:- UNI - ICT Campus (Pvt) Ltd, No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P :- 021 321 6433 / 0777 110862


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தாத் இறப்பு எட்டியது அறுபதை

பாக்தாத், ஜன.7

ஈராக் தலைநகர் பக்தாத்தைக் குலுங்க வைத்த குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60ஆக உயர்ந்துள்ளது. இது போன்ற வன்முறைகள் மேலும் நடக்கலாம் என்ற அச்சம் அங்கு மக்கள் மத்தியில் தொடர்வதாக அதிகாரிகள் கூறினர்.

ஷியா முஸ்லிம்களின் பகுதியான நசிரியாவில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பு, தற்கொலைத் தாக்குதல் என்று பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதல் நடந்த இடத்திலேயே 36 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

காயமடைந்திருந்த 72 பேரில் 24 பேர் பின்னர் வைத்தியசாலைகளில் உயிரிழந்தனர் என்று ஈராக் உள்துறை அமைச்சு தெரிவித்தது.

இந்தத் தாக்குதலை ஐ.நா. கடுமையாகக் கண்டித்துள்ளது. ஈராக்கில் சுனி மற்றும் ஷியா இரு பிரிவு முஸ்லிம்களும் வாழ்கிறார்கள். சதாம் ஹுசைன் காலத்தில் சுனி இனத்தவர்களே அதிகாரத்தில் இருந்தார்கள். எனினும் அவர்கள் மொத்தச் சனத்தொகையில் சிறுபான்மையினரே. (உ)

## 4,000 பேர் இடம்பெயர்வு



பிரேஸிலியா, ஜன. 7

பிரேஸிலில் அண்மையில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து 4,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.


ரியோ டி ஜெனீரோ மாகாணத்தில் வெள்ளம் அதிகரித்து ஆறு பெருக்கெடுத்ததால் இந்த நிலை ஏற்பட்டது என்று கூறுகின்றனர் அதிகாரிகள்.

கரையோர நகரான கொய்டகாஸஸின் பிரதான வீதியில் சுமார் 20 அடி ஆழத்துக்கு வெள்ளநீர் குறுக்கறுத்துப் பாய்கின்றது என்று மாநகரச் சிவில் காவல் துறையினர் தெரிவித்தனர்.

பிரேஸிலின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் கடந்த சில நாள்களாகக் கடும் மழை பெய்து வருகின்றது. (உ)

# மனிதாபிமானப் பேரழிவு பகுதி

### தென்சூடானில் அறிவிப்பு; அவசர உதவிக்கும் கோரிக்கை



அண்மையில் சுதந்திரமடைந்த தென் சூடானின் ஜோங்லி மாநிலத்தை ''மனிதாபிமானப் பேரழிவுப் பகுதி'' என்று அந்த நாட்டு அமைச்சரவை அறிவித்துள்ளது. அந்தப் பகுதிக்கு வெளிநாடுகளும் சர்வதேச உதவி அமைப்புக்களும் விரைந்து மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டும் என்றும் தென்சூடானிய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

பிரதமர் சல்வா தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய, மனிதாபிமானப் பேரழிவுப் பகுதியாக ஜோங்லி மாநிலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச இணையத் தளம் கூறியது.

பேரழிவில் இருந்து மக்களைக் காக்கவும் அவர்களுக்கு உதவவும் சர்வதேச நிவாரண உதவிகள் உடனடித் தேவை என்று அரச தரப்புப் பேச்சாளர் பர்னபா மரியல் பெஞ்சமின் தெரிவித்தார். ஐ.நா. உட்பட அனைத்து சர்வதேச உதவி அமைப்புக்களும் அவசர உதவிகளை அனுப்பி வைக்கவேண்டும் என்றும் அவர் கோரினார். குறிப்பாக லூவோ நூர், முர்லே ஆகிய இடங்களில் உள்ள இனக் குழுக்களுக்கு உடனடி, அவசர உதவிகள் தேவைப்படுகின்றன என்று அவர் கூறினார்.

லூவோ மற்றும் முர்லே ஆகிய இரு பகுதிகளுக்கும் இடையே காணப்படும் முறுகல் நிலை மற்றும் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் தற்போது தென்சூடானிய அரசு தீவிர கவனம்செலுத்தி வருகின்றது என்று குறிப்பிட்ட பேச்சாளர், அந்தப் பகுதியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முயன்று வருவதாகவும் கூறினார்.

லூ நூர் என்ற பகுதியில் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். சூடானில் இருந்து தென்சூடான் பிரிந்த பிறகு, நூர் பகுதியின் பழங்குடியினர் தலைவரின் கட்டளையை ஏற்று அந்தப் பகுதி மக்கள் மற்றைய நகரங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் முன்னேறி வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்த கடந்த வாரம் ஐ.நா. தனது அமைதிப் படையை பிபோர் என்ற இடத்துக்கு அனுப்பி வைத்தது.

முர்லே பகுதி தற்போது, அனேகமாக, நூர் பழங்குடியினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என்று சுயாதீனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் முர்லே மக்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். நூர் பழங்குடியினர் முர்லேயை விட்டு வெளியேறினாலேயே அங்கு நிவாரணப் பணிகளைத் தம்மால் முன்னெடுக்க முடியும் என்று தென்சூடானிய அரசு அறிவித்திருப்பதாக சுயாதீனச் செய்திகள் கூறுகின்றன.

பழங்குடியினர் லூ நூர் மற்றும் முர்லே மீது நடத்தும் தாக்குதல்களை மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன. பொதுமக்களையும் இனக் குழுக்களையும் தென்சூடானிய அரசு பாதுகாக்க வேண்டும் என்றும் அவை வலியுறுத்தி உள்ளன.

இந்த வன்முறைகள் காரணமாக அண்மையில் மட்டும் சுமார் 50,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விமானத்தில் குழந்தையைப் பெற்றெடுத்தார் சீனப் பெண்

*பீஜிங், ஜன.7*

*சீனாவில் உள்ள ஷாங்காய்நகரில் இருந்து சென்ற விமானத்தில் பயணம் செய்த நிறைமாதக் கர்ப்பிணியான பெங்யூ என்ற 24 வயதுப் பெண் விமானத்தில் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.*

*விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது அந்தப் பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. சீன விமானங்களில் பணிப்பெண்களுக்கு ஏற்கனவே பிரசவம் பார்க்கும் பயிற்சியும் அளிக்கப்பட்டிருந்ததால் பணிப் பெண்களே அவருக்கு பிரசவம் பார்த்தனர்.*

*இதனையடுத்து அந்தப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தை 3 கிலோவுடன் ஆரோக்கியமாக இருந்தது. விமானம் தரை இறங்கியதும் தாய்-குழந்தை இருவரையும் வைத்தியசாலையில் சேர்த்தனர். (ந)*

## காங்கோவில் தீவிரவாதிகள் தாக்குதல்: 26 பேர் சாவு

காங்கோவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

காங்கோவின் கிழக்குப் பகுதியில் ருவாண்டா ஹுடு தீவிரவாதிகள் புத்தாண்டிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் பொதுமக்கள் 26 பேர் உயிரிழந்துள்ளனர்; 13 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

# பூட்டிய காருக்குள் குழந்தை மூளை பாதிக்கும் ஆபத்து

சிட்னி

நீண்ட தூரம் ஓடிய பின் நிறுத்திய காருக்குள் குழந்தைகள் சிறிது நேரம் இருந்தாலும் மூளை பாதிக்கப்படலாம் என்று ஆஸ்திரேலிய ஆய்வு எச்சரித்துள்ளது.

இதுகுறித்து லா ட்ராப் பல்கலைக்கழக ஆய்வுக் குழு பேராசிரியர் பீற்றர் ஓ மெரா தெரிவித்ததாவது;

வெளியே 29 டிகிரி வெப்பம் நிலவும் நாளில் காருக்குள் எயார் கொண்டிஷன் மூலம் 20 டிகிரி வெப்ப நிலையாகக் குறைந்தால், அடுத்த 10 நிமிடங்களில் வெப்பம் இரு மடங்காக உயரும். கார் நின்ற அடுத்த 10 ஆவது நிமிடம் 3 மடங்காக அதிகரிக்கும். இந்தத் திடீர் வெப்ப நிலை அதிகரிப்பால் குழந்தைகளின் மூளை பாதிக்கப்படலாம்.

நீண்ட தூரம் ஓடியபின் நிறுத்தப்பட்ட காருக்குள் குழந்தை, செல்லப் பிராணிகள் அதிக நேரம் இருக்க நேர்ந்தால் உயிரிழக்கும் அபாயம் உண்டு. கடந்த ஓராண்டில் மட்டும் காருக்குள் வெப்பத்தில் சிக்கிய 1,500 குழந்தைகள் ஆஸ்திரேலியாவில் மீட்கப்பட்டனர்.

வெப்பமான காருக்குள் சிக்கும் குழந்தைகளுக்கு உடனடியாக உடலில் நீர் வற்றிப் போய் மூளை பாதிக்கப்படும். பெரியவர்களை விடக் குழந்தைகளுக்கு விரைவாகச் சோர்வு ஏற்பட்டு உடல்நிலை சீர்கெடும். நீண்டநேரம் காருக்குள் வெப்பத்தில் இருக்கும் குழந்தைகள் சுயநினைவிழந்து பின் மீள முடியாத கோமா நிலைக்குச் செல்லும் ஆபத்தும் இருக்கிறது.

இதை தவிர்க்க சூடேறிய காருக்குள் இருந்து வண்டி நின்றதும் குழந்தைகளை உடனடியாக வெளியே கொண்டு வர வேண்டியது அவசியம். நீண்ட தூரம் ஓடிய பின் நிறுத்தப்படும் கார் கதவுகளை பூட்டி குழந்தைகள் ஏறி அமராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு பீற்றர் ஓ மெரா தெரிவித்தார். (ற)

# தீவிரவாதிகளை ஒழிக்க புதிய அமைப்பு உதயம்

தீவிரவாதிகளின் தொடர் தாக்குதல், அச்சுறுத்தல் போன்றவற்றைத் தடுக்க தீவிரவாத எதிர்ப்பு அமைப்பு என்னும் புதிய அமைப்பை அமெரிக்க அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தீவிரவாத எதிர்ப்பு அமைப்பை அமெரிக்க வெளிவிவகாரத்துறை செயலர் ஹிலாரி கிளின்டன் உருவாக்கியுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு எதிராகச் செயற்படும் அல்குவைதா உட்பட அமைப்புகளின் செயற்பாடுகளைக் கண்காணித்து உள்நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த அமைப்பின் செயற்பாடு இருக்கும்.

> வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு எதிராகச் செயற்படும் அல்குவைதா உட்பட அமைப்புகளின் செயற்பாடுகளைக் கண்காணித்து உள்நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த அமைப்பின் செயற்பாடு இருக்கும்.

இதுகுறித்து அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் டேனியல் பெஞ்சமின் தெரிவித்ததாவது;

இதன் நோக்கம் வெளிநாடுகளில் செயற்படும் தீவிரவாதக் குழுக்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து, அமெரிக்காவுக்கு எதிரான அதன் செயற்பாடுகளை முறியடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தேசிய பாதுகாப்புப் படை, அமெரிக்க உளவு நிறுவனம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து இந்த அமைப்பு செயற்படும்.

தீவிரவாதக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கை, அந்தக் குழுக்களுக்கு உதவும் அமைப்புகளை முடக்குதல் உட்படப் பணிகளை இந்த அமைப்பு மேற்கொள்ளும்.

மேலும் கூட்டு நாடுகளுடன் இணைந்து தீவிரவாதக் குழுக்களைக் கட்டுப்படுத்துவது, தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்களுக்கு மாற்று வழிகளை ஏற்படுத்துவது உட்பட்ட பணியை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார். (ந)

# பாக்.ராணுவத் தளபதி கயானி சீனாவில்

இஸ்லாமாபாத்

பாகிஸ்தான் ராணுவத் தளபதி பர்வேஸ் கயானி, ஐந்து நாள் சுற்றுப் பயணமாக, நேற்று முன்தினம் சீனா சென்றார்.

அமெரிக்கா உடனான பாகிஸ்தான் உறவு இன்னும் சீர்படுத்தப்படாத நிலையில், ராணுவத் தளபதி கயானி, சீனாவுக்குச் சென்றுள்ளார். கடந்தாண்டு டிசெம்பரில், சீன உயர் அதிகாரி டாய் பங்குவோ, பாகிஸ்தானுக்கு வந்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, கயானி சீனாவுக்கு வரும்படி, சீனா அழைப்பு விடுத்திருந்தது. இந்தப் பயணத்தில், அவர் இருதரப்பு பாதுகாப்பு மற்றும் ராணுவ உறவுகள் தொடர்பாகப் பேசுவார் என, பாகிஸ்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், 'மெமோ கேட்' விவகாரத்தில், பாகிஸ்தான் ஆளும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள், நான்கு பேருக்கு மேன் நீதிமன்றம் 'நோட்டீஸ்' அனுப்பியுள்ளது.

பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் பர்தவுஸ் அவான், மத விவகாரத்துறை அமைச்சர் குர்ஷித்ஷா ஆகியோர். இவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

## ஆசையை விட்டவருக்கு அடித்தது அதிஷ்டம்

அமெரிக்காவில் பரிசு சீட்டு மோகத்தை கைவிட்டவருக்கு ரூ.15 கோடி பரிசு கிடைத்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

புத்தாண்டில் பரிசு சீட்டு வாங்குவதில்லை என்று உறுதிமொழி பூண்டிருந்த ஜேவியர் என்பருக்கும் ஏற்கனவே எடுத்த சீட்டுக்கு புத்தாண்டு பரிசாக ரூ. 5 கோடி கிடைத்ததால் அவர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் தேடிய 25 பேரும் நிலச்சரிவில் சிக்குண்டு சாவு

மணிலா,ஜன.7

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதியில் தங்கத்தை தேடும் பணியில் ஈடுபட்டிருந்த போது ஏற்பட்ட திடீர் நிலச்சரிவு காரணமாக, 25 பேர் பலியாகினர். மேலும் 100க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை.

**மிண்டோனா தீவில் தங்கம் தேடிக் கொண்டிருந்தவர்களும் இந்த விபத்தில் சிக்குண்டனர். பொதுமக்கள் உறங்கிக் கொண்டிருந்த போது சம்பவம் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**



பிலிப்பைன்ஸ் நாட்டின் மிண்டோனா தீவின் நாப்னாப் பேன் பகுதியில் தங்கக் கனிமத்தைத் தேடும் பணியில், நூற்றுக்கணக்கானோர் ஈடுபட்டனர். அந்தப் பகுதி கரைந்து இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

இந்தப் பகுதி நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ள பகுதி என, கடந்தாண்டு அறிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் நூற்றுக்கணக்கானோர் தங்கத்தைத் தொடர்ந்து தேடி வருகின்றனர். இந்தப் பகுதியில், நேற்றுமுன் தினம் காலை திடீர் நிலச் சரிவு ஏற்பட்டது. இதையடுத்து பல்வேறு இடங்களில் இருந்து வந்த மீட்புப் படையினர் பல மணி நேரம் போராடி, 15 பேர்களது சடலங்களை வெளியே எடுத்தனர். இந்த விபத்தில், 25 பேர் பலியாகி இருப்பர் என்றும், 100க்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்துக் குறித்து அங்கு மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ கேணல் லிண்டன் பனிசா தெரிவித்ததாவது;

குறிப்பிட்ட பகுதியில் 50 சிறிய குடிசைகளில் மக்கள் வசித்து வந்தனர். மேலும், 7,500 சதுர மீற்றர் பரப்பளவில் பொதுமக்கள் உறங்கிக் கொண்டிருந்த போது சம்பவம் நடந்துள்ளது. தங்க கனிம வளத்தை எடுக்க கோடரி, மண்வெட்டி போன்ற சாதாரணக் கருவிகளையே இவர்கள் பயன்படுத்தினர்.

இந்தப் பகுதிக்கு 2 கிலோ மீற்றர் தொலைவில், கடந்தாண்டு ஏப்ரல் 22ஆம் திகதி ஏற்பட்ட நிலச்சரிவில், 14 பேர் பலியாகினர். மேலும், 2009 இல் நடந்த மற்றொரு நிலச் சரிவில், 26 பேர் பலியாகினர் என்றார்.

(ந)

## புத்தாண்டை டிராகன் ஆண்டாக வரவேற்கும் சீனா



ஜனவரி(2012) மாதம் 23ஆம் திகதி பிறக்கும் சீனப் புத்தாண்டை டிராகன் ஆண்டாக சீனா அறிவித்துள்ளது.

புத்தாண்டை வரவேற்கும் வகையில் சிசுயான் மாகாணத்தில் உள்ள ஏரியில் டிராகன் உருவத்தை அமைக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## பாக்.பாடசாலைகளில் கைபேசிக்குத் தடை

லாகூர்,ஜன.7

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் பாடசாலைகள் , கல்லூரிகளில் கைத்தொலைபேசி பயன்படுத்தத் தடை விதிக்க சட்டப் பேரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கைத்தொலைபேசிப் பாவனையில் வகுப்பு நடைபெறும் போதே குறுஞ்செய்தி அனுப்புவது உள்ளிட்ட பழக்கம் அதிகரித்துள்ளது.

இதைக் கட்டுப்படுத்த, பஞ்சாப் மாகாண சட்டப் பேரவை அனைத்து உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவுடன் செவ்வாய்க்கிழமை இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. (ந)

## கடத்தப்பட்ட 15 பாகிஸ்தான் இராணுவத்தினர் சுட்டுக்கொலை.

இஸ்லாமாபாத், ஜன.6

கடத்திச் செல்லப்பட்ட 15 பாதுகாப்புப் படை வீரர்களைக் கொன்று விட்டதாகத் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தெற்கு வஜிரிஸ்தான் பழங்குடியினப் பகுதியிலிருந்து கடந்த மாதம் கடத்தப்பட்டவர்களாவர். இவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டதாக தெஹ்ரிக்-இ-தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் இஷனுல்லா இஷான் தெரிவித்துள்ளார்.

கைபர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இந்தத் தகவலைத் தெரிவித்த அவர், கொல்லப்பட்டவர்களது சடலம் வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் வீசப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்.

இருப்பினும் இஷானின் இந்த அறிவிப்பை தலிபான் அமைப்பின் தலைமை உறுதி செய்யவில்லை.

கடந்த டிசெம்பர் 23ஆம் திகதி ராணுவத்துக்கு எதிராகத் தலிபான் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலில் 15 பாதுகாப்புப் படையினரைக் கடத்திச் சென்றனர். இவர்களை விடுவிக்க சிறையில் உள்ள சில தலிபான்களை விடுவிக்க வேண்டும் என அப்போது கோரிக்கை விடுத்திருந்தனர்.

கைபர் பகுதியில் தலிபான்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையைக் கண்டித்து தலிபான் அமைப்பினர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர். இதுபோன்ற பல பழிவாங்கும் தாக்குதலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்போவதாக மேலும் இஷான் தெரிவித்துள்ளார். (ந)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

நினைவஞ்சலிகள்

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி





பிறப்பு: 13.04.1968
இறப்பு: 07.12.2005

பிறப்பு: 1[illegible].1944
இறப்பு: 0[illegible]2.2011

அமரர் புண்ணி[illegible]மூர்த்தி முருகையா
(பத்தர்) திதி: (2012.01.08)

அமரர் முருகையா சுரேஸ்குமார்

அமரர் புண்ணியமூர்த்தி முருகையா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள்களை அன்புடன் அழைக்கின்றோம்
(இந்த அழைப்பைத் தங்களது தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அண்ணா!!!
நீ எமைப் பிரிந்து
ஆறு வருடங்கள் ஆனாலும்
இன்றும் உம் நினைவுகள்
எம் கண்களிற்குள் இருக்கின்றன

(12572)(2 6 7)

71.பெரியதம்பிரான் வீதி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

**விற்பனைக்கு**

முத்து மணவறை, பிளாஸ்ரிக் பூ மணவறை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779789467, 0213737968

**வீடு வாடகைக்கு**

கணேஷ்வரம் அளவெட்டியில் எல்லாவசதியுடன் கூடிய வீடு வளவு வரும்படியுடன் வாடகைக்குண்டு
T.P.No. 0775946046

**தவறிவிட்டது**

V.T.S. Lane, உரும்பிராய் தெற்கு, உரும்பிராயைச் சேர்ந்த இராசையா சிறீக்குமார் என்பவரது தே.அ.அ.(602795110V) வாகன அனுமதிப் பத்திரம், வாகனக் காப்புறுதி, வரிசான்றிதழ் என்பன கோப்பாய் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0775279232

**வீடு வாடகைக்கு உண்டு**

நிறுவனங்கள், அலுவலகங்கள் என்பவற்றிற்கு உகந்த சகல வசதிகளுடன் கூடிய, 5 அறைகள், சமையல் அறைகளுடன் K.K.S. வீதியில், அரசடிக்கு அருகில் பெரிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 021 222 0763 (வீரலட்சுமி)
(12612) (7-9-45)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் பண்டிதர்
முருகேசு ஆனந்தசிவம்
(முன்னாள் குளோபல் தொலைத் தொடர்பக உரிமையாளர் - கொடிகாமம்)

மலர்வு
28★03★1949

உதிர்வு
08★12★2011

கடந்த (08.12.2011) அன்று ஆழ்ந்த உறக்கத்தில் மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (07.01.2012) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அத்துடன் அன்னாரின் பிரிவை அறிந்து உடன் வந்து உதவிகள் பல செய்து, அனைத்து அன்புள்ளங்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம், கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்தியடிப் பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(12253)(2-6-7)

- குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரளியால் ஏற்பட்ட அவலம்

உத்தரப்பிரதேசம், ஜன.7

பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் தீப்பிடித்ததாக வெளிவந்த புரளியால் பீதியடைந்து தப்பிக்க முயன்ற பயணிக ளில் 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

உத்தரப் பிரதேச மாநிலம் மிர்சாபூர் மாவட்டத்தில் அலகாபாத் - முகல்சராய் ரயில் நிலையங்களுக் கிடையே புனே - பாட்னா விந்தியாசல் எக்ஸ்பிரஸ் பயணிகள் ரயில் சென்று கொண்டு இருந்தது. இந்த ரயில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு காத்ரா அருகே பயணித்துக்கொண்டிருந்தபோது அந்த ரயிலில் தீ பிடித்து விட்டதாக புரளி வந்தது. இதனையடுத்து, அந்த புரளியால் பயணிகள் பீதியடைந்தனர்.

அப்போது, அந்த ரயிலில் வந்த சிலர், ஓடும் ரயிலில் இருந்து குதித்தனர். ரயிலில் இருந்து குதித்த 2 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். மேலும் 5 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் 5 பேரும் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (வ)



லோக்பாலை வலியுறுத்தி நாடாளுமன்றத்தால் லோக்பால் சட்டம் தொடர்பாக ஜனாதிபதி நேரிடையாகத் தலையிடக் கோரி, அத்வானி உட்பட பா.ஜ., மூத்த தலைவர்கள் ஜனாதிபதி பிரதிபா பாட்டீலை சந்தித்து வலியுறுத்தி திரும்பினர்.

## மேலும் இருவரைத் தூக்கினார் ஜெயலலிதா

சென்னை, ஜன.7

சசிகலா குழுவுக்கு ஆதரவான அ.தி.மு.க. செயலாளர்களில் மேலும் இருவரை கட்சிப் பொறுப்புகளில் இருந்து முதல்வர் ஜெயலலிதா நீக்கியுள்ளார்.

சசிகலாவுக்கு நெருக்கமானவர்களை வேரறுத்து வருகிறார் ஜெயலலிதா. அந்த வரிசையில் அண்மையில் கோவை மாநகராட்சியின் துணை மேயர் பதவியிழந்தார். இந்தநிலையில் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:

அ.தி.மு.கவிலிருந்து சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதிச் செயலாளர் கே.சி.செல்வராஜ் மற்றும் சேலம் மாநகர் மாவட்ட செயலாளர் வெங்கடாசலம் நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் அனைத்துப் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். இவர்களிடம் அ.தி.மு.கவினர் எவரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என்று- அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



## அடுத்த வாரம் ஆரம்பமாகிறது விசாரணை

ஏர்செல்—மேக்சிஸ் ஒப் பந்தத்தில் ஏற்பட்ட குளறு படிகள் குறித்து விசாரணைக்காக சி.பி.ஐ. தயா நிதி மாறனுக்கு விரைவில் அழைப்பாணை

டில்லி, ஜ.7

ஏர்செல்-மேக்சிஸ் ஒப்பந்தத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் குறித்து சி.பி.ஐ. முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் தயாநிதி மாறனிடம் அடுத்த வாரம் விசாரணை நடத்தக் கூடும் என்று தெரிகிறது.

ஏர்செல்-மேக்சிஸ் ஒப்பந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் தயாநிதி மாறன், அவரது சகோதரர் கலாநிதி மாறன் உட்பட 7 பேர் மீது சி.பி.ஐ. கடந்த ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி வழக்குப் பதிவு செய்தது. ஆனால், அதன் பின்னர் எந்த நடவடிக்கையும் இல்லை.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதை விசாரித்த நீதிபதிகள், தயாநிதிமாறன் மீது நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏன் என்று கேள்வி எழுப்பினர்.

இந்த நிலையில் ஜனவரி மாதம் இரண்டாம் வாரத்தில் தயாநிதி மாறனிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

அண்மையில் இந்த வழக்குத் தொடர்பாக தொலைத் தொடர்பு அதிகாரிகளிடம் சி.பி.ஐ. வாக்கு மூலங்கள் வாங்கியது. மேலும், இது குறித்து தொலைத் தொடர்புத் துறையிடம் இருந்து மீண்டும் ஆவணங்களை வாங்கியுள்ளது என்று கூறப்படுகிறது.

தற்போது தொலைத் தொடர்புத் துறையிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களை சி.பி.ஐ. அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். தேவைப்பட்டால் இது தொடர்பாக மேலும் சில முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெறப்படும் என்று கூறப்படுகின் றது.

விசாரணை குறித்து தயாநிதி மாறனுக்கு சி.பி.ஐ. விரைவில் அழைப்பாணை அனுப்ப உள்ளது. ஏர்செல் -மேக்சிஸ் ஒப்பந்தம் குறித்த விசாரணை தொடர்பாக மொரீஷியஸ் மற்றும் மலேசியாவில் உள்ள நிறுவனங்களின் விவரங்களை அனுப்பக் கோரி சி.பி.ஐ. அந்த நாடுகளின் அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பவிருக்கிறது. ஏர்செல்-மேக்சிஸ் ஒப்பந்தம் நடைபெற்றபோது மொரீஷியஸ் நாட்டு நிறுவனம் ஒன்று மலேசிய நிறுவனம் மூலம் இந்திய தொலைத்தொடர்பு நிறுவனத்துக்கு பணம் அனுப்பியது விசாரணையில் தெரிய வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## விளக்கம் கேட்டு சி.பி.ஐக்கு உச்சநீதிமன்றம் 'நோட்டீஸ்'

டில்லி,ஜன. 7

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்பும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு குறித்து விளக்கமளிக்குமாறு கேட்டு சி.பி.ஐக்கு உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் நோட்டீஸ் அனுப்பியது.

எஸ்ஸார் ரெலி ஹோல்டிங்ஸ், லூப் ரெலிகொம் ஆகிய நிறுவனங்களிடம் மென்மையாக நடந்து கொள்வதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்றும் சி.பி.ஐ. மற்றும் அமுலாக் கப்பிரிவுக்கு உச்ச நீதிமன் றம் உத்தரவிட்டிருக்கிறது. (வ)


## இழப்புகளை மதிப்பிட வருகிறது மத்திய குழு

'தானே' புயலால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டம், புதுச்சேரி பகுதிகளில் பார்வையிட்டு இழப்புகளை மதிப்பிட மத்திய அரசு ஒருங்கிணைந்த அமைச்சரவைக் குழுவை அமைத்து அறிவிப்பு வெளி யிட்டது.

இந்தக் குழு, புயல் பாதிக்கப்பட்ட கடலூர், புதுவை பகுதிகளில் மிக விரைவில் பார்வையிட்டு, உடனடியாக மதிப்பீட்டு அறிக்கை அளிக்கவுள்ளது.

மேலும், தேசியப் பேரழிவு மேலாண்மை முகாமை விரைவில் இந்தக் குழுவில் இணையும் என்று அதிகார பூர்வமாக அறிக்கை வெளியிடப்பட்டது.

## அணைக்கு ஆதரவு



கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டவேண்டும் என்ற கேரள அரசின் நிலைப்பாட்டுக்கு மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது என்று அந்த மாநில முதல்வர் உம்மன் சாண்டி தெரிவித்துள்ளார்.

கேரளாவில் மக்கள் தொடர்புத்திட்டமொன்றை ஆரம்பித்து வைத்து முதல்வர் உம்மன் சாண்டி பேசியதாவது:

புதிய அணைக்கு கேரளத்தின் அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் உள்ளது. உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட குழுவிடம் கேரள அரசு தனது பதிலை இந்த வாரம் சமர்ப்பிக்கும். அதில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அணையின் உரிமையை பகிர்ந்து கொள்வது தொடர்பாக எமது கருத்துகளைத் தெரிவிப்போம்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கேரள அரசுக்கு எந்த உள்நோக்கமும் இல்லை. உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அணையை தமிழக அரசு, மத்திய அரசுடன் இணைந்து கூட்டாக நிர்வகிக்க கேரளம் தயாராக உள்ளது.

கேரளாவில் உள்ள பரம்பிக்குளம் - ஆழியாறு, சிறுவாணி அணை ஒப்பந்தங்கள் போல் இதனையும் கூட்டாக நிர்வகிக்கலாம். புதிய அணையைக் கட்டுவது என்பது முதலில் ஒரு தேவையாக இருந்தது.

தற்போது அதிகாரமளிக்கப்பட்ட குழு முன்பு விவாதிக்கப்பட்டுள்ளது. அது கேரள மக்கள் மற்றும் அனைத்துக் கட்சிகளின் ஒற்றுமைக்கும் கிடைத்துள்ள அங்கீகாரமாகும் - என்றார் அவர்.

## சேது சமுத்திரத் திட்டம் அறிக்கையைச் சமர்ப்பிக்குக!


சேது சமுத்திரத் திட்டத்தை மாற்றுப்பாதையில் செயற்படுத்துவது குறித்து பிரதமரால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாக்கு நீரிணையையும் மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் சேது கால்வாய்த் திட்டம் 2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இந்தத்திட்டத்தை செயற்படுத்தினால் ராமர் பாலம் அழிக்கப்படும் என்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என்றும் எனவே, திட்டத்துக்கு தடை விதிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

ராமர் பாலம் வழியாக பாதை அமைப்பதற்கு பதிலாக மாற்றுப் பாதையில் திட்டத்தை செயற்படுத்துவது குறித்தும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்தும் விரிவான அறிக்கை கிடைக்கும் வரை திட்டத்தை செயற்படுத்த உச்சநீதிமன்றம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடைக்காலத் தடை விதித்தது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எச்.எல். தத்து, சி.கே.பிரகாஷ் ஆகியோர் கொண்ட குழு முன் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சேது கால்வாய் திட்டத்தை மாற்றுப் பாதையில் செயற்படுத்துவது குறித்து பிரதமரால் அமைக்கப்பட்ட பச்சோரி தலைமையிலான நிபுணர் குழுவின் அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு மத்திய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். வழக்கு விசாரணையை மார்ச் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (வ)

## விபத்து 4 பேர் சாவு



தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டம் அருகே நேற்று கனரகவாகனம் மீது கார் மோதியதில் சம்பவ இடத்திலேயே 4 பேர் உயிரிழந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் அச்சிறுப்பாக்கத்திலிருந்து கார் ஒன்று திண்டிவனம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கார் அச்சிறுப்பாக்கம் தொழிற்பேட்டை அருகே வந்த போது, அங்கு வீதியோரம் நின்று கொண்டிருந்த பார ஊர்தி மீது பயங்கரமாக மோதியது.

இதில் காரில் பயணம் செய்த 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 2 குழந்தைகள் படுகாயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். விபத்து குறித்து அந்தப்பகுதி பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ராஜாத்தியின் கண்ணீர்!

சென்னை,ஜன 7


2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் கட்சிக்காகவே கனிமொழி துயரங்களைத் தாங்கிக் கொண்டார் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதியின் துணைவியார் ராஜாத்தி அம்மாள் தெரிவித்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியின் பிறந்த நாள் விழா சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. விழாவில் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ராஜாத்தி அம்மாள் பேசியதாவது:

எத்தனையோ எதிர்ப்புகளுக்கிடையே இந்த விழா நடைபெற்றுள்ளது. கனிமொழி கலைஞர் ரி.வி அலுவலகத்துக்குச் சென்றதில்லை. முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவின் அலுவலகத்துக்கும் சென்றதில்லை. அலைக்கற்றை தொடர்பாக அவருக்கு எதுவும் தெரியாது.

திஹார் சிறையில் கனிமொழிக்கு மேசை,கதிரை கிடையாது. அவர் இருந்த அறையில் பூச்சிகள் இருந்தன. ஒரு முறை நான் சென்று பார்த்த போது, பூச்சி கடித்து அவரது உடம்பில் பல இடங்களில் தடித்து இருந்தது.

இத்தனை துயரங்களையும் கட்சிக்காகவும், உறவுக்காகவும்தான் அவர் தாங்கிக் கொண்டார் - என்றார்.




# காரைநகர் ஈ
## மார்கழித் திருவா
## தேர்த்திருவிழா சிறப்




### நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி

"ஈழத்துச் சிதம்பரம்" என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலில் இன்று ரதோற்சவம். தில்லை நடராஜப் பெருமான் பொன்னம்பலத்தான் கனக சபையிலே திருநடனமிடும் அற்புதக்கோலம் இங்கே கண்குளிரக் காணலாம். அழகிய சித்திரத்தேரிலே அழகுத்திருக்கோலம் காட்டி ஆனந்த நடமிடும் தில்லைக்கூத்தன் இன்று அற்புதக் காட்சிதரும் பொன்னான நன்னாள். பஞ்சரதங்கள் பவனி வரும் இன்றைய ரதோற்சவம் அடியார் பெருவெள்ளத்தினிடையே தங்கத்தோணி அசைவது போல் ஆடி ஆடி நகர்ந்து வரும் அழகே தனி. இந்த ஈழத்துச் சிதம்பரத்தான் நல்ல அடியார் கூட்டத்துக்கு நற்கதி வழங்கியருள்பாலிப்பதுடன் ஆன்ம ஈடேற்றமும் தருவதால் இன்றைய தேர்த்திருவிழா நன்னாளிலே வழிபடும் அடியார் குறை தீர்க்கும் குமரன் முருகப்பெருமான், விக்கினந் தீர்க்கும் விநாயகர் மற்றும் அம்பிகை அருள்பாலிக்க தேரானது பத்து நிரந்தர வழிபாட்டியல்புடன் ஒன்று சேர்ந்து திருவீதிவலம் வரும் அற்புதக் காட்சி மிக ஆனந்த மயக்காட்சியே. காணக் கண்கள் பல வேண்டுமே. அருள் தர வாரீர். இன்று ரதமேறி வரும் பெருமானை எல்லா நலன்களும் நல்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகளை நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
ஆதீன குருமுதல்வர்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை ஆதீன குருமுதல்வராலயம் திருஞான சம்பந்தர் ஆதீனம்,
நல்லூர். யாழ்ப்பாணம்.



### தில்லைக் கூத்தனைத் துதித்துய்வீர்!



ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலில் கடந்த எட்டு நாள்களாக சிறப்பாக நடைபெற்று வரும் திருவாதிரை உற்சவத்தின் பக்திப் பெருவிழாவாக பஞ்சரத பவனி இன்று மிகக் கோலாகலமாக நடைபெறுகின்றது.

தில்லைத் தலத்திலே நிகழ்வது போன்று திண்ணபுரத்திலும் நடராஜப் பெருமானது ஆதிரை விழா முறைதவறாது சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது. இதனால் ஈழநாட்டில் வாழ்கின்ற சைவ மக்கள் எல்லோரும் சிவ விழாவை தரிசிக்க வருகிறார்கள். வந்து எம்மை விட்டு நீங்காத துன்பங்களை எல்லாம் நீக்குகின்ற கூத்தபிரான் தேரில் எழுந்தருளி வருகின்ற அழகைக் கண்டு அளவற்ற பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி கூத்தப்பிரான் திருவடிகளைத் துதிப்பார்கள். எமது முன்னோர்களினால் அமைக்கப் பட்ட இந்த ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று மகா கும்பாபிஷேகம் மிக சிறப்பாக இடம்பெற்று தொடர்ந்து நித்திய, நைமித்திய கிரியைகள் அனைத்தும் ஒழுங்குமுறையுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. அடியவர்கள் அனைவரும் இன்று நடைபெறுகின்ற தீர்த்தோற்சவத்திலும் தொடர்ந்து நடைபெறுகின்ற உற்சவங்களிலும் கலந்து கொண்டு தில்லை நடராஜப் பெருமானினதும் ஆண்டிக்கேணி ஐயனாரினதும் திருவருளைப் பெற்றுய்ய ஆசி கூறி அழைக்கின்றோம்.

ஆ. அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்,
ஆதீனகர்த்தாக்கள்.



திருவெம்பாவை விரதம் பாவை நோன்பு என்றும், இதனை மகளிர் நோற்கும் விரதம் எனவும் கூறப்படுகிறது. ஆனால், மறுபக்கமாக பார்த்தால், இறைவனைக் கணவனாகவும் அடியவரை தலைவியாகவும் அதாவது ஜீவாத்மா பரமாத்மாவை நோக்கி விரதம் நோற்கும் தொன்மையான விரதம் திரு வெம்பாவை விரதமாகும். திரு வெம்பாவையில் முதல் எட்டுப் பாடல்களில் பாவை நோன்பு நோற்கும் கன்னியரைத் துயில் எழுப்புதல் கூறப்படுகின்றது. அவர்கள் ஒன்று சேர்ந்து நீர் நிலையை அடைந்து நீராடுவதையும் விளக் குகிறது.

அடுத்ததாக மற்றைய பன்னிரண்டு திருப்பாடல்களிலும் கன்னியர் தாம் தொடங்கிய பாவை நோன்பின் சிறப்பு நோக்கத்தை இறைவனிடம் விண்ணப்பம் செய்தும், நாடு மழையால் நலம் பெற வேண்டும், வீடு சிறந்த கணவனால் வளம் பெறவேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். அத்தோடு இறைவனது தொண்டுதான் தலையாயது என்பத
உமக்கல்லாது எப்பணியும் செய்யற்க" என்ற வரிகள் ஊடா
தொழில். சுருங்கக்கூறின் திருவெம்பாவை ஆணவ இருளில்
இறைவனை அடைய முடியாத நிலையும், பக்குவப்பட்ட ஆ
துயிலெழுப்புவதாக "இன்னம் துயிலுதியோ" என்ற பாடலில்
பற்றி கூறும்போது "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெ
எம்பிராட்டி திருவடிமேல் என்று படம் பிடித்துக் காட்டுகிறார்

இப்படியான பெருமை மிக்க திருவெம்பாவை நோன்பு தமி
தில் அமைந்துள்ள சிதம்பரத்திலே வெகு சிறப்பாக நடைபெ
திருநாட்டில் யாழ்ப்பாணத்தின் மேற்குப்பகுதியில் அமைந்து
பரத்தில் தொன்றுதொட்டு திருவெம்பாவை உற்சவம் சிற
வகை யிலே, இவ்வருடமும் (கரவருடம் 2011-2012) மிகமி
(07.01.2012) சனிக்கிழமை சிவகாமியம்பாள் சமேத நடராஜப்

ஆருத்திரா அ
கண் என்

S.T.பரமேஸ்வரன் அன் கொம்பனி
79, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Super Shoes
154, Navalar Road,
Jaffna.
Tel: 021 222 6809

சரவணா ரெக்ஸ்
இல. 526, 529,
பருத்தித்துறை வீதி,
தொ.பே: 021 222 1723
கிளை: இல.770, 772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 0421.
கிளை: இல.171, பிரதான வீதி, நெல்லியடி. தொ.பே: 021 226 2992

சிவன் மோட்டோஸ் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
சிவகுமரன் என்ரப்பிறைஸ்
75, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சிங்கப்பூர் ஜுவல்லறி
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

லலிதா ரெக்ஸ்
இல. 5,6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5260
நியூ லலிதா ரெக்ஸ் & சூ பலஸ்
இல. 42, பஜார் வீதி, வவுனியா.
தொ.பே: 024 222 1234

திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7835.

B.M. ரெக்ஸ்ரைல்ஸ்
251, 1/10, மெயின் சிற்றி மாக்கற்,
கொழும்பு - 11

கஜமுகன் ஹாட்வெயார்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

YOGA TRANSPORT
No. 261 1/12, 1/14,
Main City Market,
Main Street, Colombo-11.
T.P:2445344.
No: 02, Thiruvalluvar Lane,
Arasady Road,
Kantharmadam.
T.P: 021 222 9042.


சிவகணேசன் ரெக்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

RUPA
Versatile Trades
No.104 A, Stanley Road,
Jaffna. T.P: 8330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழத்துச் சிதம்பர
# வாதிரை உற்சவம்
# ப்புமலர் 07-01-2012





## ரா அபிஷேகம் காணாத
## ா என்ன் கண்ணே!

என்பதனயும் 19 வது பாடலில் ''எம்கை
ள் ஊடாக காணலாம். தீர்த்தம் அருளல்
இருளில் கட்டுண்டு கிடக்கின்ற ஆன்மா
பட்ட ஆன்மா அறிவுறுத்துதல், தோழியர்
பாடலில் காண்க. அம்பாளின் கரு ணை
த்த பெய்வளை'' ''மின்னிப்பொலிந்து
டுகிறார் மணிவாசகர்.
ன்பு தமிழ் நாட்டில் கடலூர் மாவட்டத்
டைபெறுகிறது. அவ்வாறே, ஈழமணித்
அமைந்துள்ள காரைநகரில் ஈழத்துச்சிதம்
வம் சிறப்பாக நடைபெறுகிறது. அந்த
) மிகமிக சிறப்பாக நடைபெற்று இன்று
நடராஜப்பெருமான் தனது பரிவார மூர்த்

திகளுடன் மாமணி வீதியாம் மூன்றாம் வீதியை பஞ்சரதத்தில் பவனி வரவுள்ளார். இதனை சேந்தனார் ''அணியுடை ஆதிரைநாள் தேரார் வீதி'' என வர்ணித்துள்ளார்.

இன்று ரதாரோகணம் காண்கின்ற பெருமானுக்கு நள்ளிரவின் மேல் திருவாதிரை நட்சத்திரத்தில் ஆருத்திரா அபிஷேகம் இடம்பெறும். அபிஷேக திரவியங்களும், சிறப்பு மிகு மூலிகை கொண்ட ஓமத்திரவியங்களுடன் அபிஷேகம் நடைபெறும். இதனை ''ஆடினாய் நறு நெய்யொடுபால், தயிர்'' என்பது திருநாவுக்கரசர் தேவாரம். ஞாயிறு 08.01.2012 மாலை வசந்த மண்டபத்திலிருந்து நடராஜப்பெருமான் சிவகாமியம்பாளுடன் எழுந்தருளி இரண்டாம் வீதி வலம் வந்து ஈசானமூலையில் (வடகிழக்கு) தேவியானவள் சிவபிரானது சடையில் கங்காதேவியை வைத்திருக்கின்ற காரணத்தினால் பிரிந்து செல்வதாக அம்பாள் ஆலயத்தினுள்ளே சென்று கதவு தாளிடப்பட்டு பின்பு தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானிடம் தூதுசென்று ஊடலை தீர்த்து வைக்கின்றார். திருவூடலின் நிறைவில் இறைவன் நாம் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு திருவூடலை நிகழ்த்தினோம் என கூறி பார்வதிபரமேஸ்வரனுடன் ஆலயத்தினுள்ளே சென்று தீர்த்தக் கிணற்றிலே (பரமாணந்தகூபம்) தீர்த்தமாடி, தனது இருப்பிடத்தை வந்தடைவார். பின்பு, பத்தாம் நாள் இரவு திருவெம்பாவை பாடி விழா நிறைபெறும். எல்லாம் சிவமயம்.

சிவநெறிச் செல்வர் ஆறுமுகர் செந்தில்நாதன்,
(முன்னாள் செயலாளர், காரைநகர்
மாணிக்கவாசகர் சபை)



## நடராஜப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிட்டட்டும்

மார்கழி மாதம் தேவர்களுக்கு புலரிக்காலமாகும். இக்காலத்தில் மக்கள் வைகறையில் துயில் நீங்கி, நீராடி மலர் கொய்து, சிவபெருமான் திருவடிகள் மீது தூவி வழிபாடு செய்வர். சிவ வழிபாட்டிற்கு திருவெம்பாவை பத்து நாள்களும் சிறந்ததாகும். அதிலும் திருவாதிரை நாள் மிகச் சிறந்ததாகும். மார்கழியில் வரும் திருவாதிரை நாள் நடேசப் பெருமானுக்கு சிறப்பான விழா ஆதலில் அத்திருநாளில் நடேசப்பெருமானுக்கு விஷேட அபிசேகம் செய்வர். அந்த ஆதிரை நாளை ஒட்டி முன்னதாக உள்ள ஒன்பது நாள்களும் விழா எடுத்து வழிபடுதல் திருவெம்பாவை திருவிழாவாகும். இந்த திருவாதிரை விழா தில்லைத் தலத்திலே நிகழ்வது போன்று ஈழத்துச் சிதம்பரத்திலும் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இந்தியா சென்று சிதம்பரத்திலே நடராஜப் பெருமானைத் தரிசிக்க முடியாத பக்தர்கள் அனைவரும் ஈழத்துச் சிதம்பரத்திலே நடராஜப் பெருமானின் ஆனந்த கூத்தினை தரிசிக்கும் வாய்ப்பினை பெறுகின்றனர். இந்த உற்சவங்களைக் கண்டு தரிசிக்கின்ற அனைவரும் சகல சௌபாக்கியங்களுடன் வாழ எம்பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்,
பிரதம சிவாச்சாரியார்,
ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம்.



## வானுயர் இரதங்கள் ஏறி வலம் வரும் திருநாள் இன்று

வான்மழை பொழியும் - நம்வாய்
இறைபுகழ் மழையை வார்க்கும்
நாயனம் தவிலும் மாரி
யாகவே நிறையும், கண்கள்
ஆனந்த மழையைத் தூவும்.
அகம் இறை அருளில் மூழ்கும்.
காரைமண்... யாரும் காணா

மார்கழித் திருவெம் பாவை
மனங்களை உருக வைக்க,
கார்கால வெள்ளம் எங்கள்
கனவையும் குளிர வைக்க,
வேர்களும் சிலிர்த்துப் பூக்க
மேனிகள் வணங்கி ஆர்க்க
தேரேறி வருமாம் தெய்வம்
திசைகட்கு அருளைச் சேர்க்க!

ஞானத்தைக் காண வைக்கும்!
ஈழத்துச் சிதம்பரத்தில்
எழுந்தருள் பாலித்துள்ள
ஈசனும், ஐயனாரும்
பரிவாரத் தெய்வம் மூன்றும்,
வானுயர் இரதங்கள் ஏறி
வலம் வரும் திருநாள் இன்று!
வாருங்கள்... வந்து கோடி
வரம்பெற்று உய்வோம் - நன்று!



இ.த. ஜெயசீலன்
முன்னாள் காரைநகர்
உதவி அரசாங்க அதிபரும்,
பருத்தித்துறை பிரதேச செயலரும்

ESWARRAN
EXPRESS
Genuine Passenger Services
CQLOMBO JAFFNA SPEED
ESWARRAN
Traders, Transport Service &
Courier Service
கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமான
தபால் மற்றும் பொதிகள் சேவை
Courier and Parcel Services

ESER யாழகம்
MARKETING
38, CLOCK TOWER ROAD,
NEAR POLICE STATION.
YARL ENTERPRISES
No. 40, Dippo Road, Uthayanagar West,
Kanakapuram, Killinochchi.

அற்புதா ரேடிங் கொம்பனி
மல்ரிப் பிளேஸ்
பல்பொருள் வாணிபம்
198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
72(9), பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 215

ஈழத்து சிதம்பரத்தில் தில்லைக் கூத்தனின்
திரு நடனம் காண வாரீர் வாரீர்
நானேயோ
நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேன் கருள்செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே
திருச்சிற்றம்பலம்
லக்சுமி பான்ஸி
234, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். 077 9582566

www.karainews.com
காரைநகரில் இருந்து கிடைக்கப் பெறும் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் புகைப்படங் களுடன் www.karainews.com என்ற இணை யத்தள முகவரியில் பார்த்து அறிந்து கொள்ளலாம். தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உலகளா விய இணையத்தள வாசகர் களைக் கொண்டு கடந்த மூன்றாண்டுக ளாக விளங்குகின்றது.
www.karainews.com

மகாராணி
பட்டுச்சோலை
50, Grand Bazaar, Jaffna.,
50, பெரியக்கடை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3104.

ARRUL GLOBAL EXPRESS
INTERNATIONAL COURIER
& CARGO SERVICE
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள்,
பொதிகள் சேவை.
இல.1, பிறவுண் வீதி,
நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

T. தெய்வேந்திரம்
ஸ்ரோஸ்
62, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இளவரசி
சேலைச் சோலை
பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ : 021 222 2503
தொ.நகல்: 021 222 4441

இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
(இராஜபுரம்)
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6953.

நல்லைக் குமரன்
ஹாட்வெயர்
யாழ்-கண்டி வீதி,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நேற்று வந்த பணவரவுக்கு இன்று செலவுகள் ஏற்படலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்படலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். திட்டமிட்ட வேலை ஒன்றை நாளை செய்யலாம் என்று மாற்றி அமைப்பீர்கள்.



**இடபம்:** உறவினர்கள் சிலர் உங்களிடம் யோசனை கேட்டுச் செயற்படலாம். நாலு பேருக்கு பலன்தரக்கூடிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பார்த்த வருவாய் வராமல், எதிர்பாராத பண வருவாய் கைக்குக் கிடைக் கலாம். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர், திடீ ரெனத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம்.



**மிதுனம்:** அவசர செலவுகளுக்காக சிலரிடம் கைமாத்தாக பணம் வாங்கலாம். வெளியூர்களில் இருந்து சந்தோஷ செய்திகளை அல்லது சங்கடம் தரும் செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாட்களாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை இன்று நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்னையாகி தொந்தரவு கொடுக்கலாம்.



**கடகம்:** ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உங்களை கடந்த காலத்தில் விமர்சித்த ஒருவரே இப்போது பாராட்டலாம். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். வியாபாரிகள் நினைத்தபடி சில வேலைகளை முடிக்கலாம். நண்பர்களுடன் கொண் டாட்டங்களில் பங்கேற்கலாம். விருந்து, விசேடம் உண்டு.



**சிங்கம்:** உடன் பிறப்புக்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். தடை, தாமதங்கள் இருந்தாலும், சில காரியங்களை நினைத்தபடி முடிப்பீர்கள். சக ஊழியர் ஒருவர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். ஆதாயகரமான நாள்.



**கன்னி:** ஆரம்பித்த சில வேலைகளை இடையில் விட்டுவிடும் வாய்ப்பு உருவாக லாம். நண்பர்களுடன் முக்கியமான நிகழ்ச்சி களில் கலந்து கொள்ளலாம். விரும்பாத ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம். மற்றவர் களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள்.



**துலாம்:** திட்டமிட்ட வேலைகள் சரியான நேரத்துக்கு முடியாமல் இழுத்தடிக்கலாம். குடும்ப உறுப்பி னர்கள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் நடக்கலாம். நீங்களே கையில் பணம் இல்லாமல் தவிக்கும் போது, சிலர் உங்களிடம் உதவி கேட்டு தொந் தரவு செய்யலாம்.



**விருச்சிகம்:** ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உடன் பிறப்புக்கள் உங்களின் எண்ணம்போல நடந்து கொள்வர். தனிமையில் இனிமை காண முற்படுவீர்கள். ஆரோக்கிய குறைவுகள் நீங்கி, தைரியம், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர்.



**தனுசு:** பயணங்களால் அலைச்சல்களைச் சந்திக்கலாம். பழைய பொருள்களை மாற்றி விட்டு புதிய பொருள்கள் வாங்கலாம். நீங்கள் எதிர்பார்த்ததுபோல சில காரியங்கள், உங்களுக்குச் சாதகமாக நடக்கலாம். நல்ல மனிதர் ஒருவரின் நட்புக் கிடைக்கலாம். வழக்கத்தை விட வேலைப்பளு குறைவாக இருக்கும்.



**மகரம்:** தூங்கக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள். பிள்ளைகள் வழியில் சிரமங் களுக்கு ஆள்படலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த பணிகள் முடியாமல் நீங்களே அதைச் செய்ய நேரிடலாம். உறவினர்கள் தொடர்பான விடயங்களுக்காக அவசர பயணங்கள்மேற்கொள்ளலாம்.



**கும்பம்:** விரயச்செலவுகளை சந்திக்கலாம். வண்டி வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்துவிட்டுதேட நேரிடலாம். வியாபாரிகள் கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவர். சக ஊழியர்கள் விடுமுறையால், கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.



**மீனம்:** போட்டிகள், எதிர்ப்புகள் விலகும். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். தப்பு என்று தெரிந்தும் சில காரியங்களை துணிச்சலாகச் செய்வீர்கள். நீங்கள் எதிர்பாராத சிலர் உங்களைத் தேடி வரலாம். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறாமைப் படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**நாளை**

மார்கழி 23 ஞாயிற்றுக்கிழமை 08.01.2012
திதி: சதுர்த்தசி பி.ப. 01.19வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.இ. 05.41 வரை
சுபநேரம்: 09.32 - 11.02வரை,
ராகு காலம்: 05.02 -06.32 வரை

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 2 | | 3 | | 8 | 7 |
| | | | 1 | | 9 | 3 | | 4 |
| 3 | | | 4 | | | 2 | 6 | |
| 5 | 6 | | | | | | 2 | 9 |
| | | | 6 | | 2 | | | |
| 7 | 2 | | | | | | 3 | 8 |
| | 1 | 4 | | | 6 | | | 3 |
| 2 | | 3 | 8 | | 7 | | | |
| 9 | 7 | | 3 | | 5 | | 4 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானி யச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# மரண அறிவித்தல்

## திருமதி சலாக்கினி அரியரட்ணம்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சலாக்கினி அரியரட்ணம் (04.01.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றேமன்ட் கிறிஸ்தோப்பர் - பொலினம்மா தம்பதியரின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான பேனாட் - கிறிஸ்ரீனா (ஆசிரியர்கள் - மயிலங்காடு, ஏழாலை) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பேனாட் யேசுதாசன் அரியரட்ணத்தின் (C.T.B. உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், C.R. யோசவ், காலஞ்சென்றவர்களான C.R. சலேசியஸ், C.R. சேவியர், லூட்ஸ் சறோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதந்திரராஜ் (பிரான்ஸ்), சுஜி (மிருசுவில்), சுறேந்திரராஜ் (சுறேன் - ACX Phone Shop), சுபாஷினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும், சறோஜினி (பிரான்ஸ்), அன்ரன் மதுரநாயகம் (சந்திரன் - மிருசுவில்), ஜெயந்தினி, வின்சன்ற் விஜயன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியும், மீறியம் மறீன் நோயல், மேரி அன் (பிரான்ஸ்), அபிஷாயினி (யா/புனித ஜோண் பொஸ்கோ மாணவி), ஜொயல், ஆயோ ஜணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (07.01.2012) சனிக்கிழமை பிற்பகல் 2. 30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு, பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**40/1, அன்னாள் வீதி,**
**பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.**

(12613)(2-6-7)

தகவல்:
**மக்கள், மருமக்கள்,**
**சுறேன் (மகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச கட்சியை ஏற்கும் தமிழர்கள் 'நக்குண்டார் நாவிழந்தார்' வம்சம்

## யோகேஸ்வரன் எம்.பி.குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஜன.7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரச கட்சியை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்றுக்கொள்ளும் தமிழினத்தைச் சேர்ந்த எவராக இருந்தாலும் அவர்கள் 'நக்குண்டார் நாவிழந்தார்' வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றஞ்சாட்டுகிறார்.

மட்டக்களப்பு, சித்தாண்டி ஸ்ரீமஹாலட்சுமி இந்து மன்ற அங்குராப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபிவிருத்தி வேண்டுமென்றால் அரசை ஆதரிக்க வேண்டுமென்று மக்கள் மத்தியில் பலர் கூறி வருகிறார்கள். மக்களின் தேவைகளை அபிவிருத்தி என்றாலும் சரி, வேறு தேவை என்றாலும் சரி நிறைவேற்ற வேண்டியது அரசின் கடமை. அதனைத் தட்டிக் கேட்பதற்கு மக்களுக்கு உரிமை உண்டு.

அரசை ஆதரித்தால்தான் அபிவிருத்தி என்பது பழைய காலப் பல்லவியாகும். அபிவிருத்திக்காகப் பேரினவாதிகளுக்கு கீழ்ப்பணிய வேண்டிய அவசியம் இல்லை.

நாம் கடந்த பொதுத் தேர்தலில் அபிவிருத்தியை முன்வைத்துப் போட்டியிட்ட ஆளும்கட்சி உட்பட்ட கட்சிகளை எதிர்த்துப் போட்டியிட்டோம். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டும்தான் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் முன்வைக்கப்பட்டன.

அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் எமது மாவட்ட மக்கள் வழமைபோல் அபிவிருத்தியை நிராகரித்து தங்களுக்குரிய சுயநிர்ணய உரிமைக்கான ஒருமித்த கருத்தைத் தெளிவாக நிரூபித்துக் காட்டினார்கள்.

மக்கள் வழங்கிய ஆணைக்குப் புறம்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு போதும் செயற்படாது. அரசுடனான பேச்சில் காணி, பொலிஸ் உட்பட அதிகாரப் பரவலாக்கலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்துகிறது. இதனை ஜனாதிபதி விடுதலைப் புலிகள் போல் பிடிவாதம் பிடிப்பதாக எம்மீது குற்றம் சுமத்துகிறார். நாம் உறுதியுடன் இருப்பதற்குக் காரணம் நக்குண்டு நாவிழந்தவர்கள் அல்லர் என்பதுதான்.

கடந்த கால யுத்தத்தினால் எமது தாயகத்தில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டவர்களை நாம் இழந்துள்ளோம். இதில் சுமார் 40 ஆயிரம்பேர் இளைஞர்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் 29 ஆயிரம் விதவைகள் காணப்படுகிறார்கள். 2007 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதாக அரசால் உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் கூட பலர் காணாமல் போயுள்ளார்கள். அது மட்டுமின்றி, நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தங்கள் சொந்த மண்ணில் இன்னும் மீளக் குடியேறி வாழமுடியாத நிலையே காணப்படுகிறது.

இதைப்பற்றி அரசில் நேரடியாகவோ மறைமுகமாகவோ இருப்பவர்களினால் பேச முடியுமா? இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மட்டுமே சுட்டிக் காட்ட முடியும் - என்றார்.

# ஜனநாயக நாட்டில் சட்டம் சமனானது

**சட்டம் அனைவருக்கும் சமமான நிலையில் நடை முறைப்படுத்தப் படும் வரை யில் நாட்டில் ஜனநாயகத்தை எதிர்பார்க்க முடியாது.**

கொழும்பு,ஜன.7

ஜனநாயக நாட்டில் சட்ட சமநிலை மிகவும் முக்கியமான பண்புகளில் ஒன்று. சட்டம் அனைவருக்கும் சமமானது என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் சில சந்தர்ப்பங்களில் சமமாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்று தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சட்டத்தை தமக்கு தேவையான வகையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பங்கள் முற்று முழுதாக தடை செய்யப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

சட்டத்தை நிலை நாட்டும் நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகளே இதற்குக் காரணம் என்று அவர் தெரிவித்தார்.

சட்டம் அனைவருக்கும் சமமான நிலையில் நடைமுறைப்படுத்தப்படும் வரையில் நாட்டில் ஜனநாய கத்தை எதிர்பார்க்க முடி யாது.

ஒவ்வொருவருக்கும் தேவையான விதத்தில் சட்டத்தில் திருத்தம் செய்யக்கூடாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சட்டக் கல்லூரி அனுமதிக்கான பரீட்சையிலும் முறைகேடுகள்

கொழும்பு,ஜன.7

சட்டக் கல்லூரி அனுமதிக்கான பரீட்சையில், சிங்கள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சட்டக் கல்லூரி அனுமதிக்காக சிங்கள மொழி மூலம் 5511 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி இதில் 133 பேர் மட்டுமே சித்தி அடைந்துள்ளதாகவும், தமிழ்மொழி மூலம் 606 பேர் பரீட்சைக்கு தோற்றி இதில் 73 பேரும், ஆங்கில மொழி மூலம் 235 பேர் பரீட்சைக்கு தோற்றி இதில் 35 பேரும் சித்தியடைந்துள்ளத்ாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழி மூல மாணவர்களில் 12.2 வீதமானவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், ஆங்கில மொழி மூல மாணவர்களில் 13.6 வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இந்தப் புள்ளி விவரங்கள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக சிங்கள மொழி மூல மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கும், நீதி அமைச்சுக்கும் முறைப்பாடு செய்ய திட்டமிட்டுள்ளதாக சிங்கள மொழி மூல மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

## பெறுபேறுகளை மீள் பரிசீலனை செய்ய திகதி நீடிப்பு

கொழும்பு,ஜன.7

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் தகவல்களை எதிர்வரும் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் 0114 354 729 எனும் தொலைநகல் இலக்கத்துக்கு வழங்குமாறு மாணவர்களும் பெற்றோர்களும் கேட்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இதற்கான நாளாக நாளை ஞாயிற்றுக்கிழமை நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பேர்னார்ட் சவேஜிற்குமிடையிலான சந்திப்பு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் அரசியல், கலாசாரம் மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

## குற்றவாளிகளை இனம்காணும் அடையாள அணிவகுப்பு

கொழும்பு,ஜன.7

தங்காலை ஹோட்டல் ஒன்றில் பிரிட்டிஷ் நபர் ஒருவர் கடந்த 25 ஆம் திகதி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான குற்றவாளிகளை இனம்காணும் அடையாள அணிவகுப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

குற்றவாளிகளை அடையாளம் காணும் இந்த அணிவகுப்பு தங்காலை நீதிவான் நீதிமன்றத்தில் இரகசியமான முறையில் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பிரிட்டிஷ் நபருடன் இருந்த ரஷ்ய நாட்டுப் பெண்ணைத் தவிர ஏனைய 13 சாட்சிகளும் 5 சந்தேக நபர்களை இனங்காட்டியதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

# ஆணைக்குழு அறிக்கையை உடன் அமுல்படுத்த முடியாது

கொழும்பு,ஜன.7

அரசின் எல்லா பங்குதாரர்களுடனும் கலந்தாலோசனை நடத்தாமல், இலங்கை அரசினால் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற சர்வமத தலைவர்களின் வேண்டுகோள் குறித்துக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முன்கூட்டியே வரையப்பட்ட திட்டம் ஒன்றின் மூலம் தான் நடைமுறைப்படுத்த முடியும். இது அரசுக்குள்ள ஒரு சிக்கலான நிலைமை.

ஜனநாயகத்தில் பல்வேறு அமைப்புகளிடம் இருந்தும் பல்வேறு விதமான கருத்துகள் வெளியாகும்.

ஆனால், அரசு இது குறித்து அரசியல் கட்சிகளுடனும் ஏனைய தரப்பினருடனும் தொடர்பு கொள்ளவுள்ளது. எல்லாத் தரப்பினதும் இணக்கப்பாட்டுடன் தான் இந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும்- என்றார். (ச)

# துப்பாக்கியைக் காணவில்லை

கொழும்பு,ஜன.7

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனை கொலை செய்யப் பயன்படுத்திய துப்பாக்கியை காணவில்லை என்று குற்ற விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கியை மீட்டு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குற்ற விசாரணைப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை நடத்தி, எதிர்வரும் 19ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச)

# நாணயத் தாள்கள் மீளப் பெறப்படும்

கொழும்பு,ஜன.7

அழுக்கடைந்த நாணயத்தாள்களை மக்களிடமிருந்து நேரடியாக பெற்றுக் கொண்டு புதிய நாணயத் தாள்களை வழங்கும் நடவடிக்கையை இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கவுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

**அழுக்கடைந்த நாணயத்தாள்கள் புழங்குவது நாட்டின் மதிப்புக்கும் நல்லதல்ல. பொதுவாக சுற்றுலா பயணிகள் அழுக்கடைந்த நாணயத் தாள்களை விரும்பமாட்டார்கள்**

10 ரூபா, 20 ரூபா, 50 ரூபா போன்ற குறைந்த பெறுமதி கொண்ட அழுக்கடைந்த நாணயத்தாள்களை, மத்திய வங்கி அதிகாரிகள் சந்தைகள், பொருளாதார நிலையங்களுக்குச் சென்று நேரடியாகப் பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்தகைய நாணயத் தாள்கள் வங்கிகளைச் சென்றடைவது குறைவாகும். இதன் காரணமாக குறைந்த பெறுமதிகொண்ட நாணயத் தாள்களை மக்களிடமிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக புதிய நாணயத் தாள்களை வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையில் மத்திய வங்கியின் ஊழியர்களே நேரடியாக செயற்பட இருப்பதாக அவர் தெரிவித்தார்.

அழுக்கடைந்த நாணயத்தாள்கள் புழங்குவது நாட்டின் மதிப்புக்கும் நல்லதல்ல. பொதுவாக சுற்றுலா பயணிகள் அழுக்கடைந்த நாணயத்தாள்களை விரும்பமாட்டார்கள். நாணயத்தாள்களை தூய்மையாகப் பேணுவதன் அவசியம் குறித்து மக்களுக்கு அவ்வப்போது அறிவூட்டப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## வடக்கை மீட்டது போன்று களனியையும் மீட்டுத் தரவும்

கொழும்பு,ஜன.7

போரில் வடக்கை மீட்டதைப் போன்று, களனி பிரதேசத்தை மீட்பதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று களனி பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரனவீர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் சில்வா களனி பிரதேசத்துக்கு வருகைதந்ததன் பின்னரே பாதாள உலகக் குழுக்கள் உருவெடுத்தன. கிரிபத்கொட சந்தையைச் சேர்ந்த வர்த்தகர்களிடம் கப்பம் கோரப்பட்டது.

இதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் பிரதேசசபை உறுப்பினர்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்,

மக்களுக்காக சிறைத் தண்டனை அனுபவிக்க நான் தயார்.

எந்தவிதமான நீதிமன்ற அனுமதியும் இன்றி பொலிஸார் தமது வீடுகளை சோதனை செய்ய முயற்சிப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியியற் கல்லூரி நேர்முகப் பரீட்சை

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி இந்த வருடத்துக்கான தகவல் தொழில்நுட்ப பாட நெறிக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## டெங்கைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துச் செல்வதால் டெங்கு நுளம்பின் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெல்லிப்பழைச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சி.நந்தகுமார் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் அரச நிறுவனங்களின் தலைவர்களைக் கோரி கடிதங்களை அனுப்பியுள்ளார். இந்த நிறுவனங்களில் சேவை புரியும் அரச ஊழியர்கள் மூலம் பிரதி வெள் ளிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை நிறுவன வளவில் சிரமதானப் பணியை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (வ-51)

## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
16 ★ 08 ★ 1936



உதிர்வு
07 ★ 01 ★ 1998

**அமரர் மாணிக்கம் பொன்னம்பலம்**
(Drilling Foreman Irrigation Dept, Colombo)

பதின்னான்கு ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் உங்கள்
பசுமையான நினைவுகள்
இன்னும் மறையவில்லை.

உங்கள் சாந்திக்காக என்றும் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(12586)(2-6-7)

## நீங்காத நினைவில் ஓராண்டு



திருமதி
**சுசீலாரஞ்சினி சிவசுப்பிரமணியம்**

தோற்றம்
21★01★1948

மறைவு
30★12★2010

விதி வரைந்த பாதையில் நீ எம்மை
பாதியில் விட்டுச் சென்றாய் அம்மா
உன் சிரித்த முகம் எம் கண்முன்னே
நிழலாடுது அம்மா
ஓராண்டு கழிந்தாலும் உன் நினைவு
அழியாதவை அம்மா
உமக்காய் எம் மனப் புத்தகத்தில்
ஒரு கோயில் உதயம் பெற்று நிற்குதம்மா.

சோ.நாகராசா (முகாமையாளர்)
136/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கலைவாணி நகைமாளிகை,
111B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(12578) (2-6-9)

## மரண அறிவித்தல்

### றெஜினா பூமணி செல்லத்துரை

13, மவுண் கார்மேல் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றெஜினா பூமணி செல்லத்துரை (02.01.2012) திங்கட்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா- றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைரவநாதர் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற யோசேப் செல்லத்துரையின் அன்பு மனைவியும், சந்திரா, காலஞ்சென்ற அலோசியஸ் லின்ரன் மற்றும் சுகிர்தா (ஆசிரியை புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), அன்ரன், றாஜினி, ராஜன், ஜெயராட் (யாழ். போதனா வைத்தியசாலை), மரியதாசன், றஜனி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற செல்வநாயகம், அலை, மகேஸ்வரன் (ஆசிரியர், இந்துக் கல்லூரி), மாலினி, பத்மாகரன் (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி) கொன்சி, செல்வி, சுகந்தி, அன்பழகன் ஆகியோரின் அன்பு மாமியும் குட்டி, பவா, டிரோ, தர்சினி, நிஷாந், டினேஸ், பிரதீபன், மதுஷா, பிறின்ஸ், செந்தமிழ், யாழினி, நிறஞ்சன், ஜெனீபர், நிதர்சன், சயந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மற்றும் நிலானி, நிஷாந்தி, சிறிசாந்தன், டெனிசியா, டெனிசன், பூவிழி, செயல்விழி, அர்மா, நிவின், றெக்னோ ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ்.மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13, மவுண்கார்மேல் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள்.

## பச்சிலைப்பள்ளி

### பிரதேச சபை, பளை

2012 ஆம் ஆண்டுக்கான
மீள்
**வழங்குநர் பதிவு**

பொருள்களையும்,
சேவைகளையும் வழங்குவதற்காக
ஒப்பந்தகாரரிடம் இருந்து
விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன

| இல. | வழங்கல், சேவைகள் | மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| 01 | எழுத்து உபகரணங்கள் | ரூபா 1500.00 |
| 02 | மோட்டார் வாகனங்களைப் பழுது பார்த்தலும் சேவிஸ் இடுதலும் | ரூபா 1500.00 |
| 03 | படவரைஞர்கள் பதிவு செய்தல் | ரூபா 1500.00 |

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 18.01.2012

மேலதிக விவரங்களை 08.12.2011 ஆம் திகதி உதயன் பத்திரிகையிலும், எமது தலைமை அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

F.D.அன்ரன்
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

## ஆசிரியர் தேவை

தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவிக்கு வீட்டிற்கு வந்து கற்பிக்கக் கூடிய அனுபவ முள்ள பெண் ஆசிரியர் தேவை.

(12624) (45-6-7) தொடர்பு:T.P. 077 6577455

## நெல்லியடியில் வீடு விற்பனைக்கு

நெல்லியடி முருகன் கோயிலடியில் 1¾ பரப்பு காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு - சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.

தொடர்பு: 077 3788795 - 077 3086586

## ROOMS/ANNEX வாடகைக்கு

கண்டி வீதி, இலங்கை
செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அருகில்
அறைகள் ANNEX வாடகைக்கு
கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0779672863

## தேவை

மீசாலையில் இயங்கும் அபி புரொடக்ஸன் தையல் கம்பனியில் தையல் வேலை பழக விரும்பும் பாடசாலை கல்வியை பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகள் தேவை. பயிற்சிக் காலத்தில் வேதனம் வழங்கப்படும். அபி புரொடக்ஸன், காளிகோயில் வீதி, மீசாலை.

T.P 077 1631062

## விற்பனைக்கு

9½' உயரமும் 6' அகலமும் கொண்ட
இரும்புச் சட்டத்தினால் ஆன சோடி கேற்கள்
(மொத்த அகலம் 12') லொறி போய் வர
உகந்தது) விற்பனைக்குண்டு
தொடர்பு: 55, அரசடி வீதி, யாழ்ப்பபாணம்.
T.P.No. **071 6806221**

## T V கள் மலிவு விற்பனை

யாழ்நகரில் எங்கும் இல்லாத மிக மலிவு விலையில்
Japan Sony Flat T V கள் 21"-10000/= ,
25" -15000/= (sw, AR, Fx) Poincer amp-10000/= குளிர் சாதனப்பெட்டிகள் - 20000/= , CD-Casate Radio - 2000/=
தொடர்புகளுக்கு: 077 0440570 - 077 9712956
சென்னி ஹெற்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக
56, K.K.S. வீதி, சுன்னாகம்.

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotherapy)
பிரபல மனோதத்துவ நிபுணர்

### Dr. P. ஆறுமுகம்

T.P. 0719315664, 0777569205

யாழில் 06.01.2012 முதல் 10.01.2012 வரை

**பதிவுக் கட்டணம் ரூபா 500/=**

ஆரம்பநிலை மனநோயை விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு, மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புகளால் (பிறவியில் ஆண்மை அற்றவர்களைத் தவிர) எந்த விதமான மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகி உள்ளனர். குழந்தைப்பேறின்மை, ஆண் உயிர் அணுக்களில் குறைபாடு உள்ளவர்களுக்கு திறமான மூலிகை சிகிச்சை அளிப்பதால் பல பேருக்குக் குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

ரமணி கெஸ்ட் ஹவுஸ்,
இல.47,49, மணிக்கூட்டு வீதி,
யாழ். (சிவதர்சன் எலக்ரிக்கல்ஸ் அருகில்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்

1. கலைமாணி (சிறப்பு/பொது)
2. வணிகமாணி
3. இசைமாணி
4. நடனமாணி

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை எதிர்வரும் 29.01.2012 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் 01.07.2009 ஆம் திகதிக்கு பின்பும், 31.07.2010ஆம் திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களுக்கே, மேற்படி பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பட்டங்கள் வழங்கப்படவிருப்பதால், தகுதி உடையவர்கள் இந்த மாதம் 24ஆம் திகதிக்கு முன்னதாக வேண்டுகோள் படிவங்களை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். வேண்டுகோள் படிவங்களை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் 09.01.2012 (திங்கட்கிழமை) தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.


மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்,
05.01.2012

(சி/7737) (45)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
24 ★ 06 ★ 1946



மறைவு
12 ★ 01 ★ 2006

**அமரர் சின்னத்தம்பி நடராசா**
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

ஆண்டுகள் ஆறு ஆனதையா
ஆண்டவன் திருவடி சென்று - நீ
ஆறாதையா நம் துயரம் - என்றும்
அனுதினமும் உன் நினைவால் வாடுகின்றோம் - நாம்

ஓம் சாந்தி!

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(12601)(2-6-7)

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டி எழுப்புவதா தட்டிக் கழிப்பதா?

என் மனதை உருக்கிய காட்சிகளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். இவர்களை கட்டி எழுப்புவதா தட்டிக் கழிப்பதா? அது உங்களை பொறுத்தது. வறுமையின் கொடுமையில் சிக்கித் தவிக்கிற உறவு களின் நிலை இது. . உடல் அங்கங்களை வாழும் போது இழந்து சுயதொழிலுக்கு வகை தேடுகிறார்கள். பிறப்பலே வழுவிழந்து தம் எதிர்காலத்திற்கு யாராவது சுயதொழிலுக்கு உதவுவார்களா எனச் சிந்தித்து காத்திருக்கின்றனர்.. வலுவிழந்தோர் இல்லங்களுக்கு கூரை வசதி கட்டட வசதியின்றி இன்றி எவ்வாறு மழையுடன் போராடுவது என்று திகைத்து நிற்கின்றனர். ஒரு வேளையாவது நல்ல உணவு சாப்பட மாட்டோமா என்று பட்டினியுடன் வாடுகின்றனர்.

நம் மக்களின் மனித நேயம் என்ன? அவர்கள் வசதி என்ன? யாழ் மக்கள் வசதியுடனோ? வசதியற்றா வாழ்கிறார்கள் என்று ஒரு கேள்வி பலரிடம் இருக்கிறது. என்ன ஒரே உதவி தேவை என்று வருகிறதே என்று சிந்திப்பவர்கள் பலர். அப்படி யென்றால் யாழ் மக்கள் வசதியற்றவர்களா என்று நினைப்பார்கள்.

இங்கு நடைபெறும் நிகழ்வுகளை பார்த்தால் அவ்வாறு இல்லை. அன்று ஒரு திருமண விழாவிலே 02 கிடாரம் சோறு சமைத்து அரை கிடாரம் சோறு மிஞ்சியது என்று அதனை கிடங்கு வெட்டி புதைக்கிறார்கள். அதன் விலை என்ன?

சோறு எஞ்சிவிட்டது என்று எறிகிறார்கள் ஆனால் அதில் ஒரு பங்கு கூட வராது ஏழை ஒருவருடைய மதிய நேர சாப்பாடு.அதனை ஒரு நாளுக்கு வாங்கி கொடுக்க என்றால் அவர்களுக்கு மனம் இடம் தராது ஏழை ஒருவருக்கு உணவு கொடுக்க கசக்குது. வீட்டில் வயிறு நிறை சாப்பட்டு வந்தவருக்கு விதம்விதமான உபசாரம். வசதி படைத்தவருக்கு பகட்டு காட்ட நினைக்கிறார்கள். வழியில் பசியுடன் இருப்பவரை திரும்ப பார்க்க மறுக்கிறார்கள். எங்கு செல்கிறது எம் மக்கள் மனிதாபிமானம்.

புதிய கடை திறப்பு விழா. விதவிதமான சிற்றுண்டி வந்தோரை வரவேற்க பலவித பானங்கள். வாசலிலே பசியுடன் கையேந்தி நிற்கிறார் பசியின் கொடுமையுடன் ஒரு

முதியவர். இப்போ இல்லை அப்புறம் வா. விரட்டுகிறார் முதியவரை. வரவேற்று உபசரித்தவர் பலகாரத்தை கடித்துவிட்டு வயிற்றில் இடம் இல்லை என்று பாதியை தூக்கி வீசுகிறார். வாசலிலே பசியுடன் நிற்பவருக்கு ஒரு பலகாரம் கொடுக்க அவர் மனம் இடம் தரவில்லை. எப்படி இருக்கிறது எம்மவர் மனச்சாட்சி.

ஆலயத்தில் திருவிழா எவ்வாறு செய்வது அடுக்கடுக்காய் செலவு விபரம். எத்தனை கூட்டம் மேளம் என்று எல்லாம் பட்டியல் இட்டு பல லட்சம் செலவழித்து மேளக்கச்சேரி. இசைக் கச்சேரி இதில் எத்தனை வகை. கரைகின்ற காசின் அளவு தெரியாது. அதில் ஓர் இரு ஆயிரங்களை ஏழை சிறுவர்களுக்கு வலுவிழந்தோருக்கு கொடுக்க இடம் தராது அவர்கள் மனம். எப்படி கட்டியெழுப்புவது எம் நாட்டை வறுமையின்றி ஏழையின் வயிறு பசியில் துடிக்கிறது. வசதியுள்ளோன் வாழ்வு இசையை பார்த்து ரசிக்கிறது. இது எல்லாம் புதிய பணம் செய்யும் வேலை என்று ஊர் இவர்களை பார்த்து கை கொட்டி சிரிக்கிறது. ✸

■ சுபா, மானிப்பாய்.

# சிவத்தமிழ் செல்வியை பேசாத நாள் எல்லாம் பிறவா நாளோ

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 87 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மற்றும் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி ஆகிய இருவரும் மார்கழி மாதத்தில் பிறந்தவர்கள். மார்கழி மாதத்தில் பிறப் பவர்கள் பெரும் பாக்கியசாலிகள். மார்கழி மாதம் தேவர்களுக்கு விடியற்காலைப் பொழுதாகும்.

சிவத்தமிழ்செல்வி, மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகப் பெருமை பற்றி பல ஆயிரக்கணக்கான மேடைகளில் சொற்பொழிவு செய்து எண்ணிறைந்த அடியார்களை உருகவைத்தவர். திருவாச கத்துக்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது முதுமொழி.

''திருவாசகத் தொண்டர்'' எனச் சிறப்புப் பட்டம் பெற்றவர் அம்மையார். இவருக்கு ''சிவத்தமிழ்செல்வி'' என்றும் கௌரவப்பட்டம் வழங்கி கௌரவித்த பெருமை காரைநகர் தந்த பேரறிஞர் கலாநிதி.சிவஸ்ரீ.க.வைத்தீஸ்வரக் குருக்களையும், காரை மணிவாசகர் சபையையும் சார்ந்தது. இவருக்கு காரைநகர் மக்கள் வழங்கிய பட்டம் இவரின் இயற் பெயரை யும் விஞ்சி பெருமை ஈட்டிக் கொண்டது. இவர் ஈழத்துச் சிதம்பர தல கூத்துப் பெருமானை வழிபாடு செய்தவர்.

அம்மையார் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் 12 ஆண்டுகள் பொருளாளராக பெரும் பணியாற்றியவர். 1976 ம் ஆண்டுக்கான துர்க்காதேவி ஆலய வருடாந்த கணக்கு அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ள வாசகங்கள் இவ் வேளையில் கவனத்தில் கொள்ளத்தக் கவை.

''எமது ஆலயத் திருப்பணித் தனாதிகாரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அம்பாள் ஆலய வளர்ச்சிக்காக ஆற்றும் அரும்பெருந் தொண்டு எம் கண்முன் மிளிர்கின்றது. அவர் தமது முழுநேரத்தையும் ஆலயத் தொண்டிற்காக அர்ப்பணிக்கும்நோக்குடன் முற்கூட்டியே தமது (ஆசிரியப்பணி) சேவையில் இருந்து ஒய்வு பெற்றுள்ளார். '' நாட்டில் ஏற்பட்ட யுத்த நெருக்கடி காலங்களில் துர்க்கை அம்மன் ஆலயம் பல்வேறு நெருக்கடிகள், இடப்பெயர்வு களைச் சந்தித்ததுண்டு.

வியத்தகு திருப் பணிகளாலும், துர்க்கா புரம் மகளிர் இல்லப் பணிகளாலும் இத் திருத் தலத்தின் தளம் பதித்தவர் அம்மையார் . இவர் ஒரு இந்த நூற்றாண்டின் தன்னி கரில்லாத் தனிப் பெருந் தலைவி. பேராசிரியர்.கா.சிவத்தம்பி ஐயா அம்மையாரின் ''நளவெண்பா'' நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் குறிப்பிட்டது போல ''சிவத்தமிழ்செல்வி அம்மையாரைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே'' அம்மையாரின் 87 ஆவது பிறந்த நாளில் அவர் விட்டகுறை தொட்டகுறைப் பணி களைத் தொடர்ந்து மேற்கொள்ள மனம் கொள்வோமாக.

கா.சிவபாலன்

**இந்த ஆண்டுக்கான (2012)சிவத்தமிழ் விருதுபெறும் சான்றோர்**

சிற்பி சிவ சரவணபவன்
(இசைப்பாறிய அதிபர்-
யாழ்.வைத்தீஸ்வர வித்தியாலயம்- பிரதம ஆசிரியர், இந்துசாதனம்)
சைவத்திரு பொன்னையா செல்லப்பா
(முன்னாள் உபதலைவர்-
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்)
திருவாட்டி பண்டிதை சிவபாக்கியம் பாலநாதன்
கலாபூஷணம் ஏ.வி.ஆனந்தன்
(சிற்பக் கலைஞர்)
சங்கர கம்பர் கதிரவேலு
(புகைப்பட ஊடகவியலாளர்)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள்,பேட்டுக் குஞ்சுகள் 12.01.2012 வியாழக்கிழமை காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

தொடர்பு:
1. நல்லூர் பாம் சென்ரர் , 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
2. நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் றோட், அம்பாள்குளம், கிளிநொச்சி. 0776225944

**31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்**

தோற்றம் 22 ★ 03 ★ 1951



மறைவு 08 ★ 12 ★ 2011

**அமரர் மார்க்கண்டு சுந்தரலிங்கம்**

கடந்த 08.12.2011 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தின் சுடரே!
ஏணியாக நின்று எங்களை ஏற்றம் காண
வைத்த தந்தையே!

உங்கள் பிரிவுத்துயர் எங்களை வாட்டுதையா!
''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக்கடை.

07.01.2012 இன்று நண்பகல் ஒரு மணியளவில் அராலி தெற்கு வாழை அம்மன் கோயில் அருகில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
அராலி தெற்கு,
அராலி. (12253)(2-6-7)
குடும்பத்தினர்.

**வீடு விற்பனைக்கு/ வாடகைக்குண்டு**

695/25, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்த வீடு உடனடி விற்பனைக்கு அல்லது வாடகைக்குண்டு. பரப்பு ஒன்று, சுற்றுமதிலுடன் சகல வசதிகளும் உண்டு.
தொடர்பு: 0774234600

**கோழி இறைச்சி விற்பனைக்கு**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சி நியாயமான விலையில் விற்கப்படும். காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

**கோழிக் குஞ்சு விநியோகம்**

தரமான No- 1 புறோயிலர் கோழிக் குஞ்சுகள் (13.01.2012) அன்று விநியோகம் செய்யப்படும். பெற்றுக் கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
'சிற்றி பாம் ரேடேர்ஸ்''
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.
T.P.No. 021 222 1158
(12751)(7-9-45)

**தரம் - 9 தமிழ் இலக்கியத் தொகுப்பு விற்பனைக்கு**

ஆ.பிருந்தாபன் எழுதிய தரம் - 9 தமிழ் இலக்கியத் தொகுப்பு விற்பனையாகின்றது

பெற்றுக் கொள்ளும் இடங்கள்
- ✸ பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்.
- ✸ அன்னை புத்தகசாலை - யாழ்.
- ✸ சிறிலங்கா புத்தகசாலை - யாழ்.
- ✸ ஆல்சிலோன் புத்தகசாலை - யாழ்.
- ✸ துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்.

**பணிநிலை வேண்டுகை**

இணுவிலில் இயங்கிவரும் VIRUS PRINTERS நிறுவனத்துக்கு Type Setting, Coral Row, Photo Shop Designing தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை.
தொடர்புகளுக்கு: VIRUS PRINTERS
K.K.S. Road, Inuvil.
T.P. 021 224 1815 - 077 592 5096

**ஈரவிழிகளில் ஈராண்டு....**

மலர்வு 06 ★ 03 ★ 1987



உதிர்வு 30 ★ 12 ★ 2009

**அமரர் தில்லையம்பலம் விஜேந்திரன்**
(விநோதன்)
திதி: சதுர்த்தசி (07.01.2012)

ஆண்டுகள் இரண்டு ஆயிற்றோ
ஆருயிர் விட்டுப் பிரிந்து
மீண்டுமொருமுறை வாரீரோ
நாம் பார்த்து மகிழ
மாண்டு நீ போனதெங்கே
மனம் கிடந்து துடிக்கிறதே!

நிரந்தர முகவரி:
அம்மன் கிழக்கு, குடத்தனை.

தற்காலிக முகவரி:
மாளிகைத்திடல், குடத்தனை.

குடும்பத்தினர்
(12561)(6-7-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி ரஜனி சுபாஸ்கரன் அவர்களின் அன்பு மாமன்

### இளையதம்பி சற்குணலிங்கம்


அவர்கள் 08.12.2011 இல் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி. (சி/2203)(2-6)

பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மண்ணில் 18 ★ 12 ★ 1928



விண்ணில் 08 ★ 12 ★ 2011

### அமரர் வல்லிபுரம் செல்லத்துரை

(இளைப்பாறிய இ.போ.ச.நடத்துநர்)

கடந்த 08.12.2011 அன்று சிவபதமடைந்த எமது குலதெய்வம் அமரர் வல்லிபுரம் செல்லத்துரை அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரணக் கிரியைகளும் இன்று (07.01.2012) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (7898)(2-6-7)

## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும் 8 மாதம் பூர்த்தியான குராட் விலர் ஆண் நாயும், 1 வயது நிரம்பிய பொக்கட் ஸ்பெனியர் ஆண், பெண் நாயும் 6 மாதப் பொமேரியன் ஆண், பெண் நாயும் 8 மாதம் நிரம்பிய டாசோன் பெண் நாயும் 45 நாள் பூர்த்தியான பொமேரியன், 45 நாள் பூர்த்தியான அல்சேசன் நாய்க் குட்டிகளும் மணித் தாரா, வான் கோழி ஆகியன விற்பனைக்குண்டு.

தொடர்பு: லி.மதுநரன்,
209, மலாலி வீதி, கோண்டாவில். (ராஜா தியேட்டர் முன்பாக)

## வாடகைக்குத் தேவை

அரச நிறுவனத்தில் பணிபுரியும் உத்தியோகத்தருக்கு யாழ்.நகரப் பகுதியில் இருந்து 05 km சுற்றாடலில் அறை ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 0711842424

## தவறிவிட்டது

VN - 7349 என்னும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் தகடு சந்நிதிக்கும் கோப்பாய் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடனும், தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)

முகவரி: A9 வீதி, மட்டுவில் பெற்றோல் செற், மட்டுவில்.

T.P. 0779582506

## வேலையாள் தேவை

பேக்கரி வேலையில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

விரும்பியோர் நேரில் வருகைதரவும்.

தொடர்பு: புதிய துர்க்கா வெதுப்பகம்,
கலைவாணி லேன்,
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## CHEMISTRY COURT

(80, ARASADY ROAD, JAFFNA)

CHEMISTRY A/L 2014

English Medium

SAT, SUN - (7.00 - 8.00) Am

**By. RAJAH.**

## லீசிங் வசதிகள்

உங்களுக்கு அவசியமான லீசிங் ஒரு மணித்தியாலத்திற்குள் எந்தவொரு ஆவணங்களும் அவசியமில்லை. அவசியமானது வாகனப்புத்தகம் மாத்திரமே 60% வரை லீசிங் கொடுப்பனவு பதிவு செய்யப்படாத வாகனத்திற்கு விசேட சலுகை. அழைத்தவுடன் உங்களுடைய வீட்டிலோ அல்லது காரியாலயத்திலோ எங்களுடைய சேவையைத் தொடருவோம்.

மேலதிக விவரங்களுக்கு


077 7696991
021 4922455

களுதோட்ட பினான்ஸ் (தனி) நிறுவனம்,
ஆஸ்பத்திரி வீதி,
மார்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(12765)(45)

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 18 ★ 07 ★ 1933



உதிர்வு 24 ★ 12 ★ 2004

### அமரர் கணபதிப்பிள்ளை குணசிங்கம்

திதி: திரயோதசி (07.01.2012)

அப்பா என்ற வார்த்தைக்கு
இலக்கணமாக விளங்கி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்தெற்கு
எமக்கு நல் வழி காட்டிய
அன்புத் தந்தையே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிராத்திக்கின்றோம்.


44/2,
மணல்தரை,
கந்தர் மடம்.

பிள்ளைகள்.

(12561) 45)

## நினைவலைகள்

20 ஆம் ஆண்டு



வாரி இராஜகிளி

மண்ணில் 19.04.1941
விண்ணில் 14.01.1992

3 ஆம் மாதம்



இராஜகிளி பரஞ்சோதி

மண்ணில் 01.05.1941
விண்ணில் 09.10.2011

பப்பா ஆண்டுகள் இருபது சென்றென்ன ஆனால் அம்மா நீங்கள் இல்லாத
குறை தெரியாமல் நேசத்துடனும் பாசத்துடனும் வளர்த்து வந்தார்
ஆனால் இன்று அம்மாவும் எங்களை விட்டுப் பிரிந்து மூன்று மாதங்கள் சென்றன
என்றும் ஈரவிழிகளுடன் உங்கள் நினைவில் வாழும்

656, கண்டி வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம். (12768)(5,6)

சுரேஸ் (மகன் - இத்தாலி)
மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கதிர்காமு கந்தவனம்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம்.)



கரணவாய் தெற்கு, வீரபத்திராயனைப் பிறப்பிடமாகவும் கப்புதூ கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தவனம் 05.01.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - தெய்வானை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் - வேதநாயகி தம்பதியரின் பாசமிகு மருமகனும், தங்கம்மாவின் (ஓய்வுபெற்ற அதிபர், யா/கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம்) அன்புக் கணவரும் செல்லையா (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்), சபாரட்ணம் (இதே தினம் அமரரான பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தவராசா (லண்டன்), தவமலர் (அதிபர், யா/கப்புதூ ஏகாம்பர வித்தியாலயம்), காலஞ்சென்ற தவக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகுமாரன் (தொழில்நுட்ப உதவியாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை- பருத்தித்துறை), புஸ்பலீலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் நெஷாந்தன் (லண்டன்), நிலுயா, நிரோஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கப்புதூ இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஜெயமலர் அகம்',*
*கப்புதூ, கரவெட்டி.*

தகவல்:
அ. ஜெயக்குமாரன்
(மருமகன் - RDA பருத்தித்துறை)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
20 ✻ 04 ✻ 1940

மறைவு
08 ✻ 12 ✻ 2011

### அமரர் இராமலிங்கம் தளையசிங்கம்


08.12.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியையிற் கலந்து துயரைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அவரது இல்லத் தில் இன்று (07.01.2012) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் வீட்டுக் கிருத்தியமும் அதனைத் தொடர்ந்து மதிய போசனமும் இடம் பெறும். இந் நிகழ்வில் நேரில் அழைப்பைப் பெற்றுக் கொள்ளாதவர்களும் இதைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி நிகழ்வில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]தெனியடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.(சி/7733)(2-6-7)

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டம் சமநிலையில்



யாழ்ப்பாணம், ஜன-07


வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வவுனியா வைரவப்புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்ஒளியில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் மருதநிலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்ட ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணிகளும் மிகுந்த உற்சாகத்தோடு களம் இறங்கின. இதனால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.

10 நிமிடத்தில் மருதநிலா அணி தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டது. பதிலுக்கு ஈகிள் விளையாட்டுகழக அணி அபாரமாக ஆடியது. முதல்பாதி ஆட்டம் முடிவிற்கு 10 நிமிடம் இருக்கையில் ஈகிள் விளையாட்டுக்கழக அணி தனது முதலாவது கோலைப் போட்டது. இரண்டு அணிகளும் தலா ஒரு கோலினைப் பெற்றதினால் முதலாம்பாதி ஆட்டம் சமநிலையில் முடிவ டைந்தது. இரண்டாம் பாதி ஆட் டத்தில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

# வெற்றி பெற்ற அணிகள்




யாழ்ப்பாணம், ஜன 07

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்ஒளியில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

இதில் செவ்வாய்க்கிழமை இடம் பெறவிருந்த மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோத விருந்தது.

இதில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மைதானத்திற்கு சமூகம்தராமையால் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

புதன் கிழமை இடம்பெறவிருந்த நான்காவது காலிறுதியாட்டத்தில் கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவிருந்தது.

இதில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மைதானத்திற்கு சமூகம் தராமையால் கே.கே.எஸ். விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றி வழங்கப் பட்டது. (த-23)

# தேசிய சதுரங்க அணிக்கு வீரர்கள் தெரிவு கொழும்பில்



யாழ்ப்பாணம், ஜன, 7

இலங்கைச் சதுரங்கசம் மேளனம் நடத்தும் 2012ஆம் ஆண்டுக்கான தேசிய சதுரங்க அணிக்கு வீர, வீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்கான நேவில் பிரிவு சதுரங்கப் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பு றோயல் கல்லூரியில் ஆரம்பமானது.

இன்று சனிக்கிழமை வரை இந்தப் போட்டி நடைபெறுகின்றது. இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து 10 வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். (த-23)

## விளையாட்டுப் போட்டி ஏற்பாட்டுக் கூட்டம்

வலிகாமம் கல்வி வலயமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 2012ஆம் ஆண்டுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகளுக்கான கூட்டம் எதிர் வரும் 12ஆம் திகதி வியாழக் கிழமை பிற்பகல் 1மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி விசேட கல்வி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

வலிகாமம் பாடசாலைகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

# கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

ஊர்காவற்றுறை, ஜன, 7

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்கள் கடந்த புதன்கிழமை விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது. கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விளையாட்டு உபகரணங்களை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரிஅலன்ரீன், விளையாட்டுக் கழக நிர்வாகிகளிடம் கையளித்தார். (த-251)



அமரர் றொகான் இராஜசிங்கம் ஞாபகார்த்தக்கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியினர் நடத்திய கோல் மழை கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வெற்றியீட்டிய நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி வீரர்கள். (எ-23)


# பாராட்டி வாழ்த்துகிறோம்



வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை பிரதேச செயலாளராக இருந்து
கரவெட்டி பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள

## இராஜரட்ணம் வரதீஸ்வரன்

அவர்கள்
இப்பிரதேசத்துக்கு
ஆறரை ஆண்டுகாலம்
ஆற்றிய அளப்பரிய சேவையைப்
பாராட்டி வாழ்த்துவதுடன், இவர் மேலும் பல பதவிகள்,
பதவியுயர்வுகள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.



வடமராட்சி வடக்கு பிரதேச
பொது அமைப்புக்கள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு மரண அடி

இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 68 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய 2 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

சிட்னியில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள இந்திய துடுப்பாட்ட வீரர்கள் திணறினர். டோனியின் அரைச்சதத்தின் உதவியுடன் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 191 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. டோனி ஆட்டமிழக்காமல் 57, சச்சின் 41 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். ஆஸ்திரேலிய பந்துவீச்சாளரகளில் ஜேம்ஸ் பற்றின்சன் 43 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை வீழ்த்தினார். ஹில்பென் ஹாஸ் 51 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் பீட்டர் சிடில் 55 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி கிளார்கின் முச்சதத்தின் உதவியுடன் 4 இலக்குகளை இழந்து 659 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் கிளார்க் 329, ஹஸி 150 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும், பொண்டிங் 134 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சகீர் 122 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சர்மா 144 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.


பதிலுக்கு 468 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணி நேற்று முன்தினம் ஆட்டநேர நிறைவில் 2 இலக்குகள் இழப்பற்கு 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் கம்பீர் 69, சச்சின் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு கடுமையாகப் போராட வேண்டிய நிலையில் நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய அணி 168 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது மூன்றாவது இலக்கை பறிகொடுத்தது. கம்பீர் 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 'போமின்றி' தவித்து வரும் லக்ஸ்மன், சச்சினுடன் இணைந்து போராட்டத்தை தொடர்ந்தார். சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய சச்சின் 65 ஆவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். மிகவும் பொறுமையாகவும் நிதானமாகவும் இரு அனுபவ வீரர்களும் துடுப்பெடுத்தாடினர். இந்தத் தொடரில் சாதிக்காத லக்ஸ்மன் நேற்றைய தினம் தனது அரைச் சதத்தை கடந்து அசத்தினார். நான்காவது இலக்குக்காக 103 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் டெண்டுல்கர் 80 ஓட்டங்களுடன் கிளார்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து லக்ஸ்மன் அணி 276 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் நுழைந்த ஹோக்லி 9, அணித் தலைவர் டோனி 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 286 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்தது. அதன் பின்னர் இணைந்த தமிழக வீரர் ரவிசந்திரன் அஸ்வின், சகீர் இந்தியாவை தூக்கி நிறுத்தப் போராடினர். இவர்களின் போராட்டத்தால் இந்திய அணி 300 ஓட்டங்களைத் தாண்டியது. எட்டாவது இலக்குக்காக 56 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் அதிரடியாய் துடுப்பெடுத்தாடிய சகீர் 26 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த இசாந் சர்மாவும் பொறுமையாக ஆட மறு முனையில் அஸ்வின் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார்.

ஒன்பதாவது இலக்குக்காக 42 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் இசாந் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இறுதியில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய அஸ்வின் முதலாவது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். அஸ்வினும் 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 110.5 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 400 ஓட்டங்களைப் பெற்று இன்னிங்ஸாலும் 68 ஓட்டங்களாலும் தோல்வியை அரவணைத்துக் கொண்டது. ஆட்ட நாயகனாக முதலாவது முச்சதம் குவித்த கிளார்க் தெரிவானார். (15)



# மீண்டும் நுவான் குலசேகரா





தென்னாபிரிக்காவுடன் நடைபெறவுள்ள சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியில், வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர இணைக்கப்பட்டுள்ளார். நான்கு மாதங்களுக்குப் பின்னர் நுவான் குலசேகர அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

அணியின் தலைவராக திலகரட்ன டில்ஷானும், உப தலைவராக அஞ் சலோ மத்தியுஸும் நியமிக்கப்பட் டுள்ளனர். குமார் சங்ககார, மஹேல ஜயவர்தன ஆகிய் சிரேஷ்ட வீரர்களும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

உபுல் தரங்க, லசித் மலிங்க, ரங்கன ஹேரத், அஜந்த மென்டிஸ் மற்றும் கோசல குலசேகர ஆகியோரும் ஒரு நாள் தொடருக்கான இலங்கை அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இளைய வீரர்களான தினேஷ் சந்திமால், திஸர பெரேரா ஆகியோரு டன் தம்மிக்க பிரசாத், தில்ஹார பெர்ணான்டோ மற்றும் லஹிரு திரு மான்ன ஆகியோரும் 15 பேர் கொண்ட இலங்கைக் குழாமில் இணைக்கப்பட்டுள்ளனர். (15)

# விரலாட்டியதால் வந்த வினை




ஆஸ்திரேலியாவுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தின்போது கை நடுவிரலை உயர்த்தி ரசிகர்களிடம் கோபத்தை வெளிப்படுத்திய இந்திய கிரிக்கெட் வீரர் வீரட் ஹோக்லிக்கு ஆட்ட ஊதியத்தின் 50 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

சிட்னியில் நடைபெற்ற ஆட்டத்தின் இரண்டாவது நாளில் இவ்வாறு அவமரியாதையாக நடந்து கொண்டார் ஹோக்லி. நேற்று முன்தினம் காலை ஆட்ட மத்தியஸ்தரான ரஞ்சன் மடுகல்ல இது தொடர்பாக விசாரணை நடத்தினார்.

அணி முகாமையாளர் ஷிவ்லால் யாதவ் சகிதம் விசாரணையில் பங்குபற்றிய ஹோக்லி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதையடுத்து அவருக்கு ஊதியத்தின் 50 சதவீதத்தை அபராதமாக விதித்தார் ரஞ்சன் மடுகல்ல.

எல்லைக்கோட்டின் அருகே ஹோக்லி களத்தடுப்பிலிருந்தபோது மேற்படி சம்பவம் நடைபெற்றது. தான் முன்னெப்போதும் கேட்டிராத வகையில், ரசிகர்கள் தன்னை மிக அவதூறான வார்த்தைகளால் பேசியதாக ஹோக்லி தெரிவித்துள்ளார். 'கிரிக்கெட் வீரர்கள் இப்படி பதிலடி கொடுக்கக்கூடாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், உங்கள் தாயாரையும் சகோதரியையும் பற்றி மோசமாக பேசும்போது என்ன செய்வது?' என்று ஹோக்லி கூறியுள்ளார். (15)

## அரையிறுதியில் இந்தியா

இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஷ் பூபதி-ரோஹன் போபண்ணா, லியாண்டர் பயஸ்-செர்பியாவின் டிப்சரேவிச் ஜோடி அரையிறுதிக்கு முன்னேறியது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற காலிறுதியில் பூபதி - போபண்ணா ஜோடி 6-4, 7-6 (3) என்ற செட் கணக்கில் சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்கா-ஜேர்மனியின் ஆன்ட்ரியாஸ் பெக் ஜோடியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. இந்த ஜோடி அரையிறுதியில் இஸ்ரேலின் எர்லிச்-ஆன்டி ராம் ஜோடியை சந்திக்கிறது.

பயஸ்-டிப்சரேவிச் ஜோடி 6-3, 6-4 என்ற நேர் செற்களில் இத்தாலியின் பேபியோ போகினி -ஸ்லோவேகியாவின் செலினாய் ஜோடியை வீழ்த்தியது. பயஸ்-டிப்சரேவிச் ஜோடி அரையிறுதியில் அமெரிக்காவின் ஸ்காட் லிப்ஸ்கி-ராஜீவ் ராம் ஜோடியை சந்திக்கிறது. (15)

## சத்தியமாய் சதம் பற்றி சிந்தனையில்லை

100 ஆவது சதத்தைப் பற்றிய சிந்தனையின்றி ஆட்டத்தை மிகவும் ரசித்து விளையாடுவதற்கே முன்னுரிமை கொடுக்கிறேன் என்று சச்சின் சத்தியம் செய்யாக் குறையாகத் தெரிவித்துள்ளார். சச்சினின் 100 ஆவது சதத்தை எதிர்நோக்கி உலகம் முழுவதிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் காத்திருக்கும் நிலையில், அவர் மேலும் கூறிய தாவது,

100 ஆவது சதம் என்பது வெறும் எண் ணிக்கைதானே என்று சொல்வது எளிது. ஆனால் அதை அடிப்பது கடினம். 100 ஆவது சதம் குறித்து பெரிய அளவில் எதிர்பார்ப்பு உள்ளது.

ஆனால் நான் ஆட்டத்தை ரசித்து விளை யாடவே விரும்புகிறேன். ரசிப்புத் தன்மை மிக வும் முக்கியமானது என்று நினைக்கிறேன். இந்தத் தொடரைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சியோடு விளையாடுவதிலும், வெற்றிபெறுவதி லுமே முழுக் கவனமும் உள்ளது என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரை பறிகொடுத்த இலங்கை

தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி பத்து இலக்குகளால் இலங்கையை வெற்றி கொண்டதன் மூலம் 2 - 1 என்ற கணக்கில் 3 வருடங்களின் பின்னர் சொந்த மண்ணில் தொடரை கைப்பற்றியது. சமரவீரவின் முயற்சியால் இலங்கை அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது.

இலங்கை தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஹேப்ரவுனில் ஆரம்பமானது: நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் ரி.எம்.டில்ஷான் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி கலிஸின் இரட்டைச் சதத்தின் உதவியுடன் 4 இலக்குகளை இழந்து 580 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. கலிஸ் 224, டீ வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 160, பீற்றர்ஸன் 109 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கையின் சார்பில் தம்மிக்க பிரசாத் 2, வெலகெதர, ஹேரத் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 239 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் டில்ஷான் 78, சங்ககார, சந்திமால் தலா 35 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். தென்னாபிரிக்க அணி சார்பில் ஸ்ரெயின், பிளென்டர் தலா 3, தகீர், மோர்கல் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

'பலோ ஒன்' நிலையில் 341 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை இலங்கை தொடங்கியது. நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவில் இலங்கை அணி 4 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் சமரவீர 19, மத்தியூஸ் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். முன்னதாக திரிமன்னே 30, டில்ஷான் 5, சங்ககார 34, ஜெயவர்தன 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தனர்.


இன்னிங்ஸ் தோல்வியின் விளிம்பில் இலங்கை நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்தது. மத்தியூஸும், சமரவீரவும் இணைந்து இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கப் போராடினர். மிக மெதுவாக ஓட்டங்களைச் சேர்த்தது இலங்கை. மதியபோச இடைவேளைக்கு முன்பதாக இருவரும் தமது அரைச்சதங்களை பூர்த்தி செய்தனர். அத்துடன் இலங்கை அணி 200 ஓட்டங்களைத் தாண்டியிருந்தது.

மதிய போச இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படுகையில் 4 இலக்கை இழந்து 220 ஓட்டங்களை இலங்கை பெற்றிருந்தது. சமரவீர 64, மத்தியூஸ் 58 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். இருப்பினும் மீண்டும் ஆட்டம் ஆரம்பமாகியதும் இலங்கையின் சரிவு தொடங்கியது. மத்தியூஸ் 63, தொடர்ச்சியாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி வரும் சந்திமால் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். இலங்கை தொடர் இழப்புகளையடுத்து 248 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது.

அதன் பின்னர் சமரவீரவுடன், பெரேரா இணைந்து துடுப்பாட்டத்தை தொடர்ந்தார். பெரேரா வேகமாக ஓட்டங்களை எடுத்தார். இவர்களது இணைப்பில் அணி 300 ஓட்டங்களைத் தாண்டியது. 56 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் பெரேரா 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த ஹேரத் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் தம்மிக்க பிரசாத் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார்.

மறு முனையில் இலங்கையின் இன்னிங்ஸ் தோல்வி தவிர்ப்புக்காக போராடிய சமரவீர சதம் கடந்து அசத்தினார். இறுதியில் இலங்கை அணி 107.5 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 342 ஓட்டங்களைப் பெற்றது. சமரவீர ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் தென்னாபரிக்கா சார்பில் பிளென்டர், தகீர், கலிஸ் தலா மூன்று இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு இரண்டு ஓட்டங்களை வெற்றியிலக்காக் கொண்டு துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்க அணி. பீற்றர்ஸன், ஸ்மித் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். தம்மிக் பிரசாத் முதலாவது பந்தை முறை தவறிய பந்தாக வீச பீற்றர்ஸன் அதனை நான்கு ஓட்டங்களுக்கு தட்டி விட தென்னாபிரிக்க அணி பத்து இலக்குகளால் வெற்றியை பெற்றது. ஆட்ட நாயகனாக கலிஸும், தொடர் நாயகனாக டீ வில்லியர்ஸும் தெரிவானார்கள். (15)



# வடக்கு மாகாண வீரர்களின் ஊர்சுற்றும் போட்டி இன்று

## வன்னி மாவட்ட வீரர்களும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜன 7

2012 ஆம் ஆண்டுக்கான வட மாகாண ஊர்சுற்றும் போட்டி இன்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் தலைமையில் இடம் பெறவுள்ளது.


இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து ஆண்கள் 10 பேரும் பெண்கள் 6 பேரும் பங்குகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர் மார்க் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் வீர,வீராங்கனைகள் 29 ஆம் திகதிகளுத்துறையில் நடைபெறும் தேசிய மட்ட ஊர் சுற்றும் போட்டியில் கலந்து கொள்வர் என்று வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஊர் சுற்றும் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பயிற்சிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த பல வருடங்களாக இந்தப் போட்டியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட வீரர்கள் கலந்துகொள்ளாத போதும் இம்முறை பங்குபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86-23)



இலங்கை கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட கறுப்பு பட்டியினருக்கான பரீட்சையில் சித்தியடைந்த இலங்கை கராத்தே சம்மேளன தலைவர் சென் சேய் அஜித் அபயசேகரவிடம் கறுப்புப் பட்டியையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுடன் இலங்கை கராத்தே சம்மேளன தொழில்நுட்ப பணிப்பாளர் சிசிர குமார மற்றும் சென்சேய் மா.இரத்தினசோதி ஆகியோர் உள்ளனர். (த-23)

## துடுப்பாட்டத்தில் பங்கு கொள்ளலாம்

யாழ்ப்பாணம்,ஜன.7

ஏழாலை கண்ணகி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் 9பேர் பங்கு கொள்ளும் 10 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-23)

## அராலி சரஸ்வதி ம.வியின் வலைப்பந்தாட்டம் இன்று

வலி வடக்கு, ஜன, 07

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி சங்கானை கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இப் போட்டிகள் கடந்த மாதம் நடத்தப்படுவதாக இருந்த போதிலும் காலநிலை காரணமாகத் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டு தற்போது நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-86)

## போட்டி நிரல் தயாரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.7

தீவகக் கல்வி வலயத்தால் 2012 ஆம் ஆண்டுக்கான பெரு விளையாட்டு, உள்ளக விளையாட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கெனப் போட்டி நிரல்கள் தயாரிக்கும் நிகழ்வும் திட்டமிடல் கூட்டமும் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் தீவக கல்வி வலயக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தக் கூட்டத்தில் உடற்கல்வி ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

***

வவுனியா, ஜன.7

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான குழுநிலைப் போட்டிக்கான ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

(ம-23)

ஜனவரி 21, 22 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சைக்கான (SLAS) வழிப்படுத்தல் விரிவுரைகள்

ஆரம்பம் : 08/01/2012 ஞாயிறு
இடம் : புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
நேரம் : பி.ப 1 மணிமுதல் 5 மணிவரை (உங்கள் வசதிக்கேற்ப நேர அட்டவணை வழங்கப்படும்)

பொது அறிவு : வே.தபேந்திரன்
பொது உளச்சார்பு : ரி.தர்மேந்திரா
முகாமைத்துவ உளச்சார்பு : விரிவுரையாளர்
கட்டுரையும் சுருக்கமும் : விரிவுரையாளர்

+ பல்லூடக எறிகருவி மூலம் விளக்கப்படங்களாக கற்பிக்கப்படும்.
+ மாதிரி வினாவிடைகள் அச்சடித்த பாடக்குறிப்புக்கள் வழங்கப்படும்.
+ மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும்.

ஒழுங்கமைப்பு : ஆறுதல், இலங்கை

காணி விற்பனைக்கு

கொடிகாமம் கோயிலாமனையில் A9 வீதியிலிருந்து 1/4 மைல் தொலைவில் 28 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு
011 3158758 / 0770655835

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

சிறுவர் பராமரிப்பாளர் வெற்றிடங்கள் (பெண்கள்)

சர்வதேச SOS சிறுவர் கிராமத்தின் அனுசரனையுடன் யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் SOS சிறுவர் கிராமத்திற்கு சிறுவர்களை குடும்ப சூழ்நிலையில் பராமரிப்பதற்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், திருமணமாகாத 30-40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரியுடனோ தொலைபேசி மூலமோ தொடர்புகொண்டு எதிர்வரும் 11.01.2012 புதன்கிழமைக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

திரு.அருச்சுணன் சுவாமிநாதன்
உதவிப் பணிப்பாளர்
எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்
இல: 276, கனகரட்ணம் வீதி
நல்லூர்.

தொலைபேசி இல : 077-2366106, 077-3116602, 077-0337959
மின்னஞ்சல் : arjunan.swaminathan@sossrilanka.org

விசேட இலவசக் கருத்தரங்கு

SEC இன் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

UK, France, German, Switzerland, Italy, Poland, Rusia, Cyprus Canada மற்றும் U.S.A. போன்ற நாடுகளுக்கு செல்பவர்களுக்கு VISA பெறுவதற்கான விசேட இலவசக் கருத்தரங்கானது எமது நிறுவனத்தின் (SEC) அனுபவமிக்க சட்ட ஆலோசகர்களால் இம் மாதம் 8, 9, 10 ஆம் ஆகிய தினங்களில் நடைபெறும் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

VISIT VISA

Visa பெறுவதற்கு முன்பு எதுவித முற்பணமும் அறவிடப்படமாட்டாது

* London இல் உறவுகள் இருந்தால் 100 % விசா உத்தரவாதம்
* நீங்கள் தனிநபர் or கூட்டு வியாபாரம் சான்றிதழ் வைத்திருக்கின்றீர்களா?
* நீங்கள் புது மணத் தம்பதியினரா?
* அரச உத்தியோகத்தரா?



புத்தாண்டில் (2012) Family Visa பெற்ற குடும்பத்தினர்

கோண்டாவில், யாழ்ப்பாணம்.

Student Visa

* A/L பெறுபேறுகள் வெளிவந்த மாணவர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம்
* O/L இல்லாத 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் புது விதிக்கமைய Visa பெற்றுக் கொடுக்கப்படும்.
* IELTS அவசியம் இல்லை (Condition Apply)
* ஏற்கனவே Visa பெற்றவர்களின் உறவினர்களிடம் கலந்துரையாடும் வசதி

கடந்த ஆண்டில் Visa பெற்ற மாணவர்களில் சிலர்



Logarajani Jaffna | S.Jasotharan (Pointpetro) | Thanusiya Jaffna | Kesavan Jaffna | Thaskumar Jaffna | Suthagara[illegible] Thellippa[illegible]

உங்களை நம்புகின்றோம் எங்களை நாடுங்கள்!!!

காலம் : இம் மாதம் 8, 9, 10 (ஞாயிறு, திங்கள், செவ்வாய்) ஆம் ஆகிய தினங்களில் காலை 9.00 am to 5.00 pm

இடம்: SEC VISA Tech
620 K.K.S. Road, Jaffna.
(நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக)

Hot Line: 021 222 0[illegible]
07710229[illegible]
07778871[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்களையும் அரவணைத்துச் செல்ல வலியுறுத்து

2009 மே மாதத்தில் போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையில் வாழும் அனைத்து இனங்களும் தமது கடந்த காலத்தை மீள் பரிசீலனை செய்வது முக்கியம் என கருத்துத் தெரிவித்துள்ள புத்திஜீவிகளின் ஒருசாரார் எந்தவொரு நிரந்தர தீர்வையும் பெறுவதற்கு முஸ்லிம்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் அறிக்கை ஒன்றை நேற்று விடுத்தனர். 71 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு விடுக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எமது கடந்த கால செயற்பாடுகளின் மீதான ஒரு விமர்சன ரீதியான சுய பார்வையின் மூலமாகவே அரசின் முன்னும் சிவில் சமூகத்தின் முன்னும் இன்று தீர்வை வேண்டி நிற்கும் பிரதானமான விடயங்கள் பற்றி எதிர்காலத்தில் கருத்தாழம் மிக்க வழிமுறைகளில் நாம் சிந்திக்க முடியும்.

போர் தீர்க்கமாகமுடிவுற்ற போதிலும், இனப்பிரச்சினைக்கான முடிவு இன்னமும் தென்படவில்லை. இனப்பிரச்சினையானது குறுகிய மற்றும் நீண்ட காலத் தீர்வுகளை வேண்டி நிற்கிறது. பெரும்பான்மைவாத அரசிடமிருந்து ஒரு நீடித்திருக்கக் கூடிய தீர்வைப் பெறுவதற்கான தேடுகையில் தமிழ்ச் சமூகம் இன்று பிரதானமாகக் கரிசனை கொண்டுள்ளது.

இராணுவ மயமாக்கத்தினால் தொடரும் பாதுகாப்பற்ற நிலைமை ஓர் உடனடிக் கவனமாக அமைந்துள்ளது. ஆயுதப் போராட்டமும், வன்முறை நிறைந்த அரசியற் கலாசாரமும் சமூகத்தின் ஜனநாயகக் கட்டமைப்புக்களை மேலும் சிதைவுக்குட்படுத்தியுள்ளன. மீள்குடியமர்வு, மீள்நிர்மாணம் போன்ற விடயங்கள் இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக உள்ளன. காணிப் பகிர்வு, அரச மற்றும் சமூக வலையமைப்புக்களினைத் தொடர்புகொள்ளுதல், மொழி சமத்துவம், அதிகாரப் பகிர்வு, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், பால், வர்க்க, மற்றும் சாதி அடிப்படையிலான அடுக்கமைவுகளின் தொடரும் இருப்பு போன்றன இன்றைய அரசியல் நிலவுருவின் பகுதிகளாக விளங்குகின்றன.

இந்த வகையில் 21 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த முஸ்லிம் மக்களின் வெளியேற்றம் தொடர்பான விடயத்தை நாம் இங்கு எழுப்புகின்றோம்.

போர் நிறுத்த ஒப்பந்த காலப்பகுதியில் இருந்து முஸ்லிம் மக்கள் வடக்கில் உள்ள தமது தாயகங்களுக்கு படிப்படியாகத் திரும்பத் தொடங்கியிருந்த போதிலும், அவர்கள் மீளத் திரும்புவதற்கு உகந்த சூழல் அமைந்திருக்கவில்லை. மீளத்திரும்பியவர்கள் அரசிடமிருந்து குறைந்த பட்ச உதவிகளைக் கூடப் பெறமுடியவில்லை. மேலும் அவர்கள் நிர்வாக மையங்களின் விரோதப் போக்குகளுக்கும் முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

முஸ்லிம் மக்களின் பண்பாடு மற்றும் நிறுவனங்கள் கடந்த 20 ஆண்டுகளாக இல்லாமற் போனமை அவர்களின் மீள்வருகையினை வட பகுதியில் உள்ள சமூகங்கள் குறைந்த அளவிலேயே ஏற்றுக்கொள்கின்ற தன்மையினை ஏற்படுத்தியிருப்பதுடன், திரும்ப வரும் மக்களுக்கு இடராகவும் அமைகின்றது.

போரின்போதும், போரின் பின்னரும் தமிழ் சமூகம் மிகுந்த உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கின்றது என்பதனை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, அதே போன்ற இடர்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்ட வட பகுதியில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் நிலையினை நாம் நினைவில் நிறுத்துவது அவசியமானது.

முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை கடந்த முப்பதாண்டு காலத் தமிழ்த்தேசிய அரசியல் பரப்புரையின் குறுகிய நோக்குடைய, பிற சமூகங்களினை ஒதுக்கித்தள்ளும் பாங்குடைய உந்துகையின் மிகவும் மோசமான எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும். எங்களுடைய சிவில் மற்றும் அரசியற் தலைமைகள் இதனை விளங்கிக் கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ தவறியமை, கடந்த காலத்தினையும், எம்மத்தியில் வாழும் சிறுபான்மையினர் தொடர்பாக எமக்கு உள்ள தார்மீக மற்றும் அரசியல் பொறுப்புகளையும் நாம் நியாயபூர்வமான முறையில் அணுகுவதிலிருந்து எம்மை தடுத்துவிட்டது.

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான உறவுகள் துருவப்பட்டுப் போவதற்கு நாம் எவ்வாறு காரணங்களாக இருந்திருக்கிறோம் என்பது பற்றிய ஒரு சுய்விசாரணை 30 ஆண்டு காலப் போரின் முடிவின் பின்னரும் கூட எம் மத்தியில் உருவாகவில்லை.

அரசியல் அதிகாரப் பகிர்வு, சமவுரிமை என்பன அனைத்து சிறுபான்மை சமூகங்களுக்கும் உரித்தான விடயங்கள் என்பதனையும், தமிழ் சமூகத்துக்கு மாத்திரமே உரித்தான ஏனையோரைக் கருத்திற் கொள்ளாத ஒரு அரசியற் தீர்வு இல்லை என்பதனையும் நாம் இப்போதாவது உணர்ந்து கொள்ள வேண்டும். நீடித்திருக்கக் கூடிய ஓர் அரசியற் தீர்வினை அடைவதற்கு இனங்களுக்கு இடையில், குறிப்பாக தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே, நல்லிணக்கமும் உரையாடலும் அவசியமான செயற்பாடுகளாகும்.

இதற்கான ஒரு படியாக முஸ்லிம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமைக்கு எதிராகப் பகிரங்கமான எதிர்ப்பு வெளியிடப்படல் வேண்டும். இந்தப் பலவந்த வெளியேற்றம் போன்ற ஒரு வெறுக்கத்தக்க செயல் எம்மத்தியில் இனிவருங் காலங்களில் ஒரு போதும் நிகழமாட்டாது என நாம் முழுமனதுடன் கூறவேண்டும். இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை நாம் ஒரு போதும் குற்றம் எனக் கருதாது இருக்க மாட்டோம் எனக் கூறவேண்டும். இந்த சம்பவத்தையும், அதன் தொடர்ச்சியையும் மீள்நோக்க வேண்டிய அதே வேளை, உரையாடல்களை ஏற்படுத்தவும், வடக்கில் முஸ்லிம் மக்களின் இலகுவான மீள்திரும்புகைக்கும், மீள்குடியமர்வுக்கும் உதவும் வகையில் பல்லின சமூகங்களை உள்ளடக்கிய பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்துதல் அவசியமானது - என்றுள்ளது.

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி பரமசாமி (ஐயாத்துரை)



மண்டைதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பரமசாமி நேற்று (06.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மாரிமுத்து தம்பதியரின் மகனும் புனிதவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சிவக்கொழுந்து, தர்மலிங்கம், இலட்சுமி அம்மா மற்றும் மகேசன், கனகாம்பிகை ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பத்மராசன் மற்றும் புஸ்பராசன், முரளிதரன் ஆகியோரின் தந்தையும் பிரதீபா, துஸ்யந்தன் ஆகியோரின் மாமனாரும் மானுஷா, ஷானுயா மற்றும் காலஞ்சென்ற யனுஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2012) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் அல்லைப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் வட்டாரம்,* தகவல்:
*அல்லைப்பிட்டி.* குடும்பத்தினர்.

### கந்தையா மனோகரன்



கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மனோகரன் (05.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானாம்பிகை பத்மநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கரத்தினம் தம்பதியரின் அருமை மகனும் மூத்ததம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகனும் மகேந்திரன் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், புனிதவதி, மணிவாசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் லவக்குமாரன் (கனடா), மைதிலி(கொக்குவில்), மனோகரி(லண்டன்), சோபனா, மணிவாசகன், நிரோஜன், அபிராமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமுதா (கனடா), பரராசசிங்கம்(டோகா), சிவாகரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ருஷாந்தன், அகில்ராஜ், குகப்பிரியா(லண்டன்), தனுஷ் (லண்டன்), அஸ்விகா (கனடா), அஸ்வின்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் விமலா, குகராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தானம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி,* தகவல்:
*நாவற்குழி.* குடும்பத்தினர்.

## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன.7

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 87 ஆவது பிறந்த நாளும் அறக்கொடை விழாவும் சிவத்தமிழ் விருது வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சைவத்துக்கும் தமிழுக்கும் கலைக்குமாக பாடுபட்ட பேராளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

## ஜனாதிபதியின் நற்பெயருக்கு படையினரால் களங்கம்

கொழும்பு, ஜன.7

மானிப்பாய் கோவில்பற்று பகுதியில் அந்தணரின் வீட்டில் பிறந்தநாள் கொண்டாட்ட ஆயத்த வேளையில், வீட்டுக்காரரை முகாமுக்கு அழைத்து பாதுகாப்புப் படையினர் ஆடம்பரமாகப் பிறந்தநாள் கொண்டாட வேண்டாம் என்று அறிவுறுத்தியது ஜனநாயக ரீதியாக ஏற்றுக்கொள்ளமுடியாதது. இவ்வாறு ஜனாதிபதியின் இந்து மத அலுவல்கள் விவகார இணைப்பாளர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக்குருக்கள் பாபுசர்மா இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

படைத்தரப்பினர் நடந்துகொண்ட விதம் வடக்கின் வசந்தம் என்ற செயற்பாட்டில் இறங்கியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பத்தக்கது அல்ல என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த விவகாரம் தொடர்பாக ஆளுநர் சந்திரசிறி, அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளார். (ஒ)


## தேவை

பொருள்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு வீடு அல்லது கட்டடம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0771807672

## கார் வாடகைக்கு உண்டு



திருமண வைபவங்கள் மற்றும் அதிவிசேட வைபவங்களுக்கான புத்தம் புதிய 2011 HYBRID கார் (வெள்ளை நிறம்) வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: S.மகன்

077 7289283, 077 8096873

## யாழ். பிரதேச வணிகர்களுக்கு ஓர் நற்செய்தி

இணையத்தளத்தினூடாக உலகம் எங்கும் பொருள்கள், சேவைகளைச் சந்தைப்படுத்தும் நிறுவனமானது யாழ். வணிகர்களின் பொருள்களையும் சந்தைப்படுத்த முன்வந்துள்ளது.சந்தைப்படுத்தும் பொருள்களாக இலத்திரனியல்/ புடவை/ கைபேசி/ மிதிவண்டி/ தளபாடம்/ மருத்துவ உபகரணங்கள்/ ஒளிப்படம் ஏனையவை.

தொடர்பு: info@ideliver.lk

0771532377


## மரண அறிவித்தல்கள்

### கனகம்மா குழந்தைவேலு



புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மயிலுலேன் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கனகம்மா குழந்தைவேலு கடந்த (03.01.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் வியாழாட்சி தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற குழந்தை வேலுவின் அன்பு மனைவியும் தங்கம்மா, சுப்பையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பரிமளம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், முத்துமாரி, சிவானந்தலிங்கம், காலஞ்சென்ற குமாரவேலு, சீவரெத்தினம், வடிவாம்பிகை, உமாதேவி, சிவராசா, சிவனேஸ்வரி, கேமலதா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற துரைராசா மற்றும் அன்னலெட்சுமி, சந்திரமதி, காலஞ்சென்ற செல்லையா, சிறிகாந்தா, ஜானகி, நடேசன், வினாசித்தம்பி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலுலேன்,* *தகவல்: சிவலிங்கம்*
*ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.* *(சம்பந்தி).*

### முருகையா ஜதீஸ்



மூளாயை பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா ஜதீஸ் (05.01.2011) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் முருகையா - சறோசாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலம்சென்ற சிதம்பரநாதன் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் லலிதாவின் அன்புக் கணவரும் பிரவீனா, உமாசுதன், சுதர்சனா ஆகியோரின் சகோதரனும் தர்மினி, யோகராசா, காலஞ்சென்ற ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2012) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மூளாய் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் தெற்கு,* தகவல்:
*சுழிபுரம்.* குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் பயணத்தில் தாமதம்; பயணிக்கு வந்த 'கொதிப்பு'

யாழ்ப்பாணம், ஜன.7

கொழும்பில் இருந்து பயணிகளுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்த தனியார் பஸ்ஸின் நடத்துநர் இடையிடையே உள்ளூர் பயணிகளை ஏற்றிவந்தார். அதனால் பயண நேரத்தில் தாமதம் ஏற்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட கொழும்பு பயணி பொலிஸில் முறைப்பாடு செய்தார். யாழ். நீதி மன்றில் அந்த வழக்கு விசாரணைக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொழும்பில் இருந்து கடந்த செவ்வாய் இரவு புறப்பட்ட அந்த பஸ் புதன் காலை யாழ்.நகரை நோக்கி வந்தது. இடையே கச்சேரியிலிருந்து ஒவ்வொரு தரிப்பிடத்திலும் உள்ளூர் பயணிகளை ஏற்றத் தவறவில்லை.

பொறுமையை இழந்தனர் கொழும்புப் பயணிகள். நித்திரை இன்மையினால் அவர்களின் கொதிப்பு ஏறிக் கொண்டிருந்தது. தனியார் நிறுவன உத்தியோகத்தர் ஒருவரும் பஸ்ஸில் இருந்தார். அவர் பஸ் நடத்துநர், சாரதியுடன் சினக்கத் தொடங்கினார்.

"நான் அலுவலகத்துக்குச் செல்ல வேண்டும். நீங்கள் இவ்வாறு சென்றால் கடமைக்குச் செல்வது எவ்வாறு? பஸ்ஸை நிறுத்தாது செல்லுங்கள்" - என்றார்.

அவர் கூறியதை நடத்துநர் அசட்டை செய்தார். பஸ் தொடர்ந்தும் தரிப்பிடங்களில் நிறுத்தப்பட்டுப் பயணிகள் ஏற்றப்பட்டனர். பொறுமை இழந்த அந்த உத்தியோகத்தருக்கும் நடத்துநருக்குமிடையில் வாய்த்தர்க்கம் மூண்டு அது கைகலப்பாக மாறியது.

தாமதமாக வந்திறங்கினர் பயணிகள். பயணிகளில் ஒருவரான அந்த உத்தியோகத்தர் இறங்கியதும் நேரே சென்றார் பொலிஸ் நிலையத்துக்கு. நடந்ததைக் கூறி முறைப்பாடு செய்தார் அவர்.

பொலிஸார் அந்த பஸ் நடத்துநரை யாழ்.நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர்.

விசாரணை மேற்கொண்ட நீதிவான் மா.கணேசராஜா நடத்துநர், பயணிகள் இருவரையும் இனிமேல் உரிய முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத் தியதுடன், நடத்துநரை எச்சரித்து விடுதலை செய்தார். (ஒ-4)

## யாழ். பல்கலையில் அலங்காரச் சிக்கல்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் விஞ்ஞான வாரத்தை ஒட்டி தமது பீடத்தின் வாயில் பகுதிகளை அலங்கரித்தனர். அந்த அலங்காரம் சில அழுத்தங்கள் காரணமாக அகற்றப்பட்டன.

நேற்று விஞ்ஞான பீட மாணவர்கள் நீலம், வெள்ளை நிறங்களிலான தோரணைகள் கொண்டு அலங்கரித்த வேளை அது குறித்து மாணவர் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அதை அடுத்து அந்த அலங்காரம் சிவப்பு, மஞ்சள் நிறமாக மாறியது.

இந்த அலங்காரம் வெறியர் சிலரின் கண்ணில் பட்டது. அது அவர்களுக்கு வேறு சில நினைவுகளை ஏற்படுத்தியது. இது அரசியல் நோக்கம் கொண்டதோ என்ற சந்தேகமும் வந்தது. அதை அடுத்து அவர்கள் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்பட்டது.

பல்கலை நிர்வாகம் அதற்குத் தலையாட்டி அலங்காரங்களை அகற்றுமாறு கேட்டுக் கொண்டது. நிலைமையை அறிந்து விளங்கிக் கொண்ட மாணவர்கள் அவற்றை உடனடியாக அகற்றிவிட்டனர்.

அலங்கார வேலைகளைத் தாம் எந்தவொரு அரசியல் நோக்கத்திலும் மேற்கொள்ளவில்லை. விஞ்ஞான வார நிகழ்வை முன்னிட்டே சுற்றாடலை அலங்கரிக்கும் வேலைகளில் ஈடுபட்டோம் என்கின்றனர் மாணவர்கள்.

(ஒ-10)

## கிருஸ்ணாவை எதிர்கொள்ள அரசும் தயார்

1 »

விஜயம், நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆகியன தொடர்பில் 'உதயனு'க்கு கருத்து வெளியிடும்போதே தேசியமொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அங்கத்தவர்களை அனுப்புமாறு எதிர்க் கட்சிகளிடம் நாம் கோரியுள்ளோம். எதுவித பதில்களையும் தராது அவர்கள் காலம் கடத்துகின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் எதிரணி உறுப்பினர்கள் அங்கம்வகித்து தத்தமது கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும் என்பது தான் அரசின் நிலைப்பாடு.

இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் அரசுடன் பேச்சு நடத்துவார். அவ்வாறு பேச்சு நடத்தும் போது அவர் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாகவோ அல்லது அரசியல் தீர்வுத் திட்ட விடயம் தொடர்பாகவோ கேள்வி எழுப்பும் பட்சத்தில் உரியவகையில் பதில் அளிப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

கிருஷ்ணா கேள்வி எழுப்பும் பட்சத்திலேயே நாம் பதிலளிப்போம். மாறாக இது விடயத்தில் நாம் கதைக்கப் போவதில்லை எனக் கூறினார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

(ஒ-சி)

## காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் வழங்கவே கூடாது

1 »

வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பொலிஸ், காணி அதிகாரங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கவேண்டும். 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு நாம் பூரண எதிர்ப்பை வெளியிடுகின்றோம்.

இனவாதக் கோரிக்கையான இவற்றைப் பகிர்ந்தளிக்கக்கூடாது என்பதுதான் எமது உறுதியான நிலைப்பாடு. இறுதிவரை அதேநிலைப்பாட்டிலேயே இருப்போம் - என்றார். (ஒ-சி)

## இந்திய - இலங்கை கடற்படைகள் நடுக்கடலில் நடத்தின சந்திப்பு

1 »

இந்தியக் கரையோரக் காவல் படைக் கப்பலான வஜிரவில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லைச் சந்திப்புத் தொடரில் இது 20 ஆவது சந்திப்பு என்று இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். காங்கேசன்துறைக்கு வெளியே இரு நாடுகளினதும் கடல் எல்லையில் சந்திப்பு நடந்ததாகவும் அவர் கூறினார்.

எல்லைச் சந்திப்புக்களில் வழமையாக மன்னார் வளைகுடா மற்றும் பாக்கு நீரிணைப் பகுதியில் நிலவும் மீனவர் பிரச்சினைகள் குறித்தும் கடற்படை நடவடிக்கைகள் குறித்துமே வழமையாக ஆராயப்படும் என்று இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்கள் இன்னமும் இலங்கைச் சிறைகளில் இருக்கின்ற நிலையில், அவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறை இன்றி வேலை நிறுத்தப்போராட்டத்தில் குதிப்பதற்கு ஒருநாள் முன்னதாக இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. (உ)

## 'தைபஸ்' காய்ச்சல் குடாநாட்டில் திடீர் பரவல்

1 »

திடீரென அதிகரித்துள்ளது. இந்த நோய் உண்ணி தெள்ளு மற்றும் ஒரு வகைப் பாலுண்ணியாலேயே காவப்படுகின்றது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் தைபஸின் ஒரு வகையான சிறப் *(Scrub)* என்னும் கிருமி ஊடாகவே யாழ்ப்பாணத்தில் இது பரவி வருகின்றது.

பற்றைகள் முட்புதர் காடுகள், புற்தரைகள், இலைகள், சருகுகள் ஆகியவற்றில் இருந்தே இந்தக் கிருமித் தொற்று ஏற்படுகின்றது. மனித உடம்பின் ஈரமான பகுதிகள் ஊடாகவே இந்த நோய் உடலினுள் பரவுவதாக மருந்துவ வட்டாரங்கள் தெரிவிக் கின் றன.

இந்த பாலுண்ணி கடித்த இடத்தில் புண் ஏற்படும். அத்துடன் தொடர்ச்சியாக இரண்டு நாள் காய்ச்சல், உடம்பில் குளிர், வயிற்று நோ, தலையிடி, தலைச்சுற்று என்பன ஏற்படும். இந்த 'தைபஸ்' கிருமியானது குருதிக் கலங்களினுள் சென்று பல்கிப் பெருகி திரட்டி ஏற்படுவதாலேயே நோய் ஏற்படுகின்றது. இதை அலட்சியம் செய்து கவனிக்காமல் விட்டால் இரத்தக் குழாயில் கட்டி ஏற்பட்டு மரணம் ஏற்படலாம். அத்துடன் செல்லப்பிராணிகளிலிருந்தும் தெள்ளு மூலமாகவும் இந்த நோய் ஏற்படலாம். எனவே பற்றைகளை வெட்டும் போது, புற்தரைகளில் இருக்கும் போது பாதுகாப்பான உடைகள் அணிந்து இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-15-207)

## வன்னியிலும் ஒருவகைக் காய்ச்சல் இதுவரையில் 6 பேர் உயிரிழப்பு

1 »

நோய்க் காய்ச்சலினால் ஏற்பட்ட உயிரிழப்பாக இருக்கலாம் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் கடந்த வாரம் உயிரிழந்த 17 வயது மாணவனும் இதே காய்ச்சலினால் உயிரிழந்திருப்பதுடன் , உயிரிழந்த 6 பேரின் இரத்த மாதிரிகளும் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இரண்டு அல்லது மூன்று நாள் காய்ச்சலுடனே இந்த மரணம் நிகழ்வதால் காய்ச்சல் ஏற்பட்ட உடனேயே வைத்தியர்களை நாடுமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

இந்தக் காய்ச்சல் தொடர்பில் ஆராய்வதற்கென கொழும்பில் இருந்து மருத்துவ நிபுணர் குழு ஒன்று வடக்குக்கு இன்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை நேற்று மரணமான சத்தியசீலனின் உடற்கூறுகள் மருத்துவ ஆய்வுக்கென கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களில் பலர் காசநோய்க்கு இலக்காகியுள்ளதாக காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-415)

## ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் பலப்படுகிறது அமெரிக்கப் படை

1 »

ரப் பொருளை ஆராய்வதை அடிப்படையாகக்கொண்டிருக்கும். எதிர்வரும் வருடங்களில் எங்களை வழிநடத்துவதற்கும், எமது பொறுப்புகளை ஏற்பதற்கும் தேவையான தகுதிகளையும், உறவுகளையும் இத்திட்டம் பெருக்கிக் கொள்ள உதவும் என்றும் அவர் விவரித்துள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கருத்துச் செலுத்தும் அதேவேளை, நிரந்தரமான - சாசுவதமான உலக பிரசன்னத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இது அமெரிக்க யுத்த தந்திரரோபாய முன்னுரிமைகளையும் ஊக்குவிப்பதாக இருக்கும் என்றும் ஹிலாரி கிளிங்டன் விளக்கியுள்ளார்.

எங்கள் விரோதிகளைத் தடுப்பதற்கும், எங்கள் பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும், யுத்த தந்திரோபாய நடவடிக்கைகளில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளில் ஈடுபடும் தீவிரவாதிகளுடன் போரிடுவதற்கும், உலகமெங்கும் மனித கௌரவத்தைப் பாதுகாப்பதற்கும், மிரட்டல்களை உடனடியாக முறியடிப்பதற்கான எங்கள் தகுதியை பேணுவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இதன் பொருட்டு, நேட்டோ உட்பட நலிவடைந்துள்ள நேச அணிகள், உறவுகொண்டுள்ள நாடுகள் ஆகியவற்றிற்காகவும் முதலீடுகள் செய்யப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பென்டகனில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, இப்புதிய பாதுகாப்புத் தந்திரோபாய ஆவணத்தை வெளிப்படுத்திய பின்னர் ஹிலாரி கிளிங்டன் இது தொடர்பான கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.

ஹிலாரி கிளிங்டன் தொடர்ந்து பேசுகையில், இந்த தந்திரோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அமெரிக்கா, அதன் நேச அணிகள், பங்குதார உறுப்புகள் ஆகியவற்றுடன், அவற்றின் பங்களிப்புகள், புதிய வாய்ப்புகளை எட்டுவதற்கான வழிமுறைகள், உலக ஸ்திரப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கானவழிமுறைகள் ஆகியவை தொடர்பாக தொடர்ந்து ஆலோசனை நடத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

21ஆம் நூற்றாண்டுக்கான பாதுகாப்பு முன்னுரிமைகள் ஆவணம், புதிய யுத்த தந்திரோபாய வழிகாட்டல்களைக் கொண்டது. இது அமெரிக்காவின் 21ஆம் நூற்றாண்டின் பாதுகாப்புத் தேவைகள், எதிர்கால தலைமைத்துவத்துக்கான பாதுகாப்பு ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எமக்குரிய சவால்களுக்கு முகங்கொடுப்பது இராணுவத்தின் பணிமட்டும் அல்ல. இராஜதந்திரமும், அபிவிருத்தியும் இதில் சமத்துவமாகப் பாதுகாப்பில் ஒன்றிணைந்தவை. எமது அதிகார அணுகுமுறை மூலமாக வெளிநாடுகளில் அமெரிக்கர்களின் நலன்களையும், பெறுமானங்களையும் ஊக்குவிக்க வேண்டும். எமது பொருளாதார சுபீட்சத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். எமது தேசிய பாதுகாப்பை காக்கவேண்டும் என்றும் ஹிலாரி கிளிங்டன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## அரசு பொறுப்புக் கூறத் தவறினால் சர்வதேச விசாரணைப் பொறிமுறை

1 »

கோரிக்கை மனுவில் 5000 இற்கும் அதிகமானோர் ஒப்பமிட்டிருந்தனர்.

இந்தக் கோரிக்கை மனுவுக்குப் பதிலளிக்கும் வகையில், மைக்கல் எச்.போஸ்னர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் அண்மைய மோதல்களின் போது இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டமீறல்களுக்குப் பொறுப்புக்கூறுதல் தொடர்பான உங்களின் கவலைகளுடன் அமெரிக்காவும் பங்கு கொள்கிறது.

அத்துடன் இலங்கையில் எல்லாக் குடிமக்களுக்குமான நியாயமான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு, ஐ.நா மற்றும் அனைத்துலக சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதிலும் உறுதியாக இருக்கிறது.

அமெரிக்க காங்கிரஸ் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இலங்கையில் அண்மைய மோதல்களின் போது இடம்பெற்ற, அனைத்துலக மனிதஉரிமை மற்றும் மனிதாபிமான சட்டமீறல்கள் குறித்து 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இரண்டு அறிக்கைகளைத் தயாரித்தது.

இந்தக் குற்றச்சாட்டுகளை அமெரிக்கா மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது என்பதை இந்த இரண்டு அறிக்கைகளிலும் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். அத்தகைய மீறல்களுக்குத் தனிப்பட்ட பொறுப்புக்கூறுதல் நல்லிணக்கத்தின் முக்கியமான தொரு பகுதி என்று நாம் நம்புகிறோம்.

இது தொடர்பான இலங்கையின் அர்த்தமுள்ள சொந்த முயற்சிகள் பல பத்தாண்டுகளாகத் தொடர்ந்த மோதல்களால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதில் முன்னேற்றத்தை அளிக்கும்.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 2011 செப்ரெம்பர் கூட்டத்தொடரின் போது, இலங்கை தேசிய மற்றும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறியிருந்தோம்.

போரின் போது இடம்பெற்ற அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு - பக்கம்சாராத வகையில் இலங்கை துரிதமாகவும் நம்பகமாகவும் பதிலளிக்க வேண்டும் என்றும் வெளிப்படுத்தியிருந்தோம்.

காணாமற்போனவர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து அவர்களின் குடும்பத்தினருக்கு வெளிப்படுத்துவதற்கும், மோதல்களில் கொல்லப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்கவும் இலங்கை உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளோம்.

இந்த விவகாரங்களில் ஐ.நா மற்றும் அனைத்துலக சமூகத்துடன் இணைந்து இலங்கைஆக்கபூர்வமான முறையில் பணியாற்ற முன்வர வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொள்வோம்.

இறுதியாக, இலங்கை அரசு இந்த நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரங்களுக்கு அனைத்துலக கடப்பாடுகளுக்கு அமைய பதிலளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், பொறுப்புக் கூறுவதற்கு இலங்கை அரசை தொடர்ந்தும் நாம் வலியுறுத்துவோம்.

அதேவேளை, அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனிதஉரிமைச் சட்ட மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதில் தமக்குள்ள அடிப்படைப் பொறுப்பை உள்ளக அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். ஒரு அரசினால் தமது கடமையை நிறைவேற்றாத அல்லது நிறைவேற்ற விரும்பாத சூழ்நிலையில் தான் அனைத்துலக பொறுப்புக்கூறும் பொறிமுறையை உருவாக்க முடியும். - என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடிசன் கல்லூரி - கிளிநொச்சி

A/L 2014, Day கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான புதிய பிரிவுகள்

கணித விஞ்ஞான பிரிவுகள்

இன்று ஆரம்பம் 8.00 a.m.

| இரசாயனவியல் | பௌதிகவியல் | இ.கணிதம் | உயிரியல் |
|---|---|---|---|
| திரு.இராஜசிவம்<br>திரு.அன்பழகன் | திரு.அனந்தகோபன்<br>திரு.ஞானகரன் | திரு.தாயளான்<br>திரு.சுஜிகரன் | திரு.சுதா |

## 2014 A/L
பௌதிகவியல்
By M.கருணாநிதி

- கொக்குவில்,
- அரியாலை
- NEC பெருமாள் கோயிலடி,யாழ்ப்பாணம். 0776183064

2012A/L, 2013A/L
- வகுப்புகள் நடைபெறுகின்றன.

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

MyWay ஆசிரியரின் நேரடி வகுப்பில் கலந்து இலகுவாக முழுமையாக ஆங்கிலம் கதைப்பதிலும் இலக்கணத்திலும் தேர்ச்சிபெறுவதற்கான சந்தர்ப்பம்

சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் – 07.01.2012 [இன்று]

**ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் மட்டும்**

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 8.00 - 9.00 | 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 2.00 - 3.00 |
| நகரசபை அருகில் சாவகச்சேரி காலை 10.00 - 11.00 | இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை மாலை 4.00 - 5.00 |

**பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் O/L, A/L எழுதிய மாணவர், இளைஞர், யுவதிகள்**

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 9.00 - 10.00 | 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 3.00 - 4.00 |
| நகரசபை அருகில் சாவகச்சேரி காலை 11.00 - 12.00 | இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை மாலை 5.00 - 6.00 |

ஒவ்வொருவரின் ஆங்கில அறிவு மட்டத்திற்கேற்ப பிரிவுகளில் வகுப்புக்கள் நடாத்தப்படுவதோடு திருப்தி இல்லாதவர்களுக்கு முழுப்பணமும் திருப்பித்தரப்படும்

MyWay 077 33 63 456

வன்னிப் பகுதியில் 'உதயன்' வாசகர்களுக்காகச் சேவையாற்றி வருகிறது வன்னிப்பணிமனை. உங்கள் விளம்பரங்கள், செய்திகள் என்பவற்றைப் பிரசுரிக்க இன்றே நாடுங்கள்...

**'உதயன்' வன்னிப் பணிமனை**
(புனித தெரேசா பாடசாலை முன்பாக)
கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

## கணினி மலிவு விற்பனை

IBM Dual Core மற்றும் IBM LCD Monitor
அதனுடன் கூடிய அனைத்துப் பொருள்களும் 31,750/= விலையில் விற்பனைக்கு உண்டு.
Free 4 GB Pen/Web cam

**SKY Computer**
162, பிரதான வீதி, யாழ். / 737, K.K.S. Road,
021 222 1417, 222 4865/0750098608
ஒரு வருட உத்தரவாதம் உண்டு.
மொத்தமாக RAM 1, II, III, Power S/Y உண்டு.
(C/7754)(5)

## Academy of LOGIC
அளவையியல்
**PAPER CLASS**
திங்கள்-புதன்-வெள்ளி
காலை - 6.15
என்.பிரதீபன்

## ENGLISH GRAMMAR
Through
**FORMULATION TECHNIQUE**
At
**THE EXCELLENT LEARNING CENTRE**
By
**MR.P.T.PUNITHARAJAH**

- நிர்வாக ஆலோசகர்
- கல்வி ஆலோசகர்
- தியானயோகா ஆசிரியர்
- முன்னாள் ஆசிரியர்
- முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO)

சிறந்த அனுபவமும் கற்பித்தலில் மிகுந்தநிபுணத்துவமும் உள்ள ஆசிரியரால் மிகவும் நுட்பமானமுறையில் எல்லோராலும் இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடியவகையிலே வடிவமைக்கப் பட்ட நவீன விஞ்ஞான உத்தியான Formulation Technique முறையைப் பயன்படுத்தி மிகக் குறுகியகாலத்தில் ஆசிரியரின் நேரடி வழிகாட்டலில் பூரணமாக ஆங்கில இலக்கணத்தைக்கற்றுக்கொள்ளலாம்.

மாணவர்கள், பல்கலைக்கழகமாணவர்கள், அலுவலர்கள் ஆகியோர் தங்கள் வசதிக்கேற்ற வகையில் வகுப்புக்களுக்கான நேரங்களை ஒதுக்கிக்கொள்ளவும், கற்பித்தல் முறைபற்றியும், கற்பிக்கப்படும் விடயங்கள் பற்றியும் அறிந்துகொள்ள இம் மாதம் 7ம், 8ம் திகதிகளில் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 5.00 மணிவரைகீழ்வரும் முகவரியில் ஆசிரியரை நேரடியாகச் சந்தித்து விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

30 மணித்தியாளங்களில்
அடிப்படை ஆங்கில இலக்கணம் முழுமையாகக் கற்பிக்கப்படும்.

கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி.
(கொக்குவில் இந்துக்கல்லூரிக்குஅருகாமையில்)

CONTACT NO: 071 4450379

# BARNABAS இன்
## மாபெரும் மலிவு விற்பனை




~~32500/=~~ 25500/=
~~26500/=~~ 20500/=

இம் மலிவு விற்பனை கையிருப்பு உள்ளவரை மட்டும்

## SONY JAPAN T.Vகள்

- உதிரிப்பாகங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம்
- நீண்டகாலம் உறுதியான பாவனை




~~21000/=~~ 14000/=



DVD Player USB 5.1 channel 1 Year Worrenty ~~5700/=~~ 3750/=

VCDTAPE Radio ~~4500/=~~ 2400/=

VHF UHF ANTENA ~~2100/=~~ 1400/=

247, ஸ்ரான்லி வீதி
ஸ்ரீதர் தியேட்டர் அருகில்
யாழ்ப்பாணம்.

T.P:0777448668,0777805268
0217900728

## Sky Computer (Pvt) Ltd
O/L பரீட்சைக்குத் தோற்றிய
மாணவர்களுக்கான கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
(பிரத்தியேகமாக/குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி)

| | | | |
|---|---|---|---|
| Dip.in Ms Office 2007 | 2 Months - 3000/= | Dip.in Web Desining | 3 Months - 3500/= |
| Dip.in DTP | 2 Months - 3000/= | Certific in Internet & E.Mail | 1 Months - 2000/= |
| Dip.in. Hardware | 2 Months - 3000/= | Computer Type Setting | 2 Months - 2000/= |
| Dip.in. Graphic Designing | 2 Months - 3000/= | Kids Program | 2 Months - 1500/= |

162, Main Street, Jaffna. TP.: 0212221447

(Unlimited Practical Hours)

# ACADEMY OF LOGIC
பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி.)

A/L 2014 — கலை, வர்த்தக வகுப்புகள் — A/L DAY CLASS

இன்று ஆரம்பம்

காலை 8.00 மணி. காலை 9.00 மணி.

# IIS கணனிக்கற்கை நெறிகள்

### Certificate Courses
- Certificate in Office Solution Development
- Certificate in Multimedia
- Certificate in Web Designing
- Certificate in Desk top Publishing
- Certificate in Hardware Technology
- Certificate in Java Programming
- Certificate in Visual Programming
- Certificate in Networking
- Certificate in Database Management

### Diploma Courses
- Diploma in Multimedia
- Diploma in Web Development
- Diploma in Computer Programming
- Diploma in Computerized Accounting
- Diploma in Eng. Drawing & AutoCAD
- Diploma in Software Development
- Diploma in Business Information System
- Diploma in Computer Hardware & Networking

புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I :- 05.01.2012
பிரிவு II :- 07.01.2012
காலை 10.00 மணி



INSTITUTE OF INFORMATICS STUDIES
100, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்
தொ.பே :- 021 222 2831

## மோட்டோ லங்கா நிறுவனத்தின் ரூபா. 10,000 விலைக்குறைப்பு

எலற்றிக் மோட்டார் சைக்கிள்

வாகன வரி காப்புறுதிப் பத்திரம் தேவையில்லை




~~99,000~~ 89,000/= City Lover
~~99,000~~ 89,000/= Cool boy
~~89,000~~ 79,500/= E-Scooty

சாரதி அனுமதிப் பத்திரம் தேவையில்லை
பற்றரிக்கு ஒரு வருட உத்தரவாதம்.
மோட்டருக்கு 2 வருட உத்தரவாதம்.
இச்சலுகை 15 ஆம் திகதி வரை மட்டுமே
Hot line: 0770868079

ELECTRIC BIKES
யப்பான் ரேடர்ஸ்
(முட்டாஸ்கடைச் சந்தி அருகில்)
10 – 14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கடந்த காலம் பற்றிய நினைவு மனிதனை அறிவாளி ஆக்குவதில்லை. வருங்காலம் பற்றிய பொறுப்புணர்ச்சியே அறிவாளிக்கு அடையாளம்.
**பெர்னாட் ஷா.**

# வார வசந்தம்

01

உதயன் | 07 ஜனவரி 2012 சனிக்கிழமை | பக்கங்கள்: எட்டு



# சீனாவின் மடியில் ராஜபக்ஷ

வன்னியில் இறுதிக்கட்ட ஈழப்போரின் போது இடம் பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வ தேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லையென்ற விரக்தி-விசனம் ஈழத் தமிழர் களிடையே ஏற்பட்டுள்ளதென இந்தியாவின் டெக்கான் குரோனிக்கல் பத்திரிகை தெரிவிக்கிறது.

இந்தப் பத்திரிகையின் செய்தியாளர் பகவான் சிங் இலங்கையில் மேற்கொண்ட விஜயத்தை அடுத்து வரைந்திருக்கும் வடக்கு நிலவரம் சம்பந்தமான கட்டுரை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்குச் சென்ற மேற்படி செய்தியாளர் அங்குள்ள மக்களின் உணர்வுகளைப் பதிவு செய்துள்ளார். மீள்குடியமர்வு இராணுவப் பிரசன்னம் உட்பட்ட பல விடயங்கள் குறித்து மக்களிடம் கேட்டறிந்த கருத்துகளை யும் அவர் தனது கட்டுரையில் உள்ளடக்கியுள்ளார். இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறித்ததான மக்களின் மன நிலையை யும் அவர் கட்டுரையில் பதிவுசெய்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது இறுதிக்கட்ட ஈழப்போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லை என்ற விரக்தி தமிழர்களிடையே ஏற்பட்டுள்ளது. அத்துடன் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் இந்தியாவின் அசமந்தப் போக்கு அதிருப்தியையும் ஆத்திரத்தையும் கிளறிவிட்டுள்ளது. என்ற தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு கடுமையான அழுத்தம் கொடுத்தால், அவர் இந்தியாவைக் கைகழுவி விட்டு சீனாவின் குடைக்குள் புகுந்து கொள்வார் என இந்தியா கவலை கொண்டுள்ளது. அதே போல ராஜபக்ஷ சீனாவின் மடியிலேயே அமர்ந்தவாறு உள்ளார் என கொழும்பிலுள்ள சிரேஷ்ட இந்திய அதிகாரி ஒருவர் குறிப்பிடுகிறார். இந்த சிரேஷ்ட இந்திய அதிகாரி நீண்டகால மாக இலங்கை அமைச்சுமட்ட விவகாரங்களைக் கையாண்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. சீனாவுக்கு இந்தியா ஏன் பயப்படுகின்றது என்று பார்த்தால் எல்லா வளங்களிலும் சீனா, இந்தியாவை விட மேலோங்கி காணப்படுகிறது.

அதாவது சீன இராணுவத்தினரின் எண்ணிக்கை 22.85 லட்சம் இந்திய இராணுவத்தினரின் எண்ணிக்கை 13.25 லட்சம், சீனாவிடம் 309 போர்க் கப்பல்களும் 1200 போர் விமானங்களும் இருக்கின்றன. இந்தியாவிடம் 66 போர்க் கப்பல்களும் 100 போர் விமானங்களும் மட்டுமே இருக்கின்றன. ஆகவே தான் இந்தியா சீனாவுக்குப் பயப்படுகிறது. இதனால் இலங்கை அரசு சீனாவுடன் கொண்டுள்ள நட்புறவு இந்தியாவிற்கு தலை வலியாக இருக்கப் போகிறது. இதனால் இலங்கையிடம் இந்தியா நட்புறவுடனேயே இருக்குமேயொழிய ஒரு போதும் இந்தியா இலங்கை அரசை பகைக்காது இதனால் ஈழத்தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசு கொண்டுள்ள முடிவுகளுக்குத் தான் இந்தியா ஆதரவு வழங்கும் என்பது உண்மை. இலங்கை சீனா உறவு ஈழத்தமிழர்களுக்கு ஒரு நெருக்கடியான சூழலை ஏற்படுத்தவுள்ளது.

அமெரிக்காவுடன் ஒரு கையைக் குலுக்கிக் கொண்டு, ஈரானுடன் இன்னொரு கையைக் குலுக்க சீனாவால் முடிகிறது. வட கொரியாவை அச்சுறுத்த தென் கொரியாவுக்கு அமெரிக்கக் கப்பல்கள் வந்தால் தயவு தாட்சன்யமின்றிச் சீனாவால் எச்சரிக்க முடிகிறது. எந்த நாட்டின் மீது நேசப் படைகள் புகுத்தாலும் சீனாவால் கண்டிக்க முடிகிறது. இந்தியாவால் முடியவில்லை. இந்தியாவைச் சுற்றியுள்ள அத்தனை நாடுகளும் சீனாவின் நெருக்கமான கூட்டாளிகள் ஆகவே தான் இந்தியா சீனாவுக்குப் பயப்படுகிறது. இதனால் தான் ஈழத்தமிழர் பிரச்சினையைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறது. இந்தியா சீனாவுக்கு பயந்து போய் இருக்கிறது. இலங்கை சீனாவுடன் உறவைப் பேணுவதால் இலங்கையுடன் இந்தியா என்றைக்கும் நட்புறவை பேணப்போகிறது என்பது வெளிப்படையே. இலங்கையில் சீனாவின் தலையீடுகள் அதிகரித்து வருவது குறித்து இந்தியா கலக்கமடைவது ஒன்றும், இரகசியமான விடயம் அல்ல ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்வதில் தான் இந்தியாவுக்கு கௌரவப் பிரச்சினையாக உள்ளது. பல சந்தர்ப்பங்களில் இந்திய இராணுவ விமானப்படைத்தளபதிகள் சீனத் தலையீடுகள் குறித்து அச்சம் வெளியிட்டிருந்தாலும் இராஜதந்திரிகளோ, அரசியல் தலைவர்களோ அப்படி ஒன்றும் இல்லை என்று காட்டவே முனைகின்றனர். இலங்கையில் இந்தியா மேற்கொள்கின்ற எல்லாத்திட்டங்களுமே சீனாவுக்குப் போட்டியாக, சீனாவின் தலையீட்டைக் குறைப்பதற்காகவே மேற்கொள்ளப்படுகிறது. இலங்கை அரசுடன் இந்தியா கொண்டுள்ள நட்புறவும் இலங்கை விவகாரத்தால் பின்பற்றப்படும் அணுகுமுறையும் சீனாவைச் சார்ந்தே தீர்மானிக்கப்படுகின்றன. எங்கே சீனா எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொண்டு போய் விடுமோ என்ற பயம் இந்தியாவுக்கு வந்துவிட்டது.

விடுதலைப்புலிகள் விவகாரத்தில் இந்தியா கடைப்பிடித்த மூலோபாயம் விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க உதவியுள்ளது. ஆனால் சீனாவை இலங்கைக்கு அருகில் கொண்டு வந்து விட்டது. சீனா ஆயுத உதவிகளைக் கொடுக்க, இலங்கைப் படையினர் விடுதலைப்புலிகளுடன் போராட, இந்தியா வேடிக்கை பார்த்தது. இப்போது சீனாவின் செல்வாக்கு இலங்கையில் வளர்ந்துவிட்ட நிலையில் இந்தியா அதையும் வேடிக்கை பார்க்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இந்தியாவின் காலடியில் இருந்த மாலைதீவில் தூதரகத்தை அமைத்துவிட்டது சீனா. அடுத்து அங்கு நீர்மூழ்கிக் கப்பல் தளம் ஒன்றை அமைக்கத்திட்டமிட்டுள்ளது. இதற்கிடையில் சீஷெல்சுடன் உடன்பாடு செய்து கொண்டுள்ள சீனா அங்கு கடற்படைத் தளத்தை அமைக்கவுள்ளது. சீனா அமைக்கப் போகும் முதலாவது கடல் கடந்த தளம் இதுவாகும். இந்த கடற்படைத் தளம் பயிற்சி மற்றும் ஆயுத தளபாட விநியோக வசதிகளைக் கொண்டதாக அமையவுள்ளது. அதை விட சீனா கட்டி வரும் மிகப்பெரிய விமானத்தாங்கிக் கப்பலையும் இங்கேயே நிறுத்தப் போவதான தகவல்களும் உள்ளன. இந்தியப் பெருங் கடல் என்பது இந்தியாவின் ஆதிக்கத்தில் இருந்த நிலை மாறிவிட்டது. சீனாவிடம் இருந்து பாதுகாப்பு ரீதியான அச்சுறுத்தல் நிறுவிக்கொண்டிருக்கின்ற நிலையிலும் இந்தியாவின் இராஜதந்திரம் எதற்காகப் போலி வேடம் போடுகிறது என்பதே கேள்வியாகவுள்ளது.

சீன விவகாரத்தில் இந்தியா அடங்கிப் போகிறதா அல்லது அடக்க முடியாது என அச்சம் கொள்கிறதா. எது எவ்வாறினும் இந்தியா, சீன இடையில் ஆதிக்கப் போட்டி இந்தியப் பெருங்கடலில் தீவிரமடையும் போது அதன் பாதிப்பு இலங்கையை விட்டு வைக்காது. ஏனென்றால் இந்த இரு நாடுகளின் செல்வாக்குப் பரப்பினுள் தான் இலங்கை இருக்கிறது. இப்படியாக இருக்கும் நிலையில் ஈழத்தமிழர் பிரச்சினையில் தமிழ்நாட்டில் உள்ள ஆதரவாளர்களால் எந்த முயற்சியும் எடுக்க முடியாமல் போய் விடும். ஈழத்தமிழர்களுக்காக தமிழ்நாட்டின் தலைவர்கள் போராட்டம் நடத்தினாலும் கைது செய்து சிறையில் அடைக்கப்படுவார்கள். ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாட்டுத் தலைவர்களால் பேசிக்கொண்டு இருக்க முடியுமேயொழிய எந்த வித

**துன்னாலைச் செல்வம்**

முன்னேற்ற கரமான முயற்சிகளும் எடுக்க முடியாமல் போய்விடும். விடுதலைப்புலிகளின் போராட்ட சக்தி தமிழர்களுக்கு ஒரு விடுதலையைப் பெற்று தரும் என்று நம்பினார்கள். ஆனால் விடுதலைப்புலிகளின் போராட்டம் வீழ்ச்சி கண்ட நிலையில் தமிழர் விடயத்தில் இலங்கை அரசு எள்ளள்வும் அக்கறை இல்லாமல் செயற்படுகிறது. இதனால் மூன்று தசாப்த காலம் இடம்பெற்ற போரினை மீண்டும் தமிழர்கள் திரும்பிப்பார்க்க வைக்கிறது. சர்வதேசத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் மூன்று அமைப்புக்கள் வன்னியில் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கான அமைப்பு ஒன்றைப் பதிவு செய்து அதன் ஊடாக மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் திட்டம் தீட்டியுள்ளதாக புலனாய்வுத்துறையினரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. விடுதலைப்புலிகளின் இந்த இரகசியத்திட்டம் குறித்து தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்தச் செய்தி உண்மையோ, பொய்யோ, தமிழர்கள் தீர்வு விடயத்தில் இலங்கை பின்னடிக்குமாயின் நடக்காது என்று எதிர்வுகூற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (16)

**இராகு கிரக ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விபரங்கள் தொடர்கின்றன.**

**இராகு ஆதிக்கப் பெயர் எண்களின் பலன்கள்.**

### பெயர் எண்4

இராகுவின் ஆதிக்கம் பெற்ற இவ் எண் விரயங்களை உண்டு பண்ணிக் கொண்டே இருக்கும். உழைப்பு வீணாகும். இவருடைய அறிவும், உழைப்பும் பிறருக்குப் பயன்படும்.

### பெயர் எண் 13

இராகு ஆதிக்கத்தில் இயங்கும் இவ் எண்ணில் பல மர்மங்கள் நிறைந்திருப்பதால் இவ் எண் குறித்த தினங்களில் வரலாற்றுக் காலம் தொட்டு இன்று வரை பல துக்கமும் துயரமும் நிறைந்த சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. தோல்வியுடன் வேதனையைச் சுமந்து வாழ்வார்கள்.

சதா கவலையும் சஞ்சல மனப் போக்கும் இவ் எண்ணில் உண்டாகும். திகதி எண், கூட்டு எண் 13 சந்திக்கும் நாட்களில் தொடங்கும் காரியங்களில் பல்வேறு துக்கரமான சம்பவங்கள் சோகமான முடிவுகள் பெரும் ஆபத்துக்கள் நிறைந்த சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கும்.

### பெயர் எண் 22

இவ் எண் நிரந்தரமான முன்னேற்றத்தைத் தராது. பல்வேறு காரியங்களில் ஈடுபடச் செய்து தோல்வியைத் தரும். தீய பாதையில் வாழ்க்கையை இழுத்துச் செல்லும். தீய காரியத்தால் பணம் சம்பாதித்து தவறான வழிகளிலேயே பணத்தை இழப்பார்கள். துன்பத்தைக் கண்டு துவள மாட்டார்கள்.

### பெயர் எண் 31

பிறருக்குக் கட்டுப்பட்டு வாழ மாட்டார்கள். சுதந்திரமாக வாழத் துடிப்பவர்கள். இஷ்டப்படி செலவு செய்வார்கள். சில நேரங்களில் குடும்ப வாழ்க்கையை துறந்து சந்நியாச வாழ்வை நாடுவார்கள். வாழ்க்கையின் முடிவும் எதிர்பாராத விதமாகவே இருக்கும்.

### பெயர் எண் 40

நல்ல அறிவு நிரம்பி இருக்கும். திடீர் பணவரவு கிடைக்கும். பேச்சும் எழுத்தும் அதிகார உத்தியோகமும் புகழைச் சேர்க்கும். சகல செல்வமும் சேரும். தன்னம்பிக்கை மிக்கவர்கள். வாழ்க்கை முடிவில் யாருமற்ற அநாதை மனிதராகி விடுவார்கள். சுயநலத்திற்காக எதையும் செய்யும் சுயகாரியப் பித்தர்கள்.

### பெயர் எண் 49

செல்வம் அருவி போலப் பெருகும். பிரமிக்கத்தக்க காரியங்களைச் செய்வார்கள். புகழ் புயல் வேகத்தில் பரவும். பிறரால் வெறுப்படைந்து மோசமான முடிவைத் தேடிக் கொள்வார்கள். மிதமிஞ்சின கற்பனை வளம் இருக்கும்.

### பெயர் எண் 58

மிக்க பிரசித்தியும், வசீகரமும் உண்டாகும். காரிய வெற்றி உண்டு. வாழ்க்கை வேகமாக முன்னேறும். பலர் போற்றும் மனிதராக்கும். இராகு ஆதிக்க நபர்களுக்கு நன்மையையும் மற்ற ஆதிக்கத்தினருக்கு துரதிஷ்டமாகவும் அமையும்.

### பெயர் எண் 67

மிகுந்த புத்திசாலிகள். புகழ் மிக்க மனிதராவார்கள்.



சிறந்த கலைஞர்கள். சளைக்காத உழைப்பாளிகள். பொது வாழ்க்கையில் புகழ்கொடி நாட்டுவார்கள்.

பொது நலசேவை செய்பவர்களுக்கு நன்மை செய்யும். பெரும் புகழ், பணம் சேரும்.

### பெயர் எண் 76

பிரபலமான சூழ்நிலையில் வாழ்வார்கள். பொதுக்காரியத்தில் ஈடுபட்டு வெற்றி பெறுவார்கள். ஆன்மிகத்தில் அருளும், பொருளும் சேர்ப்பார்கள்.

### பெயர் எண் 85

கஷ்டப்பட்டு முன்னேறுவார்கள். கவிதை, கட்டுரை, வைத்தியத் தொழில்களில் சிறந்தவர்கள். தெய்வீக நம்பிக்கை மிக்கவர்கள். பெரும் பதவிகள் கிடைக்கும். பிறர் மீது அன்பு செலுத்தும் நல்ல மனிதர்கள்.

### பெயர் எண் 94

உலக மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்வார்கள். பெரும் புகழ், செல்வம், அந்தஸ்து கிடைக்கும். உத்தரமராக விளங்குவார்கள். வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் மாறிமாறிவரும். நீடித்த புகழ் உண்டாகும்.

### பெயர் எண் 103

சுகபோகமான வாழ்க்கை அமையும்.பணம் படைத்த செல்வச் சீமான் ஆவார்கள். நிரந்தரமான வருமானத்தை தரும் தொழிலை அமைத்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் இலாபத்தைப் பெருக்கும் எண்ணாகும்.

இராகு ஆதிக்க எழுத்துக்களின் குணாதிசயங்கள்

**D..** நேர்மையான நடவடிக்கை, துணிச்சலான செயல், தன்னம்பிக்கை இவையெல்லாம் ஒன்றுகூடி அமைந்திருக்கும்.

கடமையுணர்ச்சி அதிகமிருக்கும். அயராத உழைப்பால் உயர்வடைவார்கள். கௌரவம் அந்தஸ்து ஆகியவற்றுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். உடலுழைப்பு அதிகமாய் இருக்கும். பணிவு மிக்கவர்கள். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவி செய்வார்கள். உழைப்பாளிகள்.

**M..**முன்னேற்றத்திலேயே தீவிரமாக இருக்கச் செய்யும். புத்திசாலித்தனத்தையும் உழைப்பையும் பிடிவாத குணத்தையும் அதிகரிக்கும். அடிக்கடி வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கும்.

கூர்மையான அறிவு இருக்கும். ஓயாத உழைப்பு விடாமுயற்சி இவையே இவர்களின் தாரக மந்திரம். இயல், இசை, நாடகம், ஓவியம் போன்ற துறைகளில் தேர்ச்சி பெறுவார்கள்.

**T..**முன்னெச்சரிக்கையுடன் செயற்படத் தூண்டும். விடாப்பிடியான குணமுண்டு. பிறரின் கருத்துக்களுக்குச் செவி சாய்க்க மாட்டார்கள். சொந்த முயற்சியால் எதிர் நீச்சல் போட்டு முன்னேறுவார்கள்.

மன உறுதி, உடல் வலிமை இருக்கும். தீர்மானமான முடிவெடுப்பார்கள். எடுத்த காரியத்தில் சிரத்தையுடன் செயற்பட்டு வெற்றி காண்பார்கள்.

### பிறப்பு எண் 4 விதி 1

இராகு சூரிய ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் உலக அறிவு நிரம்பியவர்கள். நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்க்கையில் வெற்றியடைவார்கள். சென்ற இடமெல்லாம் பல சிறப்புக்கள் வந்து குவியும். இவர்களின் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் சமுதாயத்தைச் சீர்படுத்தும்.

மற்றவர்களின் போற்றுதல்களையும், தூற்றுதல்களையும் ஒருபோதும் கண்டுகொள்ளவே மாட்டார்கள். கடின உழைப்பாளிகள். பிறருக்குக் கட்டுப்பட்டு நடக்கமாட்டார்கள்.

நேர்மையைத் தவிர போலிகளை வெறுத்து ஒதுக்குவார்கள். யார் என்ன சொன்னாலும் தீர விசாரித்து ஒரு முடிவுக்கு வருவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புக்களை முறையாக கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்

1,10,19,28,6,15,24

அதிர்ஷ்ட நிறங்கள்

வெளிர் நீலம்,மஞ்சள், பொன்னிறம்

அதிர்ஷ்ட ரத்தினங்கள்

கோமேதகம், நீலக்கல், மாணிக்கம், அக்கோமரின், சூரிய காந்தக் கல், ஓபல்.

*(தொடரும்)*

# "தம்பி அண்ணை ஒரு முடி சூடா மன்னன்"



தெல்லிப்பழையில் 'ஆனைக் குட்டிவளவு' ஒரு பிரசித்தமான இடம். இங்கு விஜயரத்தினம் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் 'தம்பி அண்ணை' என அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் லயன் வி.கமலநாதன். எங்களுக்கு எல்லாம் தம்பி அண்ணையை அறிமுகஞ் செய்து வைத்த பெருமை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரையே சாரும். சிவத்தமிழ் செல்வி அம்மாவின் யூனியன் கல்லூரி மாணவனாகவும் இருந்தார் இவர்.

## நீத்தார் நயப்புரை

சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் முன்னுதாரண திருப்பணிகளுக்கெல்லாம் வலது கரமாக உதவியவர். இவரின் மாமனார் முன்னைநாள் இணைச் செயலாளர் க.தணிகாசலம். இவர் ஒரு அஞ்சாநெஞ்சினன். சிவத்தமிழ்ச் செல்வி அம்மா குறிப்பிடுவது போல '' எல் லாம் வெற்றி'' என்ற தாரக மந்திரத்தைக் கொண்டவர்.

இவர் தொடர்ந்து சிவத் தமிழ்ச் செல்வி அம்மா அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி உழைத்தவர். வி.கமலநாதன் 10.04.1998 இல் நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தை நிர்மாணிக்க உதவி அதன் திறப்பு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாட ஒத்துழைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த மணிமண்டபத்துக்கு முகாமையாளராக சிவத்தமிழ் செல்வி அம்மாவின் நிர்வாக சபையால் தம்பி அண்ணை நியமிக்கப்பட்டார். அங்கு தம் பணியை சிறப்புற ஆற்றி தடம் பதித்தார். சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் மறைவுக்குப் பின்னர் தம் பணியில் இருந்து ஓய்வுபெற்றார்.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்'' என்ற திருக்குறளின் வழி உணர்ந்த சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் சுகயீன காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த போது தம்பி அவர்கள் பட்ட துன்பமும் கஷ்டமும் அளவிடற்கரியது. இறுதியில் எல்லாமே முன்னதாகவே எழுதி முடிந்த விடயம் நடந்துவிட்டது.

சிங்கள மொழியைச் சரளமாகப் பேசும் ஆற்றல் கொண்ட கமலநாதன் கடந்த 30 ஆண்டு கால யுத்த நெருக்கடிகளில் ஆலயப் பெருமைகளையும் மகளிர் இல்லப் பெருமைகளையும் சிறப்பாகப் பேணிய பெருமை இவருக்கு உண்டு.

எங்கு எவரின் இன்ப துன்ப நிகழ்வுகளாக இருக்கலாம் அங்கெல்லாம் தம்பதியராக நந்தினி ஆசிரியையுடன் காணப்படுவார். துன்பமுற்றோருக்கு துயர் துடைக்கும் மனித நேயம் மிக்கவர். தமது உடம்பைப் பொருட்படுத்தாது வாழ்ந்தவர் இன்று நம்மிடையே இல்லை என்ற கவலை வாட்டுகின்றது. இவரின் பணிக்களப் பதிவுகள் வரலாற்றுப் பதிவுகளாகும். இவர் ஒரு முடி சூடா மன்னன். யாவரதும் நட்புக்குப் பாத்திரமான தம்பி அண்ணை. அன்புடையோனாய் அனைவரது சுகதுக்கங்களில் பங்குகொள்ளத் தவறுவதில்லை. நல்லன செய்தோரை நாடும் எடும் போற்றும் என்பது உண்மையாகும். தம்பி அண்ணையின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

கா.சி.பாலன்.

# மக்கள் முகம்



அரியாலை நாவலர் வீதி யைச் சேர்ந்த முன்னாள் மக் கள் வங்கி உத்தியோகத்தர் எஸ்.சி.செல்வராசா சமாதான நீதவானாக கடந்த மாதம் யாழ். மாட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி அ.பிரேம் சங்கர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.


இவர் அரியாலை சித்திவிநாயகர் ஆலயம், அரியாலை சனசமூக நிலையம், மக்கள் வங்கி யாழ் மாவட்ட ஓய்வூதியச் சங்கம், அரியாலை அபிவிருத்திச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், பார்வதி வித்தியாலய பழைய மாணவர் சங்கம், சித்துப்பாத்தி இந்துமயானம் போன்ற அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்து வருவதுடன் சயன்ஸ் அக்கடமியின் ஆலோசகராகவும் இருக்கிறார். அரியாலைப் பிரதேசத்தின் சமூக சேவைகளில் அதிக ஈடுபாடு கொண்டு உழைத்து வருகின்றார்.




மீசாலை கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை அருமைநாயகம் கடந்த வியாழக்கிழமை சாவ கச்சேரி நீதிபதி ஏ.ஏ.ஆனந் தராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நிதிவானாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் சிரேஷ்டசாலைப் பரிசோதகராகவும், வீதிப் பரிசோதகராகவும் கடமையாற்றி யவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நான் பார்த்த மிருகக்காட்சிச்சாலை



















நான் இலங்கையின் தேசிய மிருகக்காட்சிச் சாலையைச் சென்ற வாரம் சென்று பார்த்தேன். அது தெகிவளை என்னும் இடத்தில் உள்ளது.

நான் மிருகக்காட்சிச்சாலைக்குள் நுழையும் போது ஓர் அறிவுறுத்தல் பலகையைக் கண்டேன். அதில் ''பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனைகள் தடைசெய்யப்பட்டுள்ளன'' என்று எழுதப்பட்டிருந்தது. அதன்படி பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பவற்றை உள்ளே கொண்டு செல்லாது சென்றோம்.

நாங்கள் உள்ளே நுழைந்தபோது வாயிலில் இருந்த நுழைவுச் சீட்டு வாங்குபவரிடம் எனது அம்மா எனக்கும் தம்பிக்கும் 30 ரூபா பெறுமதியுள்ள நுழைவுச்சீட்டை வாங்கினார். அம்மாவிற்கும் அப்பாவிற்கும் 100 ரூபா பெறுமதியுள்ள நுழைவுச்சீட்டை வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தோம். அருகில் நின்ற காவலர் அதைக் கிழித்து விட்டுத் தந்தார். நாங்கள் உள்ளே நுழைந்தோம்.

சிறிது தூரம் நடந்து சென்றோம். 100 kg-150 kg வரை எடையுள்ள மூன்று தீக்கோழிகளைக் கண்டு நான் பிரமித்துப்போனேன். அதற்கு அருகில் உள்ள படிகளில் அமர்ந்து நாங்கள் மதிய உணவை உண்டோம். அருகில் ஒரு சிறிய நீர்த்தடாகம் இருந்தது. அதில் சிறிய சுறா மீன்கள் நீந்தித் திரிவதைக் கண்டோம்.

குகை போல அமைக்கப்பட்டிருந்த இடத்தில் மீன் தொட்டிகளில் அழகான, வினோதமான மீன்களைப் பார்த்தோம். அவற்றுள் பெரிய மீன்கள் மூன்றும் இருந்தன. அவற்றைப் பார்த்து நான் அதிர்ச்சி அடைந்தேன்.

மிருகக்காட்சிச்சாலையில் இருந்த பறவைகள், மிருகங்கள் மற்றும் அழகிய காட்சிகளையும் நான் ஒளிப்படம் எடுத்துக் கொண்டேன். அங்கு இருந்த யானைகள் பாகனின் சொல்கேட்டு நடந்தன. அது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. வேறு பல வினோதமான மிருகங்களும் பறவைகளும் அங்கு இருந்தன. வேறுபல நாடுகளில் இருக்கும் மிருகங்களும் பறவைகளும்கூட அங்கு காணப்படுகின்றன.


அனைத்து மிருகங்களிலும் பார்க்கக் குரங்குகள் எங்களோடு மிகவும் சந்தோஷமாக விளையாடின. ஒரு குரங்கு, அருகில் இருந்த தொட்டியில் உள்ளே இருந்த நீரைத் தனது கைகளால் அள்ளி எத்தி ஆரவாரப்படுத்தியது. அந்தக் காட்சி மிகவும் குதூகலமாக இருந்தது. கிளி பச்சை நிறம் என்று படித்திருக்கிறேன். ஆனால் இங்கு பல வர்ண நிறமுடைய கிளிகளைப் பார்த்தேன். அவற்றுள் பஞ்சவர்ணக் கிளிகள் கண்ணைக் கவரும் அழகுடன் காணப்பட்டன. மிருகக்காட்சிச்சாலையில் இருந்த பல விளக்கப் பலகைகளில் மிருகங்கள் பற்றியும் பறவைகள் பற்றியும் சிங்கள மொழியிலும் ஆங்கில மொழியிலும் மட்டுமே எழுதப்பட்டிருந்தன. சில விளக்கப் பலகைகளில் மட்டுமே தமிழிலும் எழுதப்பட்டிருந்தது. அவையும் எழுத்துப் பிழைகளுடனேயே எழுதப்பட்டிருந்தன. அவற்றுள் சில...

- உட்செல்லலாகாது - வட்செல்லவாகாது.
- தயவுசெய்து இம்மிருகங்களுக்கு உணவு கொடுத்துத் தொந்தரவு செய்யாதீர் - தயவுசெய்து இம்மிமுகநு்களுக்கு உணவு கொடுத்து தொந்நரவு செய்யாதீர்.
- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - பொறளாதார அபிவிருத்தி அமைச்சு

இவ்வாறான எழுத்துப் பிழைகள் ஒவ்வொரு விளக்கப் பலகைகளிலும் இருப்பதனால் என்போன்ற தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களால் இலகுவாக வாசித்து விடயங்களை அறிந்துகொள்ள முடியாது இருக்கிறது. ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இருக்கின்ற விளக்கப் பலகைகளில் தமிழிலும் விளக்கத்தை எழுத்துப் பிழைகள் இன்றி தந்தால் எம்போன்ற தமிழ் மாணவர்களும் அதிக விடயத்தை வாசித்தே அறிந்துகொள்ள முடியும். இல்லையேல் ஒவ்வொன்றுக்கும் அம்மாவையோ அப்பாவையோ கேட்கவேண்டியிருக்கிறது.

**தே.அபிராம்,**
5C, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை


## விசிறி



பார்க்க அழகு விசிறி
பனையோலை விசிறி
வெப்பம் போக்கும் விசிறி
பல வர்ண விசிறி
எனக்குப் பிடித்த விசிறி
கைக்குள் அடங்கும் விசிறி
எல்லோரும் விரும்பும் விசிறி
நல்ல நல்ல விசிறி

சி.கேசாயினி
தரம்-4, யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

## அரிஸ்டோட்டில்



வாழ்ந்த காலம்: கி.மு.384 - 322
சிறப்புக்கள்: பிளட்டோவின் முக்கிய மாணவர்.
நவீன விஞ்ஞானத்தின் பிதாவாகக் கருதப்படுபவர்.
பூமி கோளவடிவானது என்பதை நிறுவியவர். இவர் ஒரு தத்துவஞானி மட்டுமல்ல. விஞ்ஞானியும் கல்வியியலாளருமாவார்.

ரா.உஷாந்தினி
ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.

## புகை நகரம்



உலகில் மிக மோசமான மாசடைந்த நகரங்களின் பட்டியலில் மெக்சிக்கோ முதலிடம் பெறுகின்றது. அடுத்து வருவது மும்பை மூன்றாவது இடத்தில் ஜகார்த்தா போக்கு வரத்து நெரிசல் மற்றும் மோசமான வாகன பராமரிப்பே இதன் முக்கிய காரணிகள் ஆகும்.

# தையல் சிட்டுக் குருவி



தையல் சிட்டு அல்லது தையல்காரக் குருவி என்பது சிறிய பறவை ஆகும். தையல் சிட்டு சிறிய வட்ட வடிவ சிறகுகளையும், உறுதியான கால்களையும், நீண்டு வளைந்த அலகையும் கொண்டு காணப்படும். செங்குத்தான இதன் வால் தனித்தன்மையானது. இவை கானகத்திலும் குறுங்காடுகளிலும் தோட்டங்களிலும் காணப்படும்.

தையல் சிட்டு என்னும் பெயர் கூடு கட்டும் விதத்தைக் கொண்டு அமைந்த காரணப் பெயராகும். பெரிய இலைகளின் ஓரங்களை துளையிட்டு தாவர நார் மற்றும் சிலந்திகளின் வலையை பயன்படுத்தி தையல் சிட்டு தன் கூட்டை தைத்து அமைக்கிறது.



[illegible] பாலர் கல்வி நிலையத்தின் ஆண்டிறுதிக்கான கலைவிழா அண்மையில் [illegible] இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்வி நிலைய பாலர்களின் நடன நிகழ்வைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இதுவரை நடந்த கதை...."

■தொல்புரம்:சி.கதிர்காமநாதன்

அடடா 2011ஆம் வருடம் முடிந்து இன்றோடு ஒரு கிழமையாகின்றது. நினைக்கவே ஆச்சரியமாக உள்ளது. எல்லாம் எவ்வளவு விரைவாக நடந்து முடிந்து விட்டது. சென்ற வருடம் விடை பெற்றுப் போய்விட்டது. கடந்த வருடத்தில் எம்மக்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துகளோடு, பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு அவற்றில் எவ்வளவு நிறைவேற்றப்பட்டன என்பதை இந்தப் புதிய வருடத்தில் அறிவிக்கப்படும் வாக்குறுதிகளோடு சேர்த்து யோசித்துப் பார்த்துக் கொள்ளவும். வாக்குறுதிகள் பேச்சுவார்த்தைகள் என்ற சொற்களைக் கேட்டால் எம் மக்களுக்கு அவை கசப்பானதாக இருக்கிறது. உச்சரித்துப் பார்த்தால் நாவிலே ஒட்டிக் கொள்ள மறுக்கின்றது.

காலங் காலமாய் போராட்ட காலம் தொட்டு, கேட்டுக் கேட்டு சலிப்பும், வெறுப்பும் ஏற்பட்டுவிட்டன. அடுத்து என்ன நடக்கப்போகின்றது? எந்த நம்பிக்கையில் கால் பதித்து இந்த ஆண்டை வரவேற்கின்றோம்? இப்போதும் கோஷங்கள், உணர்ச்சிப் பிழம்பான வசனங்களை மீண்டும், மீண்டும் சொல்லிக் கொண்டு இருக்கப் போகின்றோமா? புத்திசாலிகளாக யார் இருக்கப் போகிறீர்கள்? முட்டாள்களாக யார் இருக்க விரும்புகிறீர்கள்? இதுவரையும் நடந்த கதை என்ன? பத்திரிகையிலோ, சஞ்சிகையிலோ ஒரு தொடர் கதையானது சில வாரங்கள் கடந்த பிறகு புதிதாக இணைந்து கொண்ட "வாசகர்களுக்காக அவர்களும் தொடர் கதையினைத் தொடர்ந்து படிப்பதற்கு" இதுவரை நடந்த கதை என்று சுருக்கமாக வெளியிடுவார்கள்.

இதுவரை நடந்த கதையினை நாம் யாருக்குச் சொல்ல வேண்டும்? நடந்த கதையினை இக்கால கட்டத்தில் வாழ்ந்து, அலைந்து திரிந்த எம்மக்களில் பலர் "தெரிந்து தான்" வைத்துள்ளார்கள். பலர் இப் பயணக்கதையில் பாத்திரங்களாக மாறி, பயணத்தில் இணைந்து இன்பத்திலும், துன்பத்திலும் தம்மையும், தமது குடும்பங்களையும் பிணைத்து பங்கு பற்றி பலரை இழந்து, நிர்க்கதியாகி வாழ்வினைத் தொலைத்து, பூர்வீகத்தை இழந்து, உற்றம் சுற்றம் மறந்து நடைப்பிணங்களாக கேள்வி கேட்க முடியாத நாதியற்ற மனிதர்களாக இருந்துகொண்டு இப்புது ஆண்டில் கால் வைத்து உள்ளனர். இவர்களால் "நடந்த கதையினை மறக்கவே முடியாது. அப்படியானால் தெரியாதவர்கள் யார்? சற்று யோசித்துப் பார்த்தால் எமது போராட்ட வாழ்வில் இன்னல்கள் தெரியாமல் ஓர் இனம் இருப்பது தெரியவரும். பிரச்சினையான கால கட்டத்தில் கருவில் உருவாகி வயிற்றில்தங்கி ஓடி ஓடி வளர்ந்தவர்கள் தான் இவர்கள். இவர்கள் சாதாரண வகுப்போடு கல்வி கற்று, வேறு என்ன விசயங்களைக் கற்றுக் கொண்டு வளர்ந்து இருப்பார்கள். இவர்களுக்குத் தற்போது என்ன விசயங்கள் அதிகமாகத் தெரிகின்றது? நாற்பக்கலும், பொற்றாசியம் நைத்திரைற்றும்தெரிந்துகொண்டால் மட்டும்போதுமா?

எமது வரலாறு தெரிய வேண்டாமா? அதன்வலிகள் தெரியவேண்டாமா? வேதனைகளை உள்வாங்க வேண்டாமா? இம் மண்ணுக்குள் புதைந்துபோயுள்ள, உக்கிப் போயுள்ள இப்போதும் வெளியே "உக்காமல் தெரிந்து கொண்டிருக்கும் மனித எலும்புகளின் சரித்திரக் கதைகளை" இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டாமா? பிள்ளைகள் படிக்கிறார்கள். கண்டியை ஆண்ட விக்கிரமராஜசிங்கன் எங்கே சிறை வைக்கப்பட்டார்? யாழ்ப்பாண ராஜ்ஜியத்தின் கடைசி தமிழ் மன்னன் யார்? தனது தந்தையாரை உயிரோடு சமாதி வைத்துக் கொன்ற சிங்கள மன்னன் யார்? நோர்த், கண்டி மீது எந்த ஆண்டு படையெடுத்தான்? வரலாறுகள் லேசுப் பட்டது அல்ல. கேள்விகள் அதிகம். அதற்குரிய விடைகளை ஆழமாகப் பார்த்தால்...

மிகப்பெரியதாக பல சம்பவங்களையும் துன்பியல் நிகழ்வுகளையும், துரோகத் தனங்களையும் கொண்டதாக இருக்கும். வரலாறு தொன்மையானது. படிக்கப் படிக்க புதுப் புதுப் விடயங்கள் தெரிய ஆரம்பிக்கும். மேலும் அவற்றை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் பிறக்கும். ஒரு நாட்டின் வரலாற்றோடு நாம் பல பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். பல நாடுகளில் அரசியலோடு, அரசர்களின் எழுச்சியையும், வீழ்ச்சியையும் அறிந்து கொள்ள முடியும். சரி இதுவரையும் நடந்த கதைப் பாணியில் நாம் எமது வரலாற்றை எடுத்துக் கொண்டால் எமது கதை தெரியாமல் வளர்ந்து கொண்டிருக்கும் மைந்தர்களுக்கு நாம் எந்த வரலாற்றை, எக் கதையினை சொல்லப் போகின்றோம்? யாழ்ப்பாணத்தில் சிமெந்து தொழிற்சாலை எங்குள்ளது? இயலிசை வாரிதி என்ற பட்டப் பெயர் கொண்ட வித்துவான் வீரமணி ஐயர் பிறந்த ஊர் எது? தட்சணாமூர்த்தி என்ற கலைஞன் எந்தக் கலைத்துறையில் சிறந்து விளங்கினார்? இப்படி ஏகப்பட்ட கேள்விகள் எமக்குள் இருக்கின்றன. ஆனால் விடைகள் எல்லோருக்கும் தெரிந்து இருக்கிறதா? எம்மவர்களைத் தெரியாமல் அவர்களது சாதனைகளை அறியாமல் நாம் வாழ்வது பிரயோசனமானதா? வரலாறுகளையும், அவற்றின் கதாநாயகர்களையும், வருடங்களையும், நாள்களையும் யாரும் மாற்றி விட முடியாது. மறுபடியும் விடயத்துக்கு வருவோம். இனி நாம் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டிய வரலாறு என்ன? இதுவரை நடந்த கதையில் முக்கியமாக சொல்லப்பட வேண்டியவை என்ன? இதுவரை காலமும் எமது போராட்டம் கதையின் பாணியிலே போய்விட்டது. அடுத்தது என்ன? அடுத்தது என்ன? என்று சஸ்பென்ஸ் வைத்து தொடர்ச்சியான 30 வருட அத்தியாயங்கள் முடிந்துவிட்டன.

அல்லது மறுபடியும் உணர்ச்சி பொங்கப் பேசி உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி, எல்லோருக்கும் அதிக பட்ச உற்சாகத்தைக் கொடுத்து, மீண்டும் புதிதாக அனைவரும் வாசிக்கக் கூடியதாக சஸ்பென்ஸ், த்ரில் நிறைந்த நாவலைத் தொடரப் போகிறோமா? இதோடு விட்டு விடாமல் தூரத்தே பலமைல் தூரம் இருந்து கொண்டு வர்ண விளக்குகள் எரிய, கரைவேட்டி சால்வைகளோடு, பரிவாரங்களோடு மேடை ஏறி மூன்றாம், நாலாம், ஐந்தாம் யுத்தம் வெடிக்கும் என்று அட்டகாசமாய் சினிமாப் பாணியில் அறிக்கைகள் விடப்போகிறோமா?

எனவே இதுவரை நடந்த கதையினை சொல்ல விரும்புகின்றவர்கள். இவற்றை மனதில் கொண்டு தாராளமாக "கதையினை சொல்லத்தொடங்குங்கள்." பலர் ஆவலாய் உள்ளனர்.

* * *

# தேவை

-பாஷோவின் கரும்பலகை-

அந்த இடத்திற்கு பாஷோ தனது மாணவர்களுடன் வந்திருந்தார்.

தூரத்தில் ஒரு பெரிய சுவர் இருந்தது. சுவற்றுக்கு அப்பால் உள்ள மரத்தில் நல்ல கனிகள் இருந்தன.

பாஷோ தனது மாணவர்களை நோக்கி, "நான் சொல்லும் வரை இந்த இடத்தில் தான் நீங்கள் இருக்க வேண்டும்... உங்கள் விருப்பத்திற்கு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்... பசித்தால் அதோ அந்த மரத்தில் இருக்கும் கனிகளைப் பறித்துச் சாப்பிட்டுக் கொள்ளலாம்..." என்றார்.

மெல்ல மெல்ல நேரம் கடந்தது.

அதிகாலையிலேயே வந்துவிட்டதால் மாணவர்களுக்குப் பசிக்க ஆரம்பித்து விட்டது. மாணவர்கள் திரும்பி அந்த மரத்தைப் பார்த்தார்கள். கனிகள் நன்கு பழுத்துக் கிடந்தன. ஆனால் அந்தப் பெரிய சுவர் தடையாக இருந்தது. சுவரைத் தாண்டித் தான் போய்க் கனிகளைப் பறிக்க முடியும். அவ்வளவு பெரிய சுவரை ஏறி எப்படித் தாண்டுவது? என்று எல்லோரும் யோசித்தார்கள். பசிதானே கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொண்டால் போயிற்று என்று அமைதியாக இருந்தார்கள். நேரம் போய்க் கொண்டிருந்தது. மதிய உணவு நேரமும் வந்தது. மாணவர்களுக்குப் பசி பயங்கரமாக இருந்தது. பாஷோவைப் பார்த்தார்கள். அவர் இப்போது கிளம்புகிற மாதிரி இல்லை. மௌனமாக இருந்தார்.

மாலை நான்கு மணி ஆயிற்று.பசியில் மாணவர்கள் துடித்தார்கள். இதற்கு மேல் பசிதாங்க முடியாது என்று ஒரு மாணவன் நினைத்தான். திரும்ப மரத்தைப் பார்த்தான். கனிகளைப் பார்த்தான். பாய்ந்து ஓடினான். அந்தப் பெரிய சுவரின் மேல் சுலபமாக ஏறி மரத்தின் கிளையைப் பற்றினான். கனிகளைக் கொய்தான். சாப்பிட்ட பிறகு தான் அவனுக்குச் சுய நினைவே வந்தது அவ்வளவு பசி. மெல்ல அவன் இறங்க, ஒவ்வொருவராக அவனைத் தாண்டி சுவர் மேல் ஏறி கனிகளைப் பறித்து பசியாறினார்கள். பாஷோ எல்லாவற்றையும் பார்த்து விட்டு முதலில் ஏறிப் பறித்தவனைக் கூப்பிட்டார்.

"அந்தத் திசையில் காலையில் பார்த்த போது என்ன தெரிந்தது?"

"பாதை, சுவர்,மரம், கனிகள்"

"அதே திசையில் மாலையில் பார்த்த போது என்ன தெரிந்தது?"

"கனிகள் மட்டும் தான்.."

"காலையிலும் மாலையிலும் உனக்கு ஏற்பட்ட வித்தியாசம் என்ன?..."

"பசி ஒன்றுதான்... காலையில் பசி குறைவாக இருந்தது...மாலையில் பசி அதிகமாக, மிக அதிகமாக இருந்தது..."

பாஷோ புன்னகைத்தார்.

**-பாஷோவின் கரும்பலகை-**

காலையில் தெரிந்த சுவர் மாலையில் தெரியவில்லை காரணம் தேவை.

* * *

தேவை அதிகமாக அதிகமாக தடைகள் கண்ணிலிருந்து மறைந்து இலக்கு மட்டும்தான் தெரியும்.

* * *

கனிகளைப் புசிக்க வேண்டுமென்றால் உங்களிடம் பசி இருக்க வேண்டும்.

* * *

[illegible] கொள்ளுங்கள் வெற்றியடைவது சுலபமாக இருக்கும்.

■ ந.சுந்தரம்பி

# நாடகம் எழுதுவ எப்படி

(சென்றவார

**கதை**

நாடகத்தில் ஒரு கதை இருப்பது அவசியம். கதையே நாடகமாக்கப்படுகிறது. கதை வளர வளர நாடகமும் நகரும். வாசகர்களைக் கவர்ந்திழுப்பது கதையே. கதையே இல்லாத நாடகங்களும் நடிக்கப்படுகின்றனதான். அவை வெறும் கேலிக்கூத்தாகக் காட்சியளிக்கும்.

நாடகத்திற்கான கதையை எங்கே இருந்து பெறுவது? வாழ்க்கையில் இருந்து தான். வேறு எங்கேயிருந்து? நாடகக் கதைகளுக்கா பஞ்சம்? தினமும் எங்களைச் சுற்றி எத்தனை நாடகங்கள் நடைபெறுகின்றன! பழைய கதைகள், புதிய கதைகள், எதிர்காலத் திட்டங்கள், புளுகுகள், பொய்கள்... எங்கள் ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் நாடகப் பாங்கான ஒரு சில சம்பவங்களாவது நடந்திருக்கும். எங்கள் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், ஊரவர்கள் வாழ்க்கைகளிலும் தான்.

அவற்றை யெல்லாம் நாங்கள் கண்டு கொள்வதில்லை . தினம் தினம் செய்திப் பத்திரிகைகளில் எத்தனை சுவையான சம்பவங்கள் பிரசுரிக்கப்படுகின்றன? நிஜ வாழ்க்கையில் நடக்கும் சில கதைகள், நாம் மேடையில் பார்க்கும் நாடகக் கதைகளைவிடச் சுவையானவை!

எனது பெரும்பாலான நாடகங்களின் கதைகளை வாழ்க்கையிலிருந்தே பெற்றேன். வாழ்க்கையை நாடகக் கண் கொண்டு கூர்ந்து கவனியுங்கள். எந்த நேரமும் நாடகத்துக்கான ஒரு கருவைப் பாய்ந்து பிடிப்பதற்குத் தயாராக உசாராக இருங்கள். ஒரு கருத்து, ஒரு சம்பவம் , ஒரு கதை, ஒரு காதாபாத்திரம் எதிலிருந்தும் நாடகம் உருவாகலாம்.

அதைக் கண்டுபிடித்து நாடகத்தை உருவாக்குவது நாடகாசிரியனுடைய திறமையைப் பொறுத்தது. அதற்கு நாடக உணர்வு (Dramatic Sense) வேண்டும். அந்த உணர்வு இயல்பாகவே அமையப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள்! மற்றவர்கள் அதைப் பயிற்சியால் பெறலாம்.

**கதைக் கோப்பு (Plot)**

"புளொட் என்றால் பிளான்". நீங்கள் கட்டப் போகும் கட்டடத்தின் வரைபடம். நீங்கள் கட்ட இருக்கும் நாடகம் எந்த மாளிகையின் அடித்தளம். இதை நாங்கள் கதைப்பின்னல், கதையின் திட்டம் என்றும் அழைக்கலாம். நாவல் சிறுகதை ஆகியனவும் திட்டம் போட்டுத்தான் எழுதப்படுகின்றன.

ஆனால் அவற்றைவிட நாடகத்துக்கே இது மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. நாடகம் மேடை, வானொலி, தொலைக்காட்சி என்று பல ஊடகங்களிலும் நடிக்கப்படுவது. ரசிகர்கள் அதை நேரில் பார்க்கிறார்கள், அல்லது கேட்கிறார்கள். அது அவர்களைக் கவர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ரம்பிள்ளை




(...வாரத் தொடர்ச்சி)

உங்கள் நாடகத்தின் தோற்றுவாய் மோதல், எழுச்சி, உச்சக்கட்டம், வீழ்ச்சி சமநிலை கருத்து எல்லாம் இதில் அடங்கியிருக்கும். நன்றாகத் திட்டமிடப்பட்ட நாடகம் விறுவிறுப்பாகவும், சுவையாகவும் வேகமாகவும் ஓடும். திட்டமிடப்படாத நாடகம் குழப்பமாக இருக்கும்.

**பாத்திர வார்ப்பு**

பாத்திரப் படைப்பு நாடகத்தில் ஓர் இன்றியமையாத அம்சம். நாடகம் என்பது அதில் வருகின்ற பாத்திரங்களது கதைதானே? பாத்திரங்கள் இல்லையென்றால் நாடகமேஇல்லை. பாத்திர வார்ப்புப் பிழைத்தால் நாடகமும் பிழைக்கும்.

பாத்திரங்களது உறவு, பகை, கொண்டாட்டங்கள், மோதல்களில்தான் நாடகம் கட்டி எழுபப்படுகிறது. நாங்கள் சமூகத்தில் சந்தித்துப் பேசிப் பழகும் மனிதர்களைப் போன்ற பாத்திரங்களைப் படைத்தளித்தால் தான் பார்வையாளர்கள் இலகுவாக அவற்றுடன் ஒன்றி நின்று நாடகத்தை நன்கு ரசிப்பர். அப்பாத்திரங்கள், கஷ்டப்பட்டுப் போராடும் பொழுது ரசிகர்களும் அவற்றுடன் சேர்ந்து போராடுவர். அவை வெற்றி பெறும் போது பார்வையாளரும் மகிழ்வர். இந்தப் பாத்திரப் பார்வையாளர் ஒன்றிப்பு எவ்வளவுக்கெவ்வளவு இறுக்கமாக அமைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நாடகமும் வெற்றிபெறும்.

ஆசிரியர் பாத்திரங்களை வெவ்வேறு குணப்பண்புகள் உள்ளவர்களாகப் படைத்தளிப்பது நல்லது. அப்பொழுதுதான் அவற்றுக்கிடையிலான உரசல்கள் மோதல்களில் சூடு பிடிக்கும். நாடகத்தில் சுவையும் பிறக்கும். நல்ல நல்ல கருத்துக்களும் உதிர்க்கப் படும்.

எத்தனை பாத்திரங்கள் வேண்டும்? கதைக்குத் தேவையான பாத்திரங்கள் வேண்டும். கதைக்குப் பாத்திரங்களே தவிர, பாத்திரங்களுக்காகக் கதை இல்லை. நாவலில் எத்தனை பாத்திரங்களையும் புகுத்தலாம். ஆனால் நாடகத்தில் தேவையில்லாத ஒரு பாத்திரத்தைக்கூட கொண்டுவரக்கூடாது.

அப்படிக் கொண்டு வந்தால் நாடகத்தில் குழப்பம் ஏற்படும். ஒரு பாத்திரத்தையும் சரிவர வார்த்தெடுக்க முடியாது. வானொலி தொலைக்காட்சி நாடகங்களில் பாத்திரங்களை மிகுந்த எச்சரிக்கையுடன் படைத்தளிக்க வேண்டும். அவற்றில் நாலு ஐந்து பாத்திரங்கள் போதுமானவை.

**உரையாடல்**

நாடகத்தில் கவனிக்க வேண்டிய இன்னும் ஒரு சிறப்பு அம்சம் உரையாடல். நாடக ஆசிரியன் தான் சொல்ல வந்தது எல்லாவற்றையும் பாத்திரங்களது உரையாடல் மூலமல்லவா வெளியிடுகிறான்! அவனுக்கு உள்ள ஒரே ஆயுதம் உரையாடல்.

# பெர்னாட்ஷாவின் வாழ்வும் பொன் மொழியும்

(சென்றவாரத் தொடர்ச்சி)




நீங்கள் பேரறிஞர் நான் பேரழகி நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டால் நமக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கு உங்கள் அறிவும் எனது அழகும் நிறைந்திருக்கும் அல்லவா என்றாள் அவள். யார் கண்டார்கள்? ஒருவேளை உங்கள் அறிவும் என் அழகும் சேர்ந்துவிட்டால்.... என்று பெர்னாட்ஷா கூறியதும் பெண்மணி பேசாமடந்தையானாள்.

ஒருநாள் ஒரு இளம் எழுத்தாளர் ஒருவர் பெர்னாட்ஷாவிடம் சென்று,தான் ஒரு நாடகம் எழுதியிருப்பதாகவும் அது பற்றிய கருத்தை அவர் தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். அப்படியா சரி படியும் நான் கேட்கிறேன் என்றார் பெர்னாட் ஷா. உடனே இளம் எழுத்தாளர் கையோடு கொண்டுவந்த கையெழுத்துப் பிரதியை மடமடவென வாசிக்கத் தொடங்கினார். படித்துக் கொண்டிருந்தவர் பக்கத்தில் குறட்டை ஒலி கேட்கவே ஏறிட்டுப் பார்த்தார். பெர்னாட்ஷா நன்றாகத் தூங்கிய வண்ணம் குறட்டை வேறு விட்டுக் கொண்டிருந்தார்.

தங்களின் கருத்தை அறியவேண்டும் என்று அல்லவா வந்தேன் என்றார் அந்த இளம் எழுத்தாளர். நான்தான் என் கருத்தைத் தெரிவித்துவிட்டேனே என்று பெர்னாட்ஷாஷா கூறியதும் எழுத்தாளர் முகம் சுருங்கியது. பெர்னாட்ஷாவின் பொன்மொழியினைப் பட்டியலிடுவோமானால் அவை மிகவும் நீண்டு கொண்டே செல்லும். ஏலவே பிரதானமான சிலவற்றை ஆராய்வோம்.

பட்டினி கிடப்பவன் - அவன் எவ்வளவு கண்ணியமான அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் - அபாயகரமான ஆசாமி தான். சாப்பாட்டை முடித்துக் கொண்டவன் ஒரு நாளும் புரட்சிக்காரனாக மாட்டான். நீதிமன்றில் எதிர், எதிர்க் கட்சிகளில் வாதாடும் சட்டத்தரணிகள் கத்தரிக்கோலின் இரு பக்கங்களைப் போன்றவர்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நடுவில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் இரண்டு பக்கக் கட்சிக்காரர்களையும் நன்றாக வெட்டிவிடுவார்கள்.

யூலியஸ்சீஸர், நெப்போலியன், ஹிட்லர் போன்றோர் புகழ்வதற்குரியவர்கள் அல்லர். இவர்களை உலகத்தை அழிக்க வந்த தொற்று நோய்கள் என்றும் கூறலாம். இராணுவ வீரன் ஒருவன் துப்பாக்கியைப் போற்றுவது போலவும், இசைக் கலைஞன் வீணையைப் போற்றுவதைப் போலவும் பெண் தன் கணவனைப் போற்றுகின்றாள். சாதாரண மக்கள் கடவுளைப் பிரார்த்திப் பதில்லை பிச்சை தான் கேட்பார்கள்.

வாழ்க்கை என்பது சிறு மெழுகுவர்த்தி அல்ல. எனக்கு அது அற்புத தீபம். அதைத் தற்சமயம் கையில் பிடித்திருக்கும் நான் வருங்காலச் சந்ததியினரிடம் ஒப்படைப்பதற்கு முன் எவ்வளவு பிரகாசமாக எரியச் செய்ய முடியுமோ அவ்வளவு பிரகாசமாக எரியச் செய்ய விரும்புகின்றேன்.

நல்லொழுக்கம் என்பது உனக்கு நீயே அளித்துக் கொள்ளும் நன் மதிப்பாகும். பயமே மனிதனைப் போரிடச் செய்கின்றது. யுத்தம் உண்டாவதற்கு மூலகாரணம் பயம் தான்.

*(முற்றும்)*

# அவனருளின்றி அவனடி தாழ்தல் அரிது

(சென்றவாரத் தொடர்ச்சி)






பகீரதனின் தவம் காரணமாக இங்கு கொண்டு வரப்பட்டதனாலேயே பாகீரதி கங்கை என அழைக்கப்படுகின்றது. பின் வரிசையில் ஏறக்குறைய இரண்டு மணித்தியாலங்கள் நின்று விநாயகர் கோயில், கௌரிசங்கர் கோயில், மகரவானத்தில் அமர்ந்திருக்கும் கங்கோத்ரி அம்பாள், மகாலட்சுமி அன்னபூரணி, யமுனாதேவி, சரஸ்வதி, ஜானகி ஆகியவற்றைத் தரிசித்து, வணங்கி பிரார்த்தனையை நிறைவேற்றினோம்.

பின் ஆலயத்தின் வெளிப்பிரகாரத்துக்கு வந்தபோது அங்குள்ள கௌரி குண்டத்துக்கு அருகில் சில மலை முகடுகள் தெரிந்தன. அவை சுதர்சன சிகரம், மைனா சிகரம், மாத்திரி சிகரம், மந்தாஜினி சிகரம், கங்காசிகரம், பகீரத சிகரம், வசிஷ்டசிகரம் என்று வழிகாட்டி எமக்குக் காட்டினார். ஆனால் அவை எல்லாம் ஒரே மாதிரியானவையாகவே எமக்குத் தெரிந்தன.

மேலும் சிவபெருமான் உமாதேவியாரின் வேண்டுதற் பிரகாரம் பாகீரதி கங்கையைத் தனது சிரசில் சூடிக் கொண்ட நிகழ்வும் இங்கேதான் நடைபெற்றதாகவும் கூறினார்கள்.

இவ்வாலயமும் யமுனோத்திரி போலவே சித்திரை மாதத்தில் திறக்கப்பட்டு தீபாவளிப் பண்டிகையுடன் மூடப்படுகின்றது. மிகுதி ஆறுமாதங்களும் தேவர்களினால் பூஜிக்கப்படுகின்றதாம்.

இவ்வாலயத்தை வேத சாஸ்திரங்களை நன்கு கற்ற 16 பண்டிதர்கள் நிர்வகித்து வருவதாகவும் கூறினார்கள்.

ஆலயப் பிரார்த்தனைகள் நிறைவேறிய பின்னர் பிற்பகல் 12.40 மணியளவில் உத்தரகாசியை நோக்கிப் பிரயாணத்தை மேற்கொண்டோம். அங்கிருந்து நாற்படையாத்திரைத் தலங்களுள் மூன்றாவதாகத் தரிசிக்க வேண்டிய கேதாரநாத் செல்வதற்காக 131 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஸ்ரீநகரை நோக்கிப் புறப்பட்டோம். 30 கிலோ மீற்றர் பிரயாணத்தின் பின் மண் சரிவு காரணமாக வீதி சீரற்று இருந்த காரணத்தால் இடையிலுள்ள சிற்றூரில் இரவு தங்கினோம்.

மறுநாள் காலை 6 மணிக்கு இடைத்தங்கல் விடுதியிலிருந்து புறப்பட்டு ஸ்ரீநகர் நோக்கி வந்தபோது வழியில் மீண்டும் மண்சரிவு ஏற்பட்டிருந்ததால் வேறுபாதை வழியாகத் தாமதமாகவே 'மஜாலி' என்ற ஊரை அடைந்து சற்று இளைப்பாறிய பின்னர் பிற்பகல் 12.40 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு இரவு 6.45 மணிக்கு கௌரி குண்டத்தையடைந்து விடுதியில் (லொட்ஜ்) தங்கினோம். உத்தர காசியிலிருந்து தராலி, தேவப்பிரயாகை, ஹரிப்பிரயாகை, கங்கனானி, ருத்திரப்பிரயாகை, குப்த காசி, ஸ்ரீநகர், சோனப் பிரயாகை ஆகிய ஊர்களினூடாகவே கௌரி குண்டத்திற்கு வந்து சேர்ந்தோம்.

தராலியில் ஸ்ரீ கண்டபர் வதத்திலிருந்து வரும் தூத் கங்கையும்,பாகீரதிகங்கையும், சேரும் இடத்தையும் அங்குள்ள பழைய சிவன் கோவிலையும் வாகனத்தில் இருந்தவாறே தரிசித்தோம். இன்னும் பல கோயில்கள் இப்பிரதேசத்தில் ஆற்றின் வெள்ளத்தால் மூடப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். தராலிக்கு அருகே கைலாச மலைக்கு ஒரு பாதை செல்வதாகக் கூறினார்கள். தற்போது அந்தப் பாதை பாவனையில் இல்லை என்றும் கூறினார்கள். அத்துடன் விஸ்வலிங்கப் பெருமான் வீற்றிருக்கும் கைலயங்கிரிப் பிரதேசம் சீனாவின ஆதிக்கத்துக்குட்பட்ட திபெத் பிரதேசத்தில் இருப்பதால் விசா அனுமதி பெறுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அவரைத் தரிசிக்க வாய்ப்பு ஏற்படவில்லை.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 100 வருட நிறைவில் எங்கள் பாட்டி



சிவபூமி முதியோர் இல்லத்துக்குள் நுழைந்த போது வாசலில் உள்வருவோர் வெளிச்செல்வோர் பதிவேட்டை வைத்திருந்தார் ஒரு முதியவர். அவரிடம் பதிவை மேற்கொண்டு விட்டு உள்நுழைந்தோம். ஒரு பசுமையான சுற்றுப்புறச் சூழல் எம்மை வரவேற்றது. அந்தச் சூழல் தந்த இதம் மனசுக்குள் விரிய அந்த வளாகத்துக்குள் கால் பதித்தோம். கோயிலுக்கு செல்கின்ற உணர்வு எம்மையறியாமலே. பாதணிகளை வெளியே கழற்றி விட்டு உள்நுழைந்தோம்.

''100 ஆவது அகவை கொண்டாடும் பாட்டியைச் சந்திக்க வேணும்'' மெல்லக் கேட்டோம். எங்களை அன்போடு வரவேற்று ஓரிடத்தில் அமர வைத்தார்கள். அந்த மூதாட் டியின் வரவை எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தோம். 100 வயதெண்டா எப்படியும் இயலாத, பேசமுடியாத பல நோய்களை தன்னுள் சுமந்திருக்கக் கூடிய ஒருவரை மனக் கண்ணுக்குள் வைத்திருந்தோம்.

ஆனால் சற்று நேரத்துக்குள் பாட்டியம்மா வாறா... பாட்டிம்மா வாற..'' என அங்கிருந்த வேறு முதியவர்கள் சொல்ல திரும்பிப் பார்த்த எமக்கு பெரிய அதிர்ச்சி. பாட்டியம்மாவுக்கு 100 வயதெண்டா... நம்ப முடியவில்லை. ஒரு 70-75 வயது மதிக்கத்தக்க திடகாத்திரமான உடற்கட்டோடும், அன்பும் கருணையும் சொட்டும் அழகிய முகத்தோடு சக்கர நாற்காலியில் இருந்து வந்த அந்த அம்மாவைப் பார்த்ததும் பரவசமானோம். எம்மை அறியாமலே எழுந்து "பிறந்த நாள் வாழ்த்துக்கள் அம்மா.." கை கொடுத்தோம். "Thank you" என்றார். அவரிடமிருந்து வந்த இந்தப் பதிலில் எம்மை நாம் சுதாகரித்துக் கொண்டோம்.

பின் மெல்லக் கதை கொடுத்தோம். பாட்டி எப்படிச் சுகம், நான் நல்ல சுகமா இருக்கிறன். இதுவரை நோய் நொடி என்று எதுவும் வந்ததில்லை... என்னால நடக்கவும் முடியும் என்று பெருமையோடு சொன்னார். என்ர பெயர் இராசநாயகி. நல்லூர் செட்டித்தெருதான் என், சொந்த இடம். அப்பா ஒரு டொக்டர். நாங்க ஏழு சகோதரர்கள், சகோதரங்களிலும் இருவர் டாக்ரர்தான். ஆனா இப்ப யாரும் உயிரோட இல்லை... நான் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலதான் படிச்சனான். எனக்கு 16 வயசிலேயே திருமணம் செய்து வைச்சிற்றினம். அந்தக் காலத்தில அந்த வயசில தான் திருமணங்கள் பெரும்பாலும் நடக்கும்.

என்னுடைய கணவன் ஒரு கிளாக். அவர் என்னுடைய 24 வயசிலேயே இறந்திட்டார். அன்றிலிருந்து இன்று வரை 76 வருசமா அவற்ற ஓய்வூதியம் எனக்குக் கிடைச்சுக் கொண்டு இருக்கு. எனக்கு 4 பிள்ளைகள். இப்ப இரண்டு பேர் மட்டும்தான் உயிரோட இருக்கினம். அதுகும் வெளிநாட்டில, 9 பேரப்பிள்ளைகளும் 13 பூட்டப்பிள்ளைகளும் எனக்கு இருக்கினம்.

அவர் பேசிக் கொண்டு இருக்கும் போதே குழந்தை ஒன்று அவரிடம் வர, அந்த இளந்தளிரைக் கட்டியணைத்து அன்போடு வருடி உச்சி மோந்தார்.

இந்தக் குழந்தைகளோட சேர்ந்து இருக்கிற சுகம் இருக்கே வெறும் வார்த்தைகளால சொல்ல முடியாது. அவரது அகம் போலவே முகமும் மலர்ந்தது. "இது என்ர கடைசிப் பேரன், மனைவி , பிள்ளைகள் 100 ஆவது பிறந்ததினம் கொண்டாடுவதற்காக வெளிநாட்டில இருந்து வந்திருக்கினம். அவர்களை அறிமுகப்படுத்திய பாட்டியின் முகத்தில் ஆயிரம் வோல்ரேச் புன்னகை மின்னியது.

''அதுசரி பாட்டி நீங்க எப்படி இந்த முதியோர் இல்லத்துக்க வந்தீங்க...''

எனக்குத் தனிமை பிடிக்கேல்ல... இப்ப மூண்டு வருசமாத்தான் இஞ்ச இருக்கிறன். அதுவரையும் உதவிக்கு ஆள்கள வைச்சுக்கொண்டு தனியத்தான் வீட்டில இருந்து வந்தனான். இப்பத்த சூழ்நிலை தனிய இருக்க முடியாமல் போயிற்று... அதுதான் இஞ்ச வந்தனான். என்ன இந்த முதியோர் இல்லம் நல்லாக் கவனிக்குது, அதைவிட வெளிநாட்டில இருந்தாலும் பிள்ளையல், பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளையள் என்று என்னை அடிக்கடி வந்து பாப்பினம். என்ன தங்களோட கூட்டிப் போக முடியவில்லையே என்ற கவலை அவர்களுக்கு.

என்னைப் பொறுத்தவரை என்ர மனசில ஒரு கவலையும் இல்ல... இருக்கும் வரை இல்லாதவர்களுக்கு உதவி செய்ய வேணும் எண்ட விருப்பம் . அதைத் தொடர்ந்து நான் செய்வேன். சுற்றிப் பார்க்க வேண்டிய இடமெல்லாம் பாத்திட்டன்- சிங்கப்பூர், இந்தியாவில புட்டபத்தி, காசி என்று எல்லாக் கோயில்களுக்கும் போயிருக்கிறன். இலங்கையிலும் திருகோணமலை, மட்டக்களப்பு, கதிர்காமம் எண்டு எல்லா இடமும் போயிருக்கிறன். இனி ஆசை எண்டு எதுவும் இல்ல. சிரித்த முகத்துடனே சொன்னார்.

அதுசரி பாட்டி அந்தக் காலச் சாப்பாடுகள் எப்படியிருந்தது. நான் மரக்கறிவகைதான் சாப்பிடுவன். அரிசிமாவை இடிச்சுச் செய்யிற பிட்டு, இடியப்பம் அதுதான் என்ர சாப்பாடு, ஆனா ஒண்டு, சாப்பாடு சுவையா இருக்க வேணும். இப்பவும் ருசியாச் சாப்பிடத்தான் விருப்பம். எனக்கு உடலில நோய்கள் இல்லாததால அதையே பின்பற்றுறன். சிரித்துக் கொண்டே சொன்னார். எனக்குப் பூப்போடுறது, தைக்கிறது, கைவேலைகள் செய்யிறது எல்லாமே விருப்பம். இப்பவும் அதில எனக்கு ஈடுபாடு இருக்கு.

அதைவிட படிக்கிற காலத்தில விடுமுறை எண்டாக் காணும். குடும்பமாப் போய் கீரிமலைக் கடலில நீச்சல் அடிக்கிறது. அதால நான் நல்லா நீந்துவன். அந்தக் காலத்தில அதுகும் என்ர பொழுது போக்கு.அந்தக் காலத்திலேயே நீந்துவீங்களா பாட்டி ஆச்சரியத்தோடு கேட்டோம். அவர் பொக்கை வாய் திறந்து சிரிப்பை பதிலாக்கிக் கொண்டார். இறுதியா ஒரு கேள்வி பாட்டி.. இன்றைய இளைய தலைமுறைக்கு நீங்க என்ன சொல்ல விரும்பிறீங்க...

கடவுள் மேல நம்பிக்கை வையுங்கோ எல்லாம் நல்லதாகவே நடக்கும். நம்பிக்கை தான் வாழ்க்கை என்றார். இறுதியாக இதுவரை நேரமும் தனது மணித்துளிகளை எம்மோடு செலவு செய்த பாட்டிக்கு நன்றி கூறிப் புறப்பட்டோம். எம்மனசுக்குள் வேர்விட்டு விழுதெறிந்து நிற்கும் அந்த ஆலமரத்தை சந்தித்த நிறைவு இருந்தது.

■ பிறேமினி, வாணி

# புத்தகசாலை

## நிஜங்களின் தரிசனம்

**வெளியீடு:** மீரா பதிப்பகம் கொழும்பு-6




'நிஜங்களின் தரிசனம்' என்ற நாமத்தோடு ஈழத்துப் பெண் எழுத்தாளர் வரிசையில் இணைந்தொளிரும் பவானி சிவகுமாரன் எழுதிய சிறுகதை நூல் கிடைக்கப்பெற்றது. சிறுகதைத் தொகுப்புக்கள் இரண்டினை இது வரை வெளியிட்டுள்ள அவரின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பான இது அண்மையில் வெளிவந்ததாகும்.

வாழ்வின் நிஜங்களையே வாசகர்களுக்கு வாசிக்க தருகிறேன் என்று கூறும் அவரது கதைகளில் நிஜங்களே காட்சிகளாகின்றன. அதிலுள்ள ஒவ்வொரு கதையின் கருவும் வெளிப்படுத்தும் வாழ்க்கைக் கோலங்களுக்குள் வாசகனை உள் வாங்கிக் கதைகளை வாசிக்கத் தூண்டும் வகை சிறப்பாக அமைந்துள்ளது.

ஒவ்வொருவரதும் வாழ்வின் பக்கங்களையும் அவர்தம் பல்வேறு உணர்வுகளையும் தனது மொழி நடைமூலம் வடித்தெடுத்துள்ள பாத்திரப் படைப்புகள் உயிர்ப்புடன் உலாவுகின்றன. அவரது கதைகளில் அன்று நடந்த இன்று நடக்கின்ற உண்மைகள் பல உரத்து உரைக்கப்பட்டுள்ளன.

பலரது வாழ்வில் என்றும் நினைவிலிருந்து அழியாத அந்தக் காட்சிகளைத் தனது கருத்து உரைக்காத வண்ணம் வாசகரிடமே சிந்திக்க விட்டுச் சென்றுள்ள சிறப்பு மீண்டும் மீண்டும் கதையை வாசிக்கத் தூண்டுகிறது. கசப்பான உறுத்தும் சம்பவங்களும் சமூகத்தின் நெருக்கீடுகளால் துன்புறும் சந்தர்ப்பங்களும் சிறுகதைகளாகியுள்ளன. காலத்தைக் காட்டும் இலக்கியமாக இத் தொகுப்பின் முழுமையை அவதானிக்கலாம்.

இதில் அவர் பார்த்த சமூகத்தையும் அதன்வழி அவர் பெற்ற அனுபவத்தையும் சொல்லும் கதைகள் பல உள்ளன. அவை நடுத்தர வர்க்கத்தினரையே குறித்து நிற்பதைக் காணலாம்.

அவர் தனது 'ஹலோ ஒரு நிமிடம்' எனக் குறித்த முன்னுரையிலே சகல சமூகப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுப்பவர்கள் இவர்கள் தான் எனக் கூறி ஏழை பணக்காரன் என்ற வர்க்கப் பிரிவுக்குள் சிக்காமல் விலகிச் சென்று விட்டார்.

சிறுகதை எழுத்தாளர்கள் பலரும் தமது அனுபவத்திற்கு உட்பட்டவற்றை எழுதும்போது பிறக்கின்ற மொழி வீச்சு அவர்களின் அனுபவத்தையும் கடந்து ஒளிர்வதில்லை. அந்த உண்மையை இவருடைய சிறுகதைகள் முழுவதுமாக உணர்த்துகின்றன.

ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில் ஒருவராக உயர்ந்துள்ள பவானி சிவகுமாரன் தனது சிறுகதை எழுத்துக்கள் மூலம் இலக்கியப் பரப்பில் தனக்கெனச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார் என்பதில் ஐயமேதுமில்லை. 'நிஜங்களின் தரிசனம்' அவரை மேலும் சிறுகதை நூல் வெளியீட்டு முயற்சிகளுக்கு ஊக்குவிக்குமென்பது நிஜமாகும்.

மகேஷ்.


## யாழ்ப்பாண உத்தியோகர் லக்ஷசண கும்மி யாழ்ப்பாண தேசவழமை

**வெளியீடு:** [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் கிழக்கு எம்.எஸ்.துரையால் சோதிடப் பிரகாசயந்திர சாலையில் பதிக்கப்பட்டதான யாழ்ப்பாண உத்தியோகர் லக்ஷணக் கும்மி. இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. அத்துடன் இணைந்ததாக யாழ்ப்பாணத் தேசவழமை எனும் யாழ்ப்பாண மக்களின் கொம்பனியார் காலத்து தேசவழமைச் சட்டங்களும் கட்டளைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஈழத்தில் சிறப்பாக எழுந்த கும்மிப் பாடல்கள். பல்வேறு சமூகத்தினதும் வாழ்வை வரலாற்றை வெளிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன.




இத்தகைய கும்மிப் பாடல்கள் பலவற்றுள் ஆங்கிலக் கல்வியைக் கற்று அதன் வழி அரச உத்தியோகங்களில் இருப்பவர்களின் நடைமுறைகள் பற்றிய விமர்சனங்களோடு பாடப்பட்ட கும்மிப்பாடல்களாக இவை காணப்படுகின்றன.

தேசவழமை பற்றிய பகுதியில் கொழும்பிலிருந்து அன்று தேசாதிபதியாகிய கொருநீலியு சுவான் சீமோனும் அவரது குழுவினராலும் தெரிவிக்கபட்டவையே இச்சட்டங்கள்- கட்டளைகள் என்கின்றார்.

அமரர்கள் முருகேசு வேலுப்பிள்ளை, வேலுப்பிள்ளை வள்ளிப் பிள்ளை ஆகியோரின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள இந்நூல் எமது பண்டைய இலக்கியப் பெருமைகளையும் வரலாற்றையும் விரித்துப் பெருமைப்பட வைக்கிறது.

ஒருவரின் நினைவு நூலாக இத்தகைய பயன்மிகு நூல்கள் வெளிவருவது அண்மைக்காலங்களில் அதிகரித்திருப்பதைக் காணுகின்றோம்.

இத்தகைய முயற்சிகள் தொடர்வது தமிழின் வளம் பெருகவும் வரலாற்று உண்மைகள் நிலைக்கவும் வழி செய்யும் என்று நம்பலாம்.

வேதாரண்யன்.

# நடப்பது நல்லது

" ஓடி விளையாடு பாப்பா" என்றுதான் சொல்கிறோம். ஓடிவிளை யாடு தாத்தா என்று சொல்வதில்லை. ஏன் அப்படிச் சொல்வதில்லை? தாத்தா ஓட ஆரம்பித்தால் தடுமாறிக் கீழே விழுந்துவிடுவார். ஓடு கின்ற வயதில் ஓட வேண்டும். நடக்கின்ற வயதில் நடக்க வேண்டும்.

நடப்பதென்றால் சாதாரணமாக நினைத்துவிடக் கூடாது. அது ஒரு பயிற்சி. வயதானவர்கள் பல பேருக்குப் பொதுவாக சில பிரச்சினைகள் இருக்கும் அதாவது மாலை நேரம் சரியாகப் பொழுதைக் கழிக்க முடியவில்லை சீக்கிரமாகப் பொழுது கழிகிறதில்லை என்று கூறிக் கொண்டிருப்பார்கள்.

வயதானதால் உடற்பயிற்சியும் செய்ய முடியவில்லை. அதனால் பேரப்பிள்ளைகளுடன் கிரிக்கெட் விளையாடவும் முடியவில்லை. உடம்பு எடையோ கூடிவிட்டது போன்று இருக்கிறது. நீரிழிவு நோய்; இரத்த அழுத்தம் இப்படிப்பட்ட தொல்லைகள். இதற்கெல்லாம் ஒரே பரிகாரம் என்ன தெரியுமா?

பேசாமல் எழுந்து மெதுவாக நடந்து போக ஆரம்பித்து விடுவதுதான். 'நடக்க வேண்டும்'. நடப்பது எல்லாவற்றுக்கும் மிகவும் நல்லது. வயதானவர்கள் மட்டும்தான் என்றில்லை. பெண்கள் குழந்தைகள் எல்லோருக்கும் இது மிகவும் நல்லது. அமெரிக்காவில் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னரும் மிகவும் ஆரோக்கியமாக இருக் கின்ற பலரிடம் ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்கள் .

இந்தக் கணக்கெடுப்பில் பலர் கூறிய பதில் என்ன தெரியுமா? "நாங் கள் தினமும் நான்கு கிலோ மீற்றர்களுக்குக் குறையாத தூரம் நடக்கின்றோம்.'' ''வாரத்துக்கு ஆறு நாள்களும் அப்படி நடக்கிறோம்''. என்றார்களாம். அது மட்டுமல்ல அவர்கள் எல்லோராலும் அதிக நாள்கள் உயிர் வாழ முடிகிறது.

நாம் நடக்கும் போது எமது உடம்புக்குள் என்ன மாற்றங்கள் நடக்கின்றன தெரியுமா? நடக்கும்போது எமது தோல், தசை இவற்றுக்கெல்லாம் பிராணவாயு கிடைக்கிறது. அதனால் சக்தியை வெளியிடுகின்ற திறமை எமது உடம்புக்கு அதிகமாகிறது.

இப்படி நடப்பதனால் இதயநோய் மூச்சு சம்பந்தமான சிக்கல்கள் எல்லாம் ஏற்படாமல் ஒரு பாதுகாப்பு கிடைக்கும். சுவாசப்பை, இதயம் இவற்றுக்கெல்லாம் சுலபமான நிதானமான பயிற்சி கிடைக்கிறது. வேகமாக நடக்கும் போது இரத்தக் குழாய்கள் விரிவடைகின்றன. இரத்தோட்டம் சுறுசுறுப்பாவதுடன் இதயப் பகுதிக்கு இரத்தம் வசதியாகக் கிடைக்கும்.

சிகரெட் பிடிப்பவர்களுக்கு இரத்தத்தில் கரியமிலவாயு, நிகோடின் போன்ற நச்சுப் பொருள் இருக்கும். இவற்றைச் சரிப்படுத்துவதற்கு நடப்பது மிகவும் நல்லது. இந்தத் தகவலை வாசித்துவிட்டு சரி நாமும் நடந்துதான் பார்ப்போமே என்று ஒரு முடிவுக்கு வந்து விட்டீர்களா? அப்படியானால் உங்களுக்குச் சில ஆலோசனைகள்.

நடக்க ஆரம்பிக்கிறோம் என்று சொல்லிப் புறப்பட்டு திடீரென்று நாகர் கோயில் வரைக்கும் நடந்து போகக் கிளம்பி விடாதீர்கள். முதலில் ஒரு நாளைக்கு இரண்டு கிலோ மீற்றர் என்று ஆரம்பியுங்கள். அதன் பின் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தி ஐந்து கிலோ மீற்றர் வரைக்கும் போங்கள். அது போதும்.

எப்போதாவது சமயம் கிடைக்கும் போது நடப்போம் என்று நினைக்காதீர்கள். இதைத் தினசரி ஒரு பயிற்சியாக வைத்துக் கொள்ள வேண்டும். தினமும் ஒரு மணி நேரம் நடப்பதாக இருந்தால் காலையில் அரைமணி நேரம் மாலையில் அரைமணி நேரம் எனப் பிரித்துக்கொள்ள வேண்டும். முதலில் 15 நிமிடம் நடக்கலாம். படிப்படியாக அதைக் கூடுதலாக்கி ஒரு மணித்தியா லஎத்துக்கு கொண்டு செல்லலாம். இதை இரண்டு மாதத்தில் செய்தால் போதும்.

எவ்வளவு வேகத்தில் நடப்பது என்பதுதை உங்களது சௌகரி யத்தைப் பொறுத்து நிர்ணயம் செய்யுங்கள். மணிக்கு மூன்றிலிருந்து ஐந்து கிலோ மீற்றர் வேகம் வரைக்கும் நடக்கலாம். இதயக் கோளாறு உள்ளவர்கள் மூச்சுக் கோளாறு உள்ளவர்கள் எல்லோரும் நடக்க ஆரம்பிப்பதற்கு முன்னர் வைத்தியர்களுடன் கலந்தாலோசிப்பது நல்லது.

சாப்பிட்ட உடன் குளிர்காற்றிலோ நல்ல வெயிலிலோ நடக் காதீர்கள். நடக்கும் போது கால் வசதியாக இருக்கிறதா மூச்சு இரைக் கிறதா? பரவாயில்லை. சிறிது நேரம் உட்கார்ந்து ஓய்வு எடுத்து விட்டு அதன்பின் நடக்கலாம். அதற்காகக் கையையும் காலையும் வீசிக் கொண்டு போங்கள். நடக்கும்போது நீங்கள் அணிந்திருக்கும் உடைகள் இறுக்கமாக இருக்கக்கூடாது. தளர்ச்சியாக்கி விட வேண்டும்.

கருவுற்ற தாய்மார்கள் தினம் 2 கிலோ மீற்றர் நடப்பது மிகவும் நல்லது. கோயில் பிரகாரத்தை சுற்றி வரும் பழக்கம் எதற்காகத் தெரியுமா? சூடேறிய கருங்கல் பாதத்தில் பட்டால் அது ஒத்தடம் கொடுக்கிற மாதிரி. வயதான பின் வேலையின் நெருக்கடியைக் குறைத்துக் கொள்ளலாமே தவிர அதற்காக ஒரே இடத்தில் உட்கார்ந்து விடக்கூடாது.



அறுபது வயது ஆனால் இதயம் வேலை செய்யும் திறன் 5 இல் 1 பங்கு குறைந்து விடும். அதே சமயம் இரத்த அழுத்தம் 5 இல் 1 பங்கு கூடி விடும் அதனால் இதயத்துக்கு இரண்டு விதத்திலும் பாதிப்பு .அதை சரிப்படுத் துவதற்கு சிறந்த வழி நடப்பதுதான்.

கோ.சுவாமிநாதன்

## வாசகர் திருமுகம்

### ஒலிபெருக்கியின் சத்தத்தை குறைப்பார்களா?

உடுவில் ஆலடிப்பகுதியில் உள்ள தளிர் முகாமில் இரவு, பகல் நேரங்களில் அதிக சத்தத்துடன் சினிமாப்படங்கள் ஒலிபெருக் கிகள் பயன்படுத்தி போடப்படுவதால் பிரதேச பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த முகாமில் இரண்டு, மூன்று வீடு களில் போட்டி போட்டு கள்ளத்தனமாக மின்சாரம் பயன்படுத்தி பெரும் சத்தத் துடன் சினிமாப் பாடல்கள் ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன.

இந்தச் செயற்பாடு இரவு, பகல் என ஓய்வில்லாமல் நடைபெறுகின்றது. இதனால் பிரதேச சிறுவர்கள் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் பாடல் படிக்கும் இடங்களில் ஒன்றாகக் கூடித் தமது பொழுதைக் கழிக்கின்றார்கள்.

அத்துடன் அருகில் இராணுவக் காவலரண் அமைந்துள்ள போதும் எந்தவித நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

ஒரு சிலரது இந்தச் செயற்பாட்டால் பிரதேச மக்கள் இரவு நேரத்தில் தூங்கமுடியாமல் துன்பப்படுவதுடன், நோயாளிகள் மேலும் நோயாளிகளாக மாறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள்.

எனவே இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

பிரதேசவாசி
உடுவில்.

### இலங்கை அரசின் அவலம்

குழந்தையாகப் பிறந்த மனிதன் முதிர் வடைந்து இறக்கும் காலத்தை நெருங்கிய வுடன் மீண்டும் குழந்தையாக மாறுகின்றான். எவ்வாறெனின் பிறக்கும்போது பல் இருப் பதில்லை. இறக்கும் காலத்தை நெருங்கிய வுடன் தனது பற்களை இழந்து விடுகின்றான். அதுமட்டுமல்லாமல் குழந்தையாக இருக்கும் போது நடக்க இயலாது தட்டுத்தடுமாறி நடக் கின்றான். அதேபோல வயோதிபம் அடைந் தவுடன் அவனால் நடக்க இயலாது தட்டுத்தடு மாறி நடக்கின்றான். இதனாலேதான் மனிதன் தனது இறுதிக்காலத்தில் ஆரம்பநிலையை அடைகின்றான் என்கின்றனர்.

இதேபோல இலங்கையின் ஆரம்ப காலத் தில் கிராமத்திற்குத் தலைவனாக (கமிக, காமினி) இருந்தவன் ஆட்சியாளனாக மாறி னான். இதற்குப் பின்னர் குடும்ப வழிச் சமுதாயமாகக் காணப்பட்டது. குடும்ப வழிச் சமுதாயம் என் றால் என்ன? ஆட்சியில் அண்ணன், தம்பி, மகன் மார் என அனைவரும் ஆட்சியில் ஈடுபடுவதே யாகும். தற்போதும் நமது இலங்கையில் இவ்வாறான ஆட்சியே நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சிரிப்பான விடயம் என்னவென்றால் மனி தன் முதிர்வடைந்து தனது ஆரம்ப நிலையான குழந்தைப்பருவத்தை எடுக்கும்போது இறந்து விடுகின்றான். அது போலவே இலங்கையும் பல் வேறு அரசியலமைப்புகளைக் கடந்து தற்போது ஆரம்பகாலத்தில் காணப்பட்ட குடும்ப வழி அரசியலே காணப்படுகின்றது.

இலங்கையும் மனிதன் போல இறுதி யில் எடுக்கும் ஆரம்ப நிலையை அடைந் துள்ளது. எனவே இலங்கையும் இறக்கப் போகின்றதா.....?

ஸ்ரீ கஜைசாந்த்
இமையாணன்
உடுப்பிட்டி.

### சாரதி அனுமதிப் பத்திரக் குழப்பம்

வாகன அனுமதிப்பத்திரம் (RL) சாரதி அனுமதிப்பத்திரம் (DL)ஆகிய இரண்டையும் எம்மவர்கள் வேறுபடுத்தி விளங்காமல் குழப்பமடைகின்றார்கள். இதனால் நானும் என் போன்ற சாரதிகளும் சுதந்திரமாக வாகனத்தை செலுத்த முடியாமல் கஸ்டப்படுகின்றோம்.

பெற்றோலிய உற்பத்திகளை உபயோகிப் பதற்கும் மத்திய அரசாலும் உள்ளூராட்சி மன்றங்களினாலும் பராமரிக்கப்படும் வீதிகளை உபயோகிப்பதற்குமாக அறவிடப்படும் மறை முக வரியே வாகன அனுமதிப்பத்திரம்(RL). அதற் காக வாகன அனுமதிப்பத்திரம் (RL) அறவிடப் படும் வாகனங்களை செலுத்துபவர்கள் சாரதி அனு மதிப்பத்திரம் வைத்திருக்கவேண்டும் என்பது அவசியமில்லை என்பதே என்னுடைய நிலைப் பாடாகும்.

ஏனெனில் மோட்டார் சைக்கிள்களில் எத்த னையோ வகைகள் உள்ளன மேற்கண்ட இனம் [illegible]னால் இயக்கப்படு [illegible] தேவைப்படின் சைக்கிள் போலவும் பிரயோகிக்கலாம். ஆதலால் தான் ''மோபெட்' வாகனத்தைச் சேர்ந்ததாக அழைக்கப் படுகின்றது. Single Stroke இயந்திரமாக இருப்பதனால் இதனை வலுக்கூடிய முறையில் பாவிக்க முடியாது இக்காரணங்களால் Light Motor Cycle (பாரம் குறைந்த மோட்டார் சைக் கிள்) என வரிப்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

இதனால் தான் முதியவர்களும் பெண்களும் விரும்புகின்றனர். சாரதி அனுமதிப்பத்திரம் (DL) தேவையில்லை என்பதனால் பதினெட்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளும் செலுத்த முற் படுகிறார்கள். அதனைக் காரணமாகவும் கொண்டு இவற்றுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் (DL) தேவையென வாதிடச் சிலர் முற்படுகிறார்கள். இது ஒரு நொண்டிச் சாட்டு என்பதே என்னுடைய வாதமாகும்.

ஆனால் இதனை போக்குவரத்துப் பொலி ஸாரின் கடமை என வகைப்படுத்தாமல் பொதுக் குற்றமாக வகைப்படுத்தி வீதிகளில் கடமையில் ஈடுபடும் பொலிஸார் அனைவரும் கண் காணித்து காற்றைத் திறந்து விட்டு திறப்புக் களை சுவீகரித்து தண்டனைகளை வழங்கி கட்டுப்படுத்துவதே சாலச் சிறந்தது என்பதே என்னுடைய வாதமாகும்: இதனை விடுத்து முதியவர்களையும் சாதாரண பெண்களையும் அசௌகரியப்படுத்துவது அழகல்ல.

-எஸ்.ரி.சண்முகநாதன்

### ஏன் எமக்கு மட்டும் இந்த வரி ?

சங்கானைச் சந்தையில் சுமார் 43 வியா பாரிகள் வரை மீன்வியாபாரம் செய்து வருகின் றோம். 01.01.2011 ஆம் ஆண்டில் இருந்து நாம் ஒரு மேல் கல்லிற்கு 30 ரூபா இட வாடகையை யும், கீழ் கல்லிற்கு 20 ரூபா இட வாடகையும் கொடுத்து வருகிறோம். மேலும் ஒரு கிலோ நல்ல மீனுக்கு 3 ரூபா வீதமும் தரம்குறைந்த மீனுக்கு 2 ரூபா வீதமும் கொடுத்து வருகிறோம். ஆனால் தற்போது மீனின் விலை வீழ்ச்சி யடைந்து காணப்படுகிறது. எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு 1 கிலோ மீனுக்கு 5 ரூபாவுக்கு மேல்வரி அறவிடப்போகின்றோம் என கூளுரைத் துள்ளார்கள். ஆனால் எம்மால் அந்த வரியைக் கட்ட முடியாது. யாழ்ப்பாணத்தில் கல்வியங் காடு மீன் சந்தை எவ்வளவோ பெரியது. அங்கே எவ்வளவு மீன் கொள்வனவு செய்து விற்றாலும் 100 ரூபா தான். அதற்கு மேல் அறவிடப்படு வதில்லை.

அதேபோல் கொக்குவில் சந்தையில் எவ் வளவு மீன்விற்றாலும் 70 ரூபா தான் வரி. அதற்கு மேல் இல்லை.

சங்காணைச் சந்தையில் மட்டும் 1 கிலோ விற்கு 5 ரூபா வீதம் நாம் வரிகட்ட வேண்டும். ஒரு கிலோவுக்கு 3 ரூபா வீதம் தான் எம்மால் கொடுக்க முடியும் அதற்கு மேல் எம்மால் கொடுக்க முடியாதுள்ளது. இந்த விடயத்தில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து ஆவன செய்வார்கள் என எதிர்பார்த்திருக்கி றோம்.

**இப்படிக்கு மீன் வியாபாரிகள். சம் பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா?**

### ஆசிரியர் இடமாற்றத்தில் ஏன் இந்தப் பாகுபாடு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர் களது நலனுக்காகவே உருவாக்கப்பட்டது. ஆனால் அதன்அண்மைக்காலச் செயற்பாடுகள் ஆசிரியர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்து வதாக் காணப்படுகின்றது.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டுக்கான ஆசிரி யர் இடமாற்றம் தொடர்பாக யாழ்ப்பரணத்தில் இருந்து வன்னிப் பகுதிக்கு இடமாற்றம்பெறும் ஆசிரியர்களது நலனிலேயே அக்கறை செலுத்து கின்றது.

அது தப்பானது அல்ல. ஆனால் யாழ்ப்பாணத் தைச் சொந்த மாவட்டமாகக் கொண்டு வன்னிப் பகுதியில் 6 வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் எங்களது இடமாற்றம் தொடர் பாக எந்த விதமான அக்கறையும் செலுத்துவ தாக அதன் செயற்பாடுகள் அமையவில்லை. அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாட லிலும் எமது இடமாற்றத்தை விரைவு படுத்து வதற்கான எந்தவித ஆக்கபூர்வமான கருத்துக் களையும் முன்வைக்கவில்லை. எமது இட மாற்றத்தை விரைவு படுத்துவதற்கு தாங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்காத பட்சத்தில் தங்களது சங்கத்தை யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் எனக் கருதி அதில் இருந்து விலகு வதற்குத் தீர்மானித்துள்ளோம்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேஷ வைபவங்களுக்கான ஒப்பனை (Party Make Up)

நாம் சில விசேஷ வைபவங்கள் அல்லது பட்டமளிப்பு விழா போன்றவற்றுக்கு Make up செய்யும்போது நாம் ஓரளவுக்காவது முகத்தைச் சிறிது கவர்ச்சிகரமாகவும் அதே நேரத்தில் சிறிது Natural ஆகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் முதல் நாம் ஒரு Make up செய்யமுன் கவனிக்க வேண்டியது எமது முகம் நல்ல Soft ஆக இருக்கின்றதா என்பதையே. வெயில், காற்று, தூசு என்பவற்றால் எமது சருமம் எப்பொழுதும் Hard ஆகத்தான் இருக்கும்.

இதே சருமத்தில் நாம் Make up செய்தால் Make up Foundation எமது சருமத்தில் ஒட்டாத தன்மையாக இருக்கும். அழகாகவும், எளிதாகவும் Make up போட முடியாது. இதனால் தான் மணப்பெண்களைக் கூட முதலே நாம் தயார் செய்கின்றோம்.

இதே போலவே விசேஷ வைபவங்களுக்கான ஒப்பனை செய்யும் முன் எப்போதும் ஒரு Facial செய்து முகத்தை நல்ல மென்மையாவும் சுத்தமாகவும் ஆக்கிக்கொள்வது அவசியம். நல்ல மென்மையாக இருக்கும் முகத்தில் Make up போட்டால் Make up நன்றாக முகத்தில் படியும். ஒரு சில மணி நேரத்திற்காவது முகம் நல்ல Clear ஆக இருக்கும்.

இதற்கு Make up போடும் முறையும் சரியானதாக இருக்க வேண்டும். இது சாதாரணமாக செய்யும் Make up என்பதால் முக்கியமாக மிகவும் Natural ஆக இருக்க வேண்டும். பார்ப்பதற்கு அழகானதாகவும் புதுமையானதாகவும் இருக்க வேண்டும்.

விசேஷ வைபவங்களுக்கான Make up போடும்போது நாம் Cream Fountions ஐத் தெரிவு செய்யலாம். இத்துடன் Trnsloosant Powder முக்கியமாகப் போடவேண்டும்.

இது இரண்டையும் போட்ட பின் நாம் முகத்தில் இதை Seal பண்ண வேண்டும். இல்லாவிடில் முகம் வியர்த்தவுடன் Make up எளிதாக அழியக்கூடும். Eye Shadow, Rouge இவையும் Light ஆக அதே நேரத்தில் முகத்துக்குப் பொருத்தமானமாக இருக்க வேண்டும். Eye Liner உம் எமக்கு வியர்க்கும் பொழுது அழியாமல் இருக்கக்கூடிய வகையானவையை போட வேண்டும். Lipstick போடும்போது மிக Natural ஆகவும் அழகாகவும் போட வேண்டும். இப்படி இந்த Party Make up ஐ அழகாகவும் எளிதாகவும் அதே நேரத்தில் Natural ஆகவும் செய்து கொள்ள முடியும்.



திருமதி யோகினி
சண்முகநாதன்
அழகுக்கலை நிபுணர்.

## வீட்டிலேயே இருக்கு அழகுக்கான வழி




பப்பாளி மரத்திலிருந்து எதை உடைத்தாலும் பால் வரும். அதைச் சிறிதளவு சேகரித்து அத்துடன் கொஞ்சம் தண்ணீரையும் சேர்க்கவும். இந்தக் கலவையில் சிறிதளவு சீரகத்தை ஊறப் போடவும். இதை கால் மணி நேரம் வைத்திருக்கவும். பின் முகப் பரு எங்கே உள்ளதோ அங்கே இக் கலவையை நன்றாகத் தடவிவிடவும். முகப்பருக்கள் மறைந்து, இருந்த சுவடு தெரியாமல் போய்விடும்.

அம்மை வடுக்களை அழிக்க சிறிதளவு கசகசா, சின்னதாக மஞ்சள் துண்டு ஒன்று, கறிவேப்பிலை சிறிதளவு எடுத்து இம்மூன்றையும் மைபதத்திற்கு அரைக்கவும். இந்தக் கலவையை முகத்தில் எங்கே அம்மை வடுக்கள் காணப்படுகின்றனவோ அங்கே நன்றாகத் தடவுங்கள். 15-20 நிமிடங்கள் உலற விடுங்கள்.

பின்னர் பயத்த மாவினால் முகத்தைக் கழுவி விடுங்கள். இப்படியே 3 நாள்களுக்கு ஒரு முறை செய்யுங்கள். அம்மை வடுக்கள் நீங்கி முகம் மினுமினுக் கும்.

தயிரில் இருக்கும் பாக்டீரியா, தோலை மிருதுவாகவும், பளபளப்பாகவும் மெருகு ஏற்ற அருமையான ஒரு மருந் தாகும். ஆரஞ்சுப் பழத்துடனோ அல்லது எலுமிச்சைச் சாறுடனோ தயிரைக் கலந்து முகத்தில் தடவினால், முகம், நாளடைவில் பருக்களற்றுப் பளபளப்பாகும்.



## உடம்பு மெலிவதற்கு சிற்சில ஆலோசனைகள்

தற்காலத்தில் இளம் பெண்கள் மெல்லிடை உடையவர்களாக இருப்பதையே நவநாகரீகமாக நினைக்கின்றார்கள். அவர்களுக்காக இதோ சில ஆலோசனைகள்:

★கல்யாண முருங்கை இலை, பூ, 2 பிடியளவு எடுத்து 4 ரம்ளர், நீரில் காச்சி பனங்கற்கண்டு சேர்த்து அரை ரம்ளர் ஆக வற்றியதும் காலையில் தினமும் குடித்துவர படிப்படியாக உடம்பு மெலிவடைந்து செல்லும்.

★ நல்ல மிளகுடன் சிறிது சீரகம் சேர்த்து தண்ணீரில் போட்டு நன்றாக அவித்து நீரை வடிகட்டி தினமும் காலையில் பருகுதல் வேண்டும்.

★ ஒரு அவுன்ஸ் வெங்காயச் சாற்றில் 2 மேசைக்கரண்டி தேன் கலந்து தினமும் சாப்பிடுதல் வேண்டும்.

★சேற்றுக் கற்றாளையை எடுத்து அதன் தோலைச்சீவி உள்ளே இருக்கும் சேற்றுப் பகுதி 100கிராம் எடுத்து தண்ணீரால் கழுவி சக்கரை சேர்த்து 3 வாரம் சாப்பிடுதல் வேண்டும்.

★ அகத்தி, முருங்கை, கோவா, முள்ளங்கி, நீத்துக்காய் போன்றவற்றை உணவில் ஒவ்வொருநாளும் மதிய உணவில் மாறி மாறி உட்கொள்ளுதல் வேண்டும்.

★பிரண்டை உப்பு அல்லது பிரண்டை புஸ்பம் (மருந்துக் கடைகளில் கிடைக்கும்) இவற்றில் ஏதாவது ஒன்றை ஒரு நாள் காலையில் அரிசி எடை நெய்யுடன் மறுநாள் காலை இளநீருடன் இப்படி மாறி மாறி உண்டுவருதல் வேண்டும்.

★ஒரு ரம்ளர் மோருடன் ஒரு கரட்டைபோட்டு கிறைண்டரில் அடித்து ஜூஸ் மாதிரி பருகி வந்தால் ஒரு மாதத்தில் உடல் நலிவடையும்.

தொகுப்பு:
யசோதரன் அபிநயா.

## பாதப் பராமரிப்பு



நம் உடலின் முழு எடையையும் தாங்குவது பாதங்கள் ஆகும். பாதங்களுக்கு நிறைய பராமரிப் புத் தேவை. பாதங்களை கவனியாது விட்டால் குதிக் கால்களில் வெடிப்ப, பாதங்கள் கறுத்து களையிழந்து காணப்படும். பாதங்களில் Pressure Points கள் உள் ளன. இவைகளில் முறையாக மசாச் செய்தால் ரத்த ஓட்டம் சீரடையும். பராமரிப்பு எனும் போது தொடைகளில் இருந்தே தொடங்கி விடுதல் வேண்டும். கால்களில் உள்ள ரோமங்களில் Waxing மூலம் அகற்ற வேண்டும். கால் முட்டிகளைச் சுற்றி உள்ள பகுதிகள் கருமை படர்ந்து காணப்படும். இதற்கு பால் ஆடையுடன் மஞ்சள்பொடி சேர்த்து சில துளிகள் தேனும் கலந்து நன்கு குழைத்து கருமை அதிகமாக படர்ந்துள்ள இடங்களில் நன்றாகத் தடவி 15 நிமிடங்கள் அப்படியே விட்டு வெதுவெதுப்பான நீரில் கழுவிவிட வேண்டும். இப்படிச் செய்தால் கருமை மறையும்.

★பாதங்களைச் சுத்தமாகவும் ஈரலிப்பாகவும் வைத்திருக்க வேண்டும். விரலின் இடுக்குகள் உலர்ந்திருத்தல் வேண்டும்.

★ வெளியில் சென்று வீட்டுக்குள் வந்தவுடன் பாதங்களைச் சுத்தமாகக் கழுவவும் வாரம் இரு முறையாவது விளக்கெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது Moisture cream போட்டுத் தடவவும்.

★நடப்பதற்கு இசைவான காலணிகளை உபயோகிக்கவும். தூர இடங்களுக்கு நடப்பதென்றால் கீல் இல்லாத காலணிகள் உகந்தது.

★அதிக வெயில் மாதங்களில் செருப்பு அல்லது சன்ரீல் அணிவது நல்லது.

★ நகத்தை [illegible] இருக்கையைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

★விற்றமின் சத்துக்கள் குறைவது போன்ற காரணங்களினாலும் பாதங்கள் வெடிக்கும்.

★பாதங்கள் மிருதுவாக இருக்க கடலைமா, எலுமிச்சைச்சாறு, பாலாடை, மஞ்சள்பொடி என்பவற்றைச் சேர்ந்துக் குளிர் சாதனப் பெட்டியில் வைத்தெடுத்து கால்களில் தடவவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org